# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32 கதிர் 311 புரட்டாதி 17ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 03 ஒக்ரோபர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

விலை: 20

பக்கங்கள்: 28



அமெரிக்காவில் பயங்கரம்

## சில நொடிப்பொழுதில் 50 பேர் சுட்டுக்கொலை

### 400 பேர் படுகாயம்

லொஸ் வெகாஸ், ஒக். 3

அமெரிக்காவின் லொஸ் வெகாஸ் நகரில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியொன்றில் ஆயுததாரியொருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 50 பேர் உயிரிழந்தனர். சூடு மற்றும் பதற்றத்தால் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 400க்கும் » 25

## முல்லையில் படைச் சிப்பாய் திடீர் இறப்பு

முல்லைத்தீவு, ஒக். 3

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் சாலையில் அமைந்துள்ள 19ஆவது கெமுனு வோச் படைப்பிரிவைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த முகாமில் பணியாற்றும் ரத்நாயக்க முதியன்சலாகே இஸான் சதுரங்க (வயது - 21) என்ற சிப்பாயே உயிரிழந்தார். » 25

நாடாளுமன்றுக்குக் கொண்டுவரப்பட்டால்

# புதிய அரசமைப்பை தீயிட்டு எரிப்போம்

## விமல் வீரவன்ச எச்சரிக்கை

கொழும்பு, ஒக்ரோபர் 3

நாட்டைப் பிளவுபடுத்துவதுதான் புதிய அரசமைப்பு. நாடாளுமன்றத்துக்கு புதிய அரசமைப்புக் கொண்டு வரப்பட்டால் அதனை நாம் தீ வைத்து எரிப்போம். அதனை ஒருபோதும் நிறைவேற்ற விடமாட்டோம்.

இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

2000ஆம் ஆண்டு சந்திரிகா அம்மையாரின் ஆட்சிக் காலத்தில் புதிய அரசமைப்பு யோசனை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. அப்போதைய எதிர்கட்சியாகச் செயற்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியினர் அந்த அரசமைப்பு யோசனையை தீ வைத்து எரித்திருந்தனர். இதேபாணியில் செயற்படப் போவதாகவே விமல் வீரவன்ச எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாதுக்கை பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு விமல் வீரவன்ச உரையாற்றினார். அந்த உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பை உருவாக்கி அதன் மூலம் தீர்வைப் பெற்றுக் கொள்வதாக அரசு கதைகளைக் கூறி வருகின்றது. அதிகாரப் பகிர்வை பெற்றுக்கொடுப்பதாகவும் அது அதியுச்சமாக அமையும் எனவும் தலைமை அமைச்சர் தொடர்ச்சியாகக் கருத்துக்களைக் கூறி வருகின்றார். நிறைவேற்று அரச தலைவர் முறைமையை நீக்கி மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்கவே திட்டம் தீட்டுகின்றனர்.

புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வந்தால் மாகாண சபைகள் தன்னிச்சையாகச் செயற்பட ஆரம்பித்தால் கொழும்பு அரசால், மாகாண சபைகளைக் கட்டுப்படுத்தவே முடியாது போய்விடும். அவ்வாறான அதியுச்ச அதிகாரங்களை இந்த அரசு பெற்றுக்கொடுக்க தீர்மானித்துள்ளது. மேலும் தனது திட்டமே இப்போது புதிய அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்று சந்திரிகா அம்மையார் கூறுகின்றார். அன்று சந்திரிகா அம்மையார் கொண்டுவந்த அரசமைப்புத் திட்டத்தை ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சி நெருப்பு வைத்து எரித்தது.

அவர்கள் இருவரும் இணைந்து மீண்டும் நாட்டை வீணடிக்கும் அரசமைப்பைக் கொண்டுவர முயற்சிக்கின்றனர். நாட்டைப் பிரிக்கும் அரசமைப்பு நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படுமாயின் அதனைத்தீவைத்துஎரிப்போம்-என்றார். (வ-5,31)

## சரத் என் சில்வாவின் மனுவுக்கு எதிராக இடையீட்டு மனு

கொழும்பு, ஒக். 3

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மாகாண சபைக்கான தேர்தல் திருத்தச் சட்டத்துக்கு எதிராக, முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என். சில்வா உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவுக்கு எதிராக மற்றொரு மனு முன்வைக்கப்பட்டுள்ளது. » 25

## புதுக்குடியிருப்பு விபத்தில் இளைஞன் பரிதாபச் சாவு



முல்லைத்தீவு, ஒக். 3

புதுக்குடியிருப்பு பரந்தன் சாலையில் இடம்பெற்ற பிக்கப் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பு எரிபொருள் நிரப்பு நிலையத்தை அண்மித்து நேற்று முற்பகல் இந்த விபத்து இடம்பெற்றது. புதுக்குடியிருப்பு கைவேலி முதலாம் வட்டாரத் » 25

## மானிப்பாயில் 'குடு'

### அதனை பதுக்கியதாக 5 பேர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஒக்.3

மானிப்பாய் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து 9 கிராம் 'குடு' போதைப் பொருள் நேற்று மீட்கப்பட்டது. அதனை மறைத்து வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் 5 பேர் கைது செய்யப்பட்டனர் என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

"மானிப்பாய் பொலிஸ் நிலை » 25

## அரசியல் கைதிகள் மூவரின் உணவு ஒறுப்பு தொடர்கிறது

### ஆதரவாக தடுப்பிலுள்ள அனைவரும் நேற்றுப் பங்கெடுப்பு

யாழ்ப்பாணம், ஒக். 3

அநுராதபுரம் சிறைச்சாலையின் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் நேற்று உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் சிறைச்சாலை மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற மூன்று தமிழ் அர » 25



உவங்கள் ஒரு போதும் மாற மாட்டங்கள். 'அந்த மனுசன்' சரியாத்தான் சொல்லியிருக்கு

### தாஜுதீன் படுகொலை:

## சட்ட மருத்துவர் சமரசேகரவை கைது செய்ய அனுமதி கோரல்

கொழும்பு, ஒக். 3

வசீம் தாஜுதீன் படுகொலையில் மூன்றாவது சந்தேகநபராக முன்னாள் சட்ட மருத்துவ அதிகாரி ஆனந்த சமரசேகரவை கைது செய்ய உத்தரவு வழங்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று நீதிமன்றிடம் கோரினர்.

2012ஆம் ஆண்டு » 25

## பெற்றோரை மதிக்காத பிள்ளைகளுக்குச் சிறை

### எதிர்காலத்தில் ஏற்படலாம் என்கிறார் அமைச்சர் எஸ்.பி.

கொழும்பு, ஒக். 3

பெற்றோருக்குக் கீழ்படியாத பிள்ளைகள் எதிர்காலத்தில் சிறைத் தண்டனை அனுபவிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகலாம் என்று சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமூக மேம்பாட்டுக்கு பிள்ளைகளது பங்களிப்பு அபரிமிதமானது. சிறந்த பண்பாடு மற்றும் ஒழுக்க விழுமியங்கள் உடையவர்களாக அவர்கள் திகழ » 25

## தமிழரசு – ரெலோ பேச்சு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 3

உள்ளூராட்சித் தேர்தலுக்கான ஆசனப் பங்கீடு தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கும், ரெலோவுக்கும் இடையில் இன்று நடைபெற இருந்த சந் » 25

## ஒழுங்கமைத்தபடி நேற்றுச் சிறப்புற நடந்தது இராமநாதபுரம் மகா வித்தியாலய வைரவிழா



கிளிநொச்சி, ஒக். 3

கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தின் வைரவிழாவை ஒத்திவைக்குமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் பணிப்புரை விடுத்திருந்த போதும், திட்டமிட்டவாறு தலைமை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனை அழைத்து பாடசாலைச் சமூகத்தினர் நிகழ்வை நேற்று நடத்தியுள்ளனர். பாடசா » 25

### துன்னாலை வன்செயல்:

## 36 குடும்பத் தலைவர்களுக்கு நேற்றுப் பிணை கிடைத்தது

### 11 பேரின் கட்டுக்காவல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் ஒருவர் கொல்லப்பட்ட பின்னர் துன்னாலையில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையைத் தொடர்ந்து பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 47 பேரில் 36 பேர் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த வழக்கு பருத்தித்துறை நீதிமன்றில் மேலதிக நீதிவான் பி. சிவகுமார் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

கட்டுக்காவலில் வைக்கப்பட்டி » 25

### பிணை முறி மோசடி விவகாரம்:

## அலோசியஸ் உள்ளிட்ட நால்வர் நாட்டைவிட்டு வெளியேறத் தடா

கொழும்பு, ஒக். 3

மத்திய வங்கியின் பிணை முறி கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையுடன் தொடர்புடைய பேப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் அர்ஜுன் அலோசியஸ் பணிப்பாளர்கள் நால்வருக்கு நாட்டைவிட்டு வெளியேற நீதிமன்றால் தடை விதிக்கப்பட்டது.

மத்திய வங்கி பிணை » 25

## மருத்துவ சபையின் புதிய தலைவராக பேரா. கொல்வின் குணரத்ன

கொழும்பு, ஒக். 3

இலங்கை மருத்துவச் சபையின் புதிய தலைவராக பேராசிரியர் கொல்வின் குணரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

மருத்துவ சபையின் தலைவராக பதவி வகித்த காலோ பொன்சேகாவின் பதவிக் காலம் நிறைவ » 25






மகாத்மா காந்தியின் 148ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை நகரத்தில் உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு காந்திய இயக்கத்தால் மாலை அணிவிக்கப் பட்டது. (ற10,173)

## அனைத்து மாணவர்களுக்கான காப்புறுதித் திட்டம் நடைமுறை

கொழும்பு, ஒக். 3

கல்வி அமைச்சு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து மாணவர்களை உள்ளடக்கிய "சுரக்ஷா" என்ற காப்புறுதித் திட்டம் நேற்று நடைமுறைப்படுத்தப்பட்டது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரிமாளிகையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இலங்கையின் சகல பாடசாலை மாணவர்களையும் உள்ளடக்கும் வகையில் "சுரக்ஷா" மாணவர்களுக்கான காப்புறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். சகல அரச பாடசாலைகளில் கல்வி பெறும் தனியார் பாடசாலைகள் பிரிவேனாக்கள் உட்பட பன்னாட்டு பாடசாலைகள் பதிவு செய்யபட்ட கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் தரம் 1 முதல் 13 வரையிலான வகுப்புகளுடைய பாடசாலை மாணவர்களும் சிறப்புக் கல்வி பயிலும் 5 வயதிலிருந்து 19 வயது வரையிலான சகல மாணவர்களும் இதில் பயன் பெறுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆரம்ப நிகழ்வில் சபாநாயகர் கரு ஜயசூரிய, கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன், கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சி, கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவிதாதனகே, அமைச்சர்களான ரவூப்ஹக்கீம், கபீர்ஹாசிம், தயா கமகே, சரத் பொன்சேகா, ருவான் விஜேவர்தன உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கல்வி அமைச்சின் அதிகாரிகள் உட்பட பாடசாலை மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-10)

## லிட்டில் ஹாட் திட்டத்துக்கு நேற்று அடிக்கல

கொழும்பு,ஒக்.3

ரிஜ்வே ஆர்யா சிறுவர் மருத்துவமனையில் அமைக்கப்படவுள்ள, இருதய சிகிச்சை மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடத்துக்கான அடிக்கல் நேற்று நடப்பட்டது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அடிக் கல்லை நட்டார்.

10 மாடிகளைக் கொண்ட இந்தக் கட்டடத்தை அமைக்க 2 பில்லியன் ரூபா தேவை என மதிப்பிடப்பட்டது. அந்த நிதியை சேகரிக்க இலங்கை சிறுவர் வைத்திய நிபுணர்கள் சங்கம், ரிஜ்வே ஆர்யா சிறுவர் வைத்தியசாலை மற்றும் மனுஷத் தெரண ஆகியன இணைந்து லிட்டில் ஹாட் என்ற வேலைத் திட்டத்தை ஆரம்பித்தன. பொதுமக்களும் பெரும் ஆதரவளித்தனர்.

அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் ராஜித சேனாரத்ன, இந்தக் கட்டடத்தின் அமைப்புப் பணிகள் துரிதமாக நடைபெறும் எனக் கூறியுள்ளார். (ற-ரி4)

## ரோகிங்ய அகதிகளுக்கு மிரட்டல்
# தயாரத்ன தேரர் நேற்றுக் கைது

கொழும்பு, ஒக்.3

ரோகிங்ய அகதிகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் நேற்று குற்றப்புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்டார்.

கல்கிசை நீதிமன்றில் அவர் முற்படுத்தப்பட்ட போது எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கல்கிசையில் வீடொன்றில் தங்க வைக்கப்பட்டிருந்த ரோகிங்ய அகதிகள் உடனடியாக நாட்டிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தி கடந்த 26ஆம் திகதி அந்த வீட்டை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் குற்றச்சாட்டுக்குஉள்ளான சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் மற்றும் அரம்பேபொல ரத்னசார தேரர் ஆகியோர் வாக்குமூலம் பெற்றுக் கொள்வதற்காக கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுக்கு நேற்று அழைக்கப்பட்டனர்.

குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு நேற்றுக் காலை 9.45 மணியளவில் வாக்குமூலம் வழங்கச் சென்ற அக்மீமன தயாரத்ன தேரரிடம், கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸார் பல மணிநேரமாக விசாரணைகளை முன்னெடுத்தனர். இறுதியில் அவரைக் கைது செய்தனர்.

அதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் சரணடைந்த நுகேகொட பகுதியைச் சேர்ந்த ரவிந்த வர்ணஜித் பெரேரா என்ற 40 வயதுடைய நபரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ற)



## ஹிதாயத் நகர் சீரமைப்பு பணி ஆரம்பம்

மட்டக்களப்பு, ஒக். 3

ஏறாவூர், ஹிதாயத் நகர் வீதி 14 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சீரமைப்புச் செய்யப்படவுள்ளது. அதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.எஸ்.சுபைர் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கலந்து கொண்டு வீதி அபிவிருத்திப் பணியை அடிக்கல் நட்டு ஆரம்பித்தார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் "ஆயிரம் கிலோ மீற்றர் வீதி புனரமைப்பு" திட்டத்தின் கீழ் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து இந்த வீதி சீரமைக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10)



## 10 ஆயிரம் பனம் விதைகள் மட்டக்களப்பில் நடுகை

மட்டக்களப்பு, ஒக். 3

மட்டக்களப்பு, மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தாந்தாமலையில் 10 ஆயிரம் பனம் விதைகள் நேற்று நடப்பட்டன. தாந்தாமலை கிராமசேவையாளர் பிரிவில் வசிக்கும் 270பேர் இணைந்து பனம் விதைகளை நட்டனர்.

தாந்தாமலை கிராமசேவையாளர் பிரிவில் வசிக்கும் மக்கள் அடிக்கடி யானையால் பாதிக்கப்படுகின்றனர். யானையின் தாக்குதலில் இருந்து தப்பித்துக்கொள்ளுவதற்காகவும், கிராமங்களுக்குள் யானைத் புகுவதை தடுக்கும் நோக்கிலும் யானை வேலியின் அருகாமையில் நெருக்கமாக பனம்விதைகள் நடப்பட்டன.

கிராமசேவை உத்தியோகத்தர் ய.சயந்தனின் ஏற்பாட்டில் நடைபெற்ற, இந்த நிகழ்வில் வனவள, வனஜீவராசிகள், திணைக்கள உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

யானை கிராமத்துக்குள் நுழைவதைத் தடுக்கும் நோக்கில் இவ்வாறான முயற்சி எடுக்கப்படுவது இதுவே முதற் தடவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-10,46)

## சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறார்கள் கௌரவிப்பு

கிளிநொச்சி, ஒக்.3

பன்னாட்டு சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறார்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. கிளிநொச்சி, ஊற்றுபுலத்தில் நடந்த நிகழ்வில் 150க்கும் மேற்பட்ட சிறுவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

ஊற்றுப்புலம் கிராமத்தில் உள்ள இரு முன்பள்ளிகளின் சிறார்கள் மற்றும் ஊற்றுப்புலம் பாடசாலையில் கற்கும் தரம் 4 வரையான மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். கதிரவன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.(ற-ரி2,35)



# பணி செய்ய அஞ்சும் அரச பணியாளர்கள்

## யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 3
அரச உத்தியோகத்தர்கள் பலர் தமது பணிகளைச் செய்ய அஞ்சுகின்றனர் போன்று தெரிகின்றது. அவ்வாறு பயந்தால் பணிக்கு வரக்கூடாது. வந்தால் மக்களுக்குப் பணியாற்றியே தீர வேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டின் சிவில் நிலைமை தொடர்பான கூட்டம் நேற்று யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

சட்டத்தைப் பேணிக் காக்க செயற்பட்டே ஆகவேண்டும். மாறாக சொந்த நலன் தொடர்பில் பயம் கொள்ளக்கூடாது. இந்தப் பயம் பல திணைக்களங்களிலும் உள்ளது.

சில உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள் சபைக்கு வருமானம் எடுத்தால்போதும் என செயற்படக் கூடாது. சபையின் அதிகாரத்துக்கு உட்பட்டு மக்களுக்கான உச்சபட்ச சேவையையும் வழங்குவதைக் கவனத்திற்கொள்ள வேண்டும். புகைத்தல் , மதுபானம் போன்ற பொருள்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர தெல்லிப்பழை பிரதேச செயலகத்தால் முடியும் என்றால் ஏன் ஏனைய இடங்களில் முடியவில்லை. அதை அதிகாரிகள் உடன் கவனத்திற்கொள்ள வேண்டும்.

தடை செய்யப்பட்ட பிரதேசங்கள், அனுமதியற்ற இடங்களில் சிறுவர்களுக்கு மது விற்பனை தற்போதும் தொடர்கின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. சிறுவர்களுக்கு வழிகாட்ட வேண்டிய சில பெரியவர்களோ தமக்கு கால் போத்தலுக்கு பணம் கொடுத்தால் சிறுவர்களுக்கு மதுபானத்தை வாங்கிக் கொடுக்கின்றனர்.

தனியார் கல்வி நிலையத்துக்குச் செல்லும் மாணவர்கள் காலை போய் மாலை வீடு திரும்புகின்றனர் என்று முறையிடப்படுகின்றது. அங்கே போதிய கழிப்பறை வசதிகள் கிடையாது. நீர் வசதி கிடையாது எனவும் முறையிடப்படுகின்றது. இந்த வசதிகள் இல்லாத தனியார் கல்வி நிலையங்களை ஏன் உள்ளூராட்சி மன்றங்கள் இயங்க விடுகின்றன?. இவை தொடர்பாகவும் அதிக கவனம் செலுத்த வேண்டும் - என்றார்.

(ந-10,101)

# தெல்லிப்பழையில் புகைத்தல் 90 சதவீதமளவு கட்டுப்பாட்டில்

## சுகாதார மருத்துவ அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 3
யாழ்ப்பாணக் குடாநாட்டின் சகல சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைப் பிரிவுகளிலும் புகைத்தல் பாவனையுள்ள போதும் தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவின் கீழ் மட்டும் 90வீதம் கட்டுப்படுத்தியுள்ளோம் என்று சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டின் சிவில் நிலைமை தொடர்பான கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் மட்டும் இது தொடர்பில் 36 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

எமது கடும் முயற்சியைப் பாராட்டி அரச தலைவரே நேரில் அழைத்து விருதும் வழங்கிக் கௌரவித்த போதும் அங்கு இடம்பெறும் மதுப் பாவனை தொடர்பான பிரச்சினைகளில் மதுவரித் திணைக்களம் ஒத்துழைப்பது கிடையாது. எமது இந்த நடவடிக்கைக்கு பிரதேச சபை பூரண ஒத்துழைப்பு நல்குகின்றது.

புகைத்தல் விதிமுறை மீறி விற்கும் விற்பனை நிலையத்தின் விற்பனை அனுமதிப் பத்திரத்தை நீக்கம் செய்யும் அதிகாரமே உள்ளூராட்சி மன்றங்களுக்கு உண்டு.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நகரப் பகுதியிலேயே அதிக புகைத்தல் பாவனையுள்ளது. உணவகங்களில் இதன் பாவனை பெருகியுள்ளது. அனைத்துத் தரப்பும் இது தொடர்பில் கரிசனை செலுத்தினால் மட்டுமே அதைக் கட்டுப்படுத்த முடியும் - என்றார்.

(ந-10,101)

# வீதிகளை சீரமைத்துத் தருமாறு வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஒக்.3
பிரதான வீதிகளை சீரமைத்துத் தரக் கோரி நேற்று வவுனியா, பூவரசன்குளத்தில் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. பொதுமக்களும், பொது அமைப்புகளும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

பூவரசன்குளம் பகுதியிலிருந்து வேலன்குளம், சின்னடம்பன், கந்தன்குளம், செட்டிகுளம், கோயில்புளியங்குளம், சின்னத்தம்பனை போன்ற பிரதேசங்களுக்குச் செல்லும் பிரதான வீதிகளைப் சீரமைத்துத் தரக் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.



ஆர்ப்பாட்டம் காரணமாக வீதிச் பொக்குவரத்துத் தடைப்பட்டது. பூவரசன்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் பொதுமக்களுடன் கலந்துரையாடி போக்குவரத்தைச் சீர் செய்தனர்.

“2015ஆம் ஆண்டு வீதியைச் சீரமைத்துத் தருமாறு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. வீதிகள் சீரமைத்துத் தரப்படும் என்று எமக்கு வாக்குறுதி வழங்கப்பட்டது. ஆனால் அவை சீரமைக்கப்படவில்லை." என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை வவுனியா பிரதேச செயலாளர் திரு. கா. உதயராசா, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. காதர் மஸ்தான், வடமாகாண சபை உறுப்பினர் ப. சத்தியலிங்கம் வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை செயலாளர் திருமதி சுகந்தி கிஷோர் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடினர். அவர்களிடம் மக்கள் தமது கோரிக்கைகளைத் தெரிவித்தனர்.

2019ஆம் ஆண்டு அந்த வீதிகள் காப்பெற் வீதிகளாக மாற்றப்படும் என்றும், தற்போது கிரவல் இடப்பட்டு போக்குவரத்துக்கு ஏற்றவாறு மாற்றப்படும் என்றும் வாக்குறுதி வழங்கப்பட்டதை அடுத்து மக்கள் ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டனர். (ந-10,422)

### இளம் பெண்ணின் சடலம் மீட்பு

பதுளை, ஒக். 3
பதுளை பெருந்தோட்டப் பகுதியில் இளம் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று நடந்தது.

பெருந்தோட்டத்தைச் சேர்ந்த 22 வயது நிரம்பிய இளம் பெண் சடலமாக மீட்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 23ஆம் திகதி இந்த இளம் பெண்ணுக்கு மாத்தன்னை இந்துக் கலாசார மண்டபத்தில் திருமணம் செய்வதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் நிறைவுற்றி ருந்தன. அதில் ஏற்பட்ட சிக்கல்களைத் தொடர்ந்தே இளம் பெண் தவறான முடிவெ டுத்து உயிரை மாய்த்துள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்தது என்று கூறப்பட்டது. ஹாலிஎலைப் பொலிஸார் இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-10, 41)

### விபத்தில் ஒருவர் சாவு

பதுளை, ஒக். 3
தனியார் துறை பேருந்துடன் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் பதுளை கந்தகெதரை பிரதான வீதியில் அலுகொல்லை என்ற இடத்தில் நேற்று நடந்தது.

விபத்துக்குள்ளான தனியார் பேருந்து சாரதி கைது செய்யப்பட்டார். உயிரிழந்தவர் இனங்காணப்பட வில்லை என்று தெரிவிக்கப்பட்டது. சடலம் பதுளை அரசினர் மருத்துவமனை உடற்கூற்று அறையில் வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ந-10,41)

# 13 வருட உத்தரவாத கல்வி வழங்கும் திட்டம் ஆரம்பம்

கொழும்பு, ஒக.3
அனைத்து மாணவர்களுக்கும் 13 வருட உத்தரவாத கல்வியை வழங்கும் புதிய திட்டம் நாடு முழுவதிலுமுள்ள 42 தேசியப் பாடசாலைகளில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்படவுள்ள இந்த முயற்சியின் விளக்கமளிப்பு நேற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசியப் பாடசாலைகளில் நடைபெற்றன.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் குறைந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களுக்காக 27 புதிய பாடநெறிகள் இந்தத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்படவுள்ளன. கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிப் போதுமான புள்ளிகளைப் பெறாத 4 ஆயிரத்து 419 மாணவர்கள் இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

உளவியல் மற்றும் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு, விளையாட்டு, உடற்கல்வி மற்றும் பட வடிவமைப்பு, ஃபேஷன் வடிவமைப்பு, கட்டுமான தொழில்நுட்ப ஆய்வு, நீர் வளங்கள் தொழில்நுட்ப ஆய்வு போன்ற விடயங்கள் இந்தத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. தமது விருப்பம் மற்றும் பிரதேசத்துக்குத் தேவையான தொழில்துறை என்பனவற்றின் அடிப்படையில் மாணவர்கள் தமக்குரிய பாடங்களைத் தெரிவு செய்வதற்கான சிறப்பு ஏற்பாடுகள் புதிய கல்வித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

புதிய அரசால் இலங்கையின் கல்விக் கொள்கையில் மேற்கொள்ளப்பட்ட 3 பெரும் மாற்றங்களில் அனைத்து மாணவர்களுக்கும் 13 வருட தொடர் கல்வியை கிடைக்கப் பெறச் செய்தல் என்ற இந்தத் திட்டத்துக்கு பிரதான இடம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(ந-ரி4)



தென்மராட்சி பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான, சிறார்களுக்கான போசாக்கை மேம்படுத்தல் ' எனும் கருத்தரங்கு பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. செயலமர்வில் கொடிகாமம் பிரதேச பொது சுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் வளவாளராகக் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

# மோ.சைக்கிள்- கார் விபத்து காரை விட்டு சாரதி மாயம்

யாழ்ப்பாணம், ஒக்.3
யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் நேற்று மோட்டார் சைக்கிளும், காரும் விபத்துக்குள்ளாகின. காரின் சாரதி காரைக் கைவிட்டு அந்தப் பகுதியில் இருந்து தப்பிச் சென்றார் என்று சம்பவ இடத்தில் இருந்தவர்கள் தெரிவித்தனர்.

ஸ்ரான்லி வீதியில் வெலிங்டன் சந்தியில் நேர் வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது, குறுக்கு வீதியால் வந்த கார் மோதியது என்று தெரிவிக்கப்பட்டது. மோட்டார்சைக்கிளில் பயணித்தவர் பாய்ந்து தப்பினார். மோட்டார் சைக்கிள் சேதமடைந்தது.

காரைச் செலுத்தி வந்தவர் அந்த இடத்தில் காரைக் கைவிட்டு அகன்றுவிட்டார் என்று சம்பவ இடத்தில் இருந்தவர்கள் தெரிவித்தனர். மோட்டார் சைக்கிளுக்கு காப்புறுதி செய்யப்பட்டிருந்ததால் காப்புறுதி நிறுவனத்துக்கும் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது. ஒரு மணி நேரத்துக்கு அதிகமாக பொலிஸாரும், காப்புறுதி நிறுவனத்தினரும் காத்திருந்தபோதும் காரின் உரிமையாளர் வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. பிறிதொருவர் காரின் சாவியைக் கொண்டு வந்து அங்கிருந்தவர்களுடன் கலந்துரையாடியதை அடுத்து அனைவரும் அகன்றனர் என்று சம்பவ இடத்தில் இருந்தவர்கள் தெரிவித்தனர். (ந-10,101)



# குற்றங்களில் ஈடுபடுவோரை பொலிஸாருக்குத் தெரியும்

## நல்லூர் பிரதேச சபைச் செயலர் சுட்டிக்காட்டு


யாழ்ப்பாணம், ஒக்.
யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் கஞ்சா விற்பவர்களையும், வாளுடன் நடமாடுபவர்களையும் பொலிஸாருக்கு நன்கு தெரியும். அவர்களே அதைக் கட்டுப்படுத்தலாம். அதை விடுத்து 50 குழுக்கள் அமைத்தாலும் அவற்றைக் கட்டுப்படுத்த முடியாது.
இவ்வாறு நல்லூர் பிரதேச சபைச் செயலர் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தின் சிவில் நிலமை தொடர்பான கூட்டம் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாண மாவட்டத்தில் பரவலாக குற்றச் செயல்கள் நடக்கின்றன. நல்லூர் பகுதியிலும் கஞ்சா விற்பனை, மண் கடத்தல், சட்டவிரோத மதுப் பாவனை, வாள்வெட்டு என்பன இடம்பெறுகின்றன. அவற்றைச் செய்பவர்களையும், வாளுடன் நடமாடுபவர்களையும் பொலிஸாருக்கு நன்கு தெரியும். அவர்களே இவற்றைக் கட்டுப்படுத்தலாம்.
நல்லூர், அரியாலைப் பகுதியில் நடக்கும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த அங்கு ஓர் பொலிஸ் காவரண் அமைக்க வேண்டும் என்று நீண்டகாலம் கோரப்பட்டது. தற்போது அங்கு ஒரு காவலரண் அமைக்கப்பட்டது. ஆனால் அரியாலைப் பகுதியில் நடக்கும் குற்றச் செயல் தொடர்பில் அங்கு சென்று உடன் தகவல் வழங்கினால் பொலிஸ் நிலையம் சென்று முறையிடுமாறு கூறப்படுகின்றது.
இரவு நேரத்தில் மணல் கடத்தல், சமூக விரோதச் செயல் இடம்பெறும்போது பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கினால் அவர்கள் மணல் ஏற்றிய வாகனத்தின் இலக்கம், சாரதியின் பெயர், வீட்டு முகவரி என அனைத்தையும் தகவல் வழங்குபவரிடமே கோருகின்றனர். அவ்வாறிருந்தால் யார் தகவல் வழங்க முன்வருவார்கள்? என்றார். (ந-101)

## வாகனம் மோதி இருவர் காயம்

முல்லைத்தீவு, ஒக்.3
புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் நடந்த விபத்தில் இரு இளைஞர்கள் காயமடைந்தனர்.
உடையார்கட்டு, மூங்கிலாறு பாலத்துக்கு அருகில் சைக்கிள் ஒன்றில் பயணித்த இருவர் மீது வாகனம் மோதி விபத்து நடந்துள்ளது. மோதிய வாகனம் அங்கிருந்து தப்பிச் சென்றது என்று தெரிவிக்கப்பட்டது.
காயமடைந்த இருவரும் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக மாஞ்சோலை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-ரி3)

## விபத்தில் பெண் காயம்

புதுக்குடியிருப்பு, ஒக்.3
புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியில் நேற்றுக் காலை நடந்த விபத்தில் பெண் ஒருவர் காயமடைந்தார். படையினரின் பேருந்து மோதி இந்த விபத்து நடந்தது என்று கூறப்படுகின்றது.
புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிறீதரன் சுகந்தினி (வயது42) என்பவரே காயமடைந்தார்.
புதுக்குடியிருப்பு பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், மேலதிக சிகிச்சைக்காக மாஞ்சோலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-ரி3)



பனை அபிவிருத்திச் சபையின் வடக்கு மாகாண கைப் பணிப் போதனாசிரியர்களுக்கு கைதடி ஆராய்ச்சிநிறுவகத்தில் விரிவாக்க முகாமையாளரின் ஒழுங்குபடுத்தலில், உரிய வளவாளர்களால் ஒருநாள் பயிற்சி நேற்று வழங்கப்பட்டது. பயிற்சி பெற்ற 11 போதனாசிரியர்களும், பனங்களிப் பயிற்சி கோருபவர்களுக்கு காலபோகத்தில் இந்தப் பயிற்சியை வழங்குவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-10)

## பொது இடத்தில் கூடியிருந்த ஐவர் கைது

கொடிகாமம், ஒக்.3
கச்சாய் பகுதியில் பொது இடத்தில் சமூகச் சீர்குலைவை ஏற்படுத்தும் வகையில் கூட்டமாக நின்ற ஐவர் கைது செய்யப்பட்டு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.
அவர்களை 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள்பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் வழக்கை எதிர்வரும் 6ஆம் திகதிவரை ஒத்திவைத்தார்.
அதேவேளை, கச்சாயில் கடந்தவாரம் நடந்த வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் மேலும் இருவரைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியுள்ளனர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 11 பேர் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-ரி2.9)




வவுனியா நகர் முழுவதும் முன்னிலை சோசலிஸக் கட்சியால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. அரிசி 100 ரூபா, தேங்காய் 100 ரூபா மண்ணையா நாங்கள் சாப்பிடுவது?, பொருள் விலையும் வரிச் சுமையும், கடன்களும் பில்லுகளும் தாங்க முடியவில்லை சம்பளத்தைக் கூட்டு என்பன போன்ற வாசகங்கள் அவற்றில் தமிழ் சிங்கள மொழிகளில் பொறிக்கப்பட்டுள்ளன. (ந-10)

## முதியோருக்கான விளையாட்டுப் போட்டி

கிளிநொச்சி.ஒக்.3
பன்னாட்டு முதியோர் வாரத்தை முன்னிட்டு கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவால் முதியோர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நேற்று நடத்தப்பட்டன.
கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முதியோர் கழக உறுப்பினர்களுக்கான இந்தப் போட்டிகள் கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.



கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலரின் தலைமையில் பிரதேச செயலகத்தின் அலுவலர்களான சமூக சேவைகள் அலுவலர் ஆதரணி தினேஸ், கிராம அபிவிருத்தி அலுவலர் செ.சுரேஸ், விளையாட்டு அலுவலர் அ.பிரபாகரன், உளவளத் துணை அலுவலர் ச.கவிப்பிரியா, ஆகியோரின் வழிநடத்தலில் போட்டிகள் நடத்தப்பட்டன. (ந-ரி2.9)

## ஆவணங்களைச் சமர்ப்பிக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு, ஒக்.3
முல்லைத்தீவு மாவட்ட கொக்கிளாய் முகத்துவாரம் பகுதியில் உள்ள மக்கள் தங்கள் காணி தொடர்பான உரிய ஆவணங்களை பிரதேச சபையில் சமர்ப்பிக்க வேண்டும் என்று கரைதுறைப்பற்று பிரதேச சபை அறிவித்துள்ளது.
கொக்கிளாய் பிரதேசத்தில் முகத்துவாரப்பகுதியில் அதிகளவான மக்கள் காணி தொடர்பில் உரிமை கோரியுள்ளனர். எதிர்காலத்தில் அந்தப் பகுதியில் கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்க வேண்டிய நிலையில் முகத்துவாரம் பகுதியில் உள்ள மக்கள் எதிர்வரும் 20ஆம் திகதி க்கு முன்னர் பிரதேச செயலகத்தில் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (ந-ரி3)

## சரத்தின் மனுவை தள்ளுபடி செய்ய கோரி மனு

உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டம் தொடர்பாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தாக்கல் செய்திருந்த மனுவை தள்ளுபடிசெய்ய வேண்டும் என்று கோரி நேற்று மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
மக்களின் ஆணையைப் பிழையாக வழிநடத்தும் நோக்கில் சரத் என் சில்வாவால் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சட்டத்தரணி ஒருவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.
உள்ளூராட்சி மன்ற உத்தேச திருத்தச் சட்டத்தில் பெண்கள் பிரதிநிதித்துவம் தொடர்பான சரத்துக்களை நீக்கி, அதற்கு பதிலாக வேறு பொருத்தமற்ற விடயங்களை உள்ளடக்கி சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
இதன் ஊடாக அரசு தேர்தலை ஒத்தி வைக்க முயற்சிக்கின்றது என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார். அதைத் தள்ளுபடி செய்யக் கோரியே தற்போது மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
முன்னாள் பிரதம நீதிரசர், சட்ட மா அதிபர், சபாநாயகர், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்டவர்கள் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். (ந-ரி4)

### மரண அறிவித்தல்

### பசுவன் காந்தராஜா



சிறுப்பிட்டி தெற்கு, கலையொளியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பசுவன் காந்தராஜா நேற்று (02.10.2017) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பசுவன் வள்ளி தம்பதியரின் இரண்டாவது மகனும் காலஞ்சென்றவர்களான அருட்பிரகாசம் கத்தரீனம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் வனிதாமணியின் பாசமிகு கணவரும் இராசரத்தினம், பற்பனாவதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கமலாதேவி, விஸ்வலிங்கம், செல்வராசா, வரோணிக்கம்மா, கிருபாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அனோஜன் (ஜேர்மனி), பிருந்தா, நிசாரா (சுவிஸ்), றினோஜன், மிதுசா ஆகியோரின் பாசமிகு தந்தையும் அனிற்றா, வோல்ற்றன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் நாளை (04.10.2017) புதன்கிழமை பி.ப. 3.00 மணியளவில் உரும்பிராய் புனிதமிக்கேல் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# சிகை அலங்கரிப்பு நிலையங்கள் விதி மீறினால் கடும் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 3

வடமராட்சிப் பிரதேசத்தில் சங்கத்தின் கட்டுப்பாட்டை மீறி நடக்கும் சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்கும், அவற்றில் தொழில்புரிவோருக்கும் எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் சங்கத்தின் வடமராட்சிக் கிளைத் தலைவர் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இனிவரும் காலங்களில் எமது சங்க விதிமுறைகளுக்கமைவாக நேரக் கட்டுப்பாட்டின்படி கடைகளை மூடாமல் விட்டாலோ, நிர்வாக, பொதுக் கூட்டங்களுக்கு அழைப்புகள் விடுத்தும் வராமல்விட்டாலோ நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல் மாதாந்தச் சந்தாப் பணத்தை மாதாந்தம் கட்டாது விட்டாலோ, விலைப்பட்டியலின்படி கட்டணம் அறவிடப்படாது விட்டாலோ வேறுவேறு சங்கக் கட்டுப்பாட்டுக்குக் கட்டுப்படாமலிருந்தாலோ சங்கத்தின் விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு குற்றப்பணமும் அறவிடப்படும்.

அதேநேரம் பின்வரும் விடயங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன என்பதையும் அறியத்தருகிறோம்,

நேரக்கட்டுப்பாடு மீறுதல் தண்டம் ஆயிரம் ரூபா. விடுமுறைதினம் தொழில் நிலையத்தில் தொழில்செய்தல் தண்டம் ஆயிரம் ரூபா, கட்டணம் குறைவாக அறவிடுதல் தண்டம் ஆயிரம் ரூபா, கட்டைக் காற்சட்டை, யம்பர் அணிதல் மற்றும் மேலங்கியின்றி தொழில்புரிந்தால் தண்டம் 500 ரூபா, குடி மைத்தொழில் இறப்புச்சடங்கு செயற்பாடு செய்தால் தண்டம்-10 ஆயிரம் ரூபா, தொழில்நிலையம் வைத்திருப்பவர் குடிமைத்தொழில் செய்தால் தண்டம் 2 ஆயிரம் ரூபா அறவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ய)

## நாடகமும் அரங்கியலும் மாணவர்களுக்கு பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், ஒக். 3

ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றி விரைவில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இரண்டுநாள் பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 14ஆம், 15ஆம் (சனி, ஞாயிறு) திகதிகளில் இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 8 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை இல.286, முதன்மைச் சாலை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் பயிற்சிப்பட்டறை நடைபெறவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகத்தின் ஏற்பாட்டில் கடந்த பல ஆண்டுகளைப் போல் இவ்வாண்டும் பயிற்சி நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் தமது பெயர், விவரங்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (4)

### காணிகளைத் துப்புரவு செய்ய ஏற்படும் செலவை

# ஆதனக் கணக்குடன் அறவிட நகர சபையினர் நடவடிக்கை

சாவகச்சேரி நகரசபையினர் சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய நிலையில் காணப்படும் காணிகளைத் துப்புரவு செய்து அதனால் ஏற்படும் செலவை ஆதனக் கணக்குடன் சேர்த்து ஆதன உரிமையாளரிடம் அறவிடும் திட்டத்தை ஆரம்பித்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் டெங்குத் தாக்கம் அதிகமாக உள்ள பிரதேசமென சுகாதாரத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் பற்றைக்காடுகளால் தமது குடியிருப்புகளுக்குள் டெங்கு நுளம்புகளின் தாக்கம் அதிகமுள்ளதென வரியிறுப்பாளர்கள் முறையிட்டு வருவதையடுத்து பற்றைக் காடுகளாகக் காணப்படும் காணிகளில் 15 நாள்கள் கால அவகாசத்துடனான அறிவித்தல்கள் ஒட்டப்பட்டு வருகின்றன. குறித்த நாள்களுக்குள் துப்புரவு செய்யப்படாவிடின் அந்தக் காணியை இதற்கென நியமிக்கப்பட்ட தொழிலாளர்கள் மூலமாகத் துப்புரவு செய்து அதனால் ஏற்படும் செலவுத் தொகையைக் குறித்த காணியின் பெயரில் கணக்கு வைத்து ஆதன வரி செலுத்தும் போது அந்தத் தொகையும் அறவிடப்படவுள்ளது என்று சபையின் செயலாளர் கா.சண்முகதாசன் அறிவித்துள்ளார்.

அயலில் உள்ள குடிருப்பாளர்களுக்கு டெங்கு நோய் ஏற்படாதிருக்க இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஆகவே காணிகள் உரிமையாளர்கள் அறிவித்தல் ஒட்டும்வரை காத்திருக்காமல் உடனடியாக தமது காணிகளில் காணப்படும் பற்றைகளை வெட்டித் துப்புரவாக வைத்திருக்குமாறு அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது. சபையினால் துப்புரவு செய்யப்படும் பட்சத்தில் அதனால் ஏற்படும் செலவை வரியிறுப்பாளர்களே ஏற்றுக் கொள்ள வேண்டி வருமெனவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4 - 9)



போரில் கணவனை இழந்த முன்னாள் போராளிக்குடும்பம் ஒன்றுக்கு குடும்ப அங்கத்தவர்களின் நலிவான குடும்ப சூழலைக் கருத்திற்கொண்டு 'உயர்த்தும்கரங்கள்' செயற்றிட்டத்தின் கீழ் வாழ்வாதார உதவியாக 45 ஆயிரம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரம் வழங்கப்பட்டது. இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் இந்த உதவி வழங்கி வைக்கப்பட்டது. (4)

## வாசிப்புமாதத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறையில் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 3

தேசிய வாசிப்பு மாதத்தைமுன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேசசபையின் ஊர்காவற்றுறை, நாரந்தனை, அனலைதீவு, எழுவைதீவுப் பொது நூலகங்கள் இணைந்து பல்வேறு போட்டிகள், நிகழ்வுகளை முன்னெடுத்து வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்கள், பொதுமக்களிடையே வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்கும் நோக்கில் கட்டுரைப்போட்டி, வாசிப்புப் போட்டி, திருக்குறள் மனனப்போட்டி, சஞ்சிகை ஆக்கம், கவிதைப்போட்டி, பொது அறிவுப்போட்டி என்பன நடத்தப்படவுள்ளன. சுவரொட்டிகள், பதாகைகளை காட்சிப்படுத்தல், கருத்தரங்கு நடத்துதல், நூல் கொள்வனவு, நூல்சேகரிப்பு, நூலக சிரமதானம், சலுகைக் கட்டணத்தில் அங்கத்தவர்களை இணைத்தல், மரநடுகை, பயன்தரு ஒளிப் படக்காட்சி போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

போட்டிகள் பற்றிய விவரங்களைப் பிரதேசங்களின் நூலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும். போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறுவோருக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் இறுதிநாள் நிகழ்வின் போது வழங்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4)

## விழிப்புணர்வு கருத்தமர்வு

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ்ப்பாணம் இளம் மகளிர் கிறிஸ்தவ சங்கத்தின்அங்கத்தவர்களுக்கு அடிப்படைச்சட்டமும் குடும்ப வன்முறையும் என்ற தலைப்பிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது.

இளம்மகளிர் கிறிஸ்தவச் சங்கத்தின் செயலாளர் திருமதி சோ.விஜயசிறி தமிழினியன் அவர்களின் ஒருங்கமைப்பில் தலைவி திருமதி சேர்ச்சிலம்மா நவரெட்ணராஜா தலைமையில் முதன்மைச் சாலையில் அமைந்துள்ள இளம்மகளிர் கிறிஸ்தவ சங்கத்தின் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

சட்டத்துக்கும் மனித உரிமைகளுக்குமான கற்கை நிலையத்தால் நடத்தப்பட்ட இந்த நிகழ்வுக்கு வளவாளராக கார்த்திகா ஆதித்யன் கலந்துகொண்டிருந்தார். (4-23)



அச்சுவேலி பத்தமேனி விநாயகர் சன சமூக நிலையத்தினால் வைத்தீஸ்வராக் கல்லூரி ஆசிரியர் ஏ.என். மதியழகனுக்கு வில்லிசைத் தென்றல் என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. நேற்று முன்தினம் இடம்பெற்ற வாணி விழா நிகழ்வின் போதே அவர் கௌரவிக்கப்பட்டார். (422)

## அதிபர், ஆசிரியர்களுக்கு உற்பத்தித்திறன் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளின் அதிபர்கள் ஆசிரியர்களுக்கான தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் ஏற்பாட்டில் உற்பத்தித்திறன் தொடர்பான செயலமர்வு இன்று செவ்வாய்க்கிழமையும் எதிர்வரும் 9 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளது.

மு.ப.9 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை யாழ்ப்பாண மாவட்டச் செயலகக்கேட்போர்கூடத்தில்செயலமர்வு நடைபெறுமென்று மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

இன்றைய செயலமர்வில் வலிகாமம் பிரதேசத்தைச் சேர்ந்த சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலகங்களின் பிரிவுகளுக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களும் ஆசிரியர்களும், யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் ஆசிரியர்களும், தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த சாவகச்சேரிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 5 பாடசாலைகளின் அதிபர்களும் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

எதிர்வரும் ஒன்பதாம் திகதி நடைபெறவுள்ள செயலமர்வில் தீவகக் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஊர்காவற்றுறை, வேலணை, காரைநகர், நெடுந்தீவு ஆகிய பிரதேசசெயலகபிரிவுக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர் ஆசிரியர்களும் வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட அதிபர்கள், அசிரியர்களும் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஐந்து பாடசாலைகளின் அதிபர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவிருந்த செயலமர்வு வலயங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆசிரியர் தினத்தையொட்டிய நிகழ்வுகளையடுத்து ஒன்பதாம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (4-9)

## விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 3

அரியாலைப் பகுதியில் இடம்பெற்ற முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்தில் இரண்டு பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அரியாலையைச் சேர்ந்த சந்திரசேகரம் அனோஜன்(வயது- 19). பூநகரியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை வனஸ்ரன் அனுஸ்ரன்(வயது -39)ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர். (4-8-ரி1)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 60 | 60 |
| கத்தரி | 180 | 160 | 160 | 180 | 160 |
| மரவள்ளி | 80 | 60 | 60 | 60 | 60 |
| பயிற்றை | 80 | 100 | 120 | 100 | 140 |
| பாகல் | 340 | 400 | 250 | 300 | 90 |
| க.கிழங்கு | 100 | 100 | 80 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 90 | 140 | 130 | 100 | 100 |
| சி.வெங்காயம் | 250 | 250 | 240 | 240 | 260 |
| பூசணி | 40 | 60 | 40 | 50 | 40 |
| தக்காளி | 120 | 140 | 150 | 40 | 160 |
| வாழைக்காய் | 80 | 100 | 90 | 70 | 60 |
| கீரை | 40 | 30 | 25 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 35 | 30 | 30 |
| ப.மிளகாய் | 350 | 500 | 320 | 200 | 400 |
| புடோல் | 80 | 100 | 90 | 100 | 100 |
| கோவா | 140 | 160 | 130 | 140 | 140 |
| வெண்டி | 80 | 100 | 100 | 100 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 100 | 200 |
| லீக்ஸ் | 180 | 200 | 160 | 160 | 200 |
| தேங்காய் | 80 | 90 | 80 | 90 | 80 |
| உ.கிழங்கு | 100 | 120 | 100 | 110 | 120 |
| தேசிக்காய் | 350 | 300 | 300 | 250 | 220 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 15 |
| கறிமிளகாய் | 200 | 200 | 260 | 180 | 180 |
| கரட் | 120 | 200 | 80 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 120 | 160 | 200 | 120 | 140 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 400 | 400 | 400 |
| கணவாய் | 800 | 600 | 800 | 1000 |
| பாரை | 600 | 500 | 600 | – |
| சுறா | 600 | 700 | 800 | 800 |
| சீலா | 400 | 400 | 500 | 600 |
| விளை | 600 | 400 | 400 | 400 |
| முரல் | 350 | 350 | 350 | – |
| கும்பிளா | 350 | 300 | 400 | 600 |
| கிளாக்கன் | 800 | – | 500 | – |
| ஓரா | 350 | 300 | 500 | 300 |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 250 | 150 | 400 | – |
| சூடை | 150 | 100 | 200 | 150 |
| ஒட்டி | 200 | 200 | 300 | 300 |
| திருக்கை | 350 | 200 | 400 | – |
| மதனம் | 250 | 200 | 400 | – |
| கொய் | 150 | 70 | 50 | 100 |
| பாலை | 250 | 300 | 500 | 400 |
| வாளை | 150 | 200 | 400 | 300 |

*படகு விபத்தில் மீனவர் இறப்பு*

## 2 கடற்படையினரும் பிணையில் விடுவிப்பு

காரைநகர் மீனவருடைய படகை மோதி விபத்துக்குள்ளாக்கி, அந்தப் படகில் இருந்த மீனவர் ஒருவரை உயிரிழக்கச் செய்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கடற்படையினர் இருவர் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் மீதான வழக்கு விசாரணை எதிர்வரும் 9ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், காரைநகரிலிருந்து மீனவர்கள் இருவர் கடந்த சனிக்கிழமை படகொன்றில் கடற்றொழிலுக்குச் சென்றுள்ளனர். அவர்கள் காரைநகரிலிருந்து 7 கடல்மைல் தூரத்தில் வலையை வீசிவிட்டு சமிக்ஞை விளக்கை ஒளிரவிட்ட பின்னர் படகில் காத்திருந்தனர். அந்தப் பகுதிக்குள் அதிவேகமாக வந்த கடற்படையினரின் படகு மீனவர்களின் படகுடன் மோதியது. அதில் மீனவர் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்திருந்தார். மற்றொருவர் படுகாயமடைந்திருந்தார்.

இருவரையும் கடற்படையினர் மருத்துவமனையில் சேர்த்தனர். விசாரணைகள் இடம்பெற்றன. விசாரணைகளின் பின்னர் திருகோணமலை கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் இருவர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை கைது செய்யப்பட்டிருந்தனர். நேற்று அவர்கள் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்ட போதே அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (வ-21,101,8)

## கடையிற் சுவாமியின் குருபூசைதினம் நாளை

யாழ்ப்பாணம், ஒக். 3

கடையிற் சுவாமிகளின் 126 ஆவது குருபூசைத் திருநாள் நீராவியடியிலுள்ள ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரநாதர் ஆலயத்தில் நாளை நடைபெறவுள்ளது. இந்த விழாவில் சொற்பொழிவும் அதனைத்தொடர்ந்து 12 மணிக்கு அன்னதானமும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (4)

# சட்ட உதவி அலுவலகம் யாழ்ப்பாணத்தில் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக். 3



ஆரோக்கியமானவேலைச் சூழல் மற்றும் பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்தல் என்ற சட்ட உதவி அலுவலகம் நேற்று யாழ்ப்பாணத்தில் திறந்துவைக்கப்பட்டது. யாழ்ப்பாணமாவட்டச்செயலாளர் நா.வேதநாயகன் மற்றும் சொலிடாரிடி நிறுவனத்தின் வதிவிட பணிப்பாளர் அலோன்சோ சசோன் ஆகியோர் இணைந்து அந்த அலுவலகத்தைத் திறந்து வைத்தனர்

இந்தநிறுவனத்தின் ஊடாக தொழிலாளர் உரிமை, பணியிடங்களில் இடம்பெறும் பெண்களுக்கு எதிரானவன்முறைகள்தொடர்பில் முறைப்பாடுகள்செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. முறைப்பாடுகளை இல. 33 கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள அலுவலகத்திலோ அல்லது 021221 4444 என்ற தொலைபேசி ஊடாகவோ முன்வைக்க முடியும்.

இதன் கிளை அலுவலகங்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துப்பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் திறந்து வைக்கப்படும் என்று ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

திறப்பு விழா நிகழ்வில், அரச தலைவர் சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ், உடுவில், கோப்பாய் பிரதேசசெயலாளர்கள், சட்டத்தரணிகள் உள்படபலர்கலந்துகொண்டனர். (வ-37,101,106)

# 30 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள்

*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கள் வழங்கினர்*

யாழ்ப்பாணம், ஒக். 3



வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பகுதி பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை ஊக்குவிக்குமுகமாக அவர்களுக்கு 30 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 2005 ஆம் ஆண்டு ஜி.சி.ஈ. உயர்தரத்தில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் இவற்றை வழங்கியுள்ளனர்.

இந்த நிகழ்வு நெடுங்கேணி மகா வித்தியாலயத்தில் கடந்தவாரம் இடம்பெற்றது.

அதன்படி, நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் - 12 மாணவர்கள்,

மாறாயிலுப்பை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 2 மாணவர்கள், ஒலுமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் - 10 மாணவர்கள், பட்டிக்குடியிருப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் - 2 மாணவர்கள், தண்டுவான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் - 4 மாணவர்கள் துவிச்சக்கர வண்டிகளைப் பெற்றுக் கொண்டனர் என்று அவர்கள் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (4)

# எழுதாரகைப் படகைச் செலுத்தும் நால்வருக்கு டொக்கியாட்டில் பயிற்சி

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ்ப்பாணம் எழுவைதீவு இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடவுள்ள எழுதாரகையின் இயக்கத்துக்காக உள்ளூர் இளையோர்கள் 4பேர் தேர்வு செய்யப்பட்டு பயிற்சிக்காக டொக்கியாட் நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர் என்று மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மாவட்டச் செயலாளர் மேலும் தெரிவித்ததாவது:

குறிகாட்டுவான் எழுவைதீவு மற்றும் அனலைதீவு இடையிலான பாதுகாப்பான பயணிகள் சேவையில் ஈடுபடுவதற்காக ஒரு படகை பிரதேச மக்கள் நீண்டகால மாகவே கோரி வந்தனர். இதனால் மீள் குடியேற்ற அமைச்சின் நிதியில் இருந்து ஒரு படகைப் புதிதாகக் கட்டுவித்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளது. இவ்வாறு பயணிகள் சேவையில் ஈடுபடவுள்ள எழுதாரகையின் இயக்கத்துக்காக 4 மாலுமிகள் தேவைப்படுகின்றனர்.

அவ்வாறு தேவைப்படும் மாலுமிகளையும் நாம் உள்ளூர் இளையோர்களில் 4 பேரைத் தெரிவுசெய்து அவர்களை 6 மாதங்களுக்குப் பயிற்சிக்காக கொழும்பு டொக்கியாட் நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் இளைஞர்கள் பயிற்சிக்காக செல்லவுள்ளனர்.

அவ்வாறு பயிற்சிக்குச் செல்லும் இளையோர்கள் பயிற்சியை நிறைவு செய்து வரும் வரையில் குறித்த எழுதாரகையைக் கடற்படையினர் மூலமாக இயக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. குறித்த படகு சேவையானது இந்த மாதம் நடுப்பகுதியில் இருந்து தனது சேவையை ஆரம்பிக்கும் என்று மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்தார். (4 - 101)




பெண்களுக்கான புதிய வகை கழுத்து மாலைகள் சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 750 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## சுமந்திரன் மீதான கொலைமுயற்சி சந்தேகநபர்களின் வழக்கு ஜனவரிக்கு

கிளிநொச்சி, ஒக். 3
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர்எம்.ஏ.சுமந்திரன்மீதானகொலைமுயற்சி வழக்கில்கைதுசெய்யப்பட்டு பிணை வழங்கப்பட்ட ஐந்து சந்தேக நபர்களின் வழக்கு எதிர்வரும்ஜனவரி22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சந்தேகநபர்கள்மீதுசுமத்தப்பட்டகொலைமுயற்சிதொடர்பான விசாரணைகள் முடிவுறுத்தப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில்இடம்பெற்றுவருகிறது. அவர்கள் மீதான இரண்டாவது குற்றச்சாட்டான போதைப்பொருள் வழக்கு விசாரணையும் நிறைவடைந்துள்ளது. அதன் விசாரணை அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்துக்குஅனுப்பப்பட்டுள்ளதாகவும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் மன்றில் ஏற்கனவே தெரிவித்திருந்தனர். இந்தநிலையில்சந்தேகநபர்களான 5 பேருக்கும் யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றுபிணைவழங்கியிருந்தது. அவர்களது வழக்கு கிளிநொச்சி நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே வழக்குநீண்டநாள்தவணையாக எதிர்வரும் ஜனவரி 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (4-6)

# வடக்கு மாகாண சபையின் நிலையான குழுக்களில் ஆளணியினர் மாற்றம்

## அவைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 3
வடக்கு மாகாண சபையின் நிலையான குழுக்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்குமாகாணசபையில்அண்மையில் ஏற்படுத்தப்பட்ட அமைச்சுக்களின் மாற்றம் காரணமாக மாகாண சபையின் நிலையான குழுக்களில் உள்ள உறுப்பினர்களையும் மாற்ற வேண்டிய தேவைகள் ஏற்பட்டன.

இந்தக் குழுக்களில் இருந்த மாகாண சபை உறுப்பினர்களில் சிலர் தற்போது மாகாண அமைச்சுப் பதவியில் உள்ளனர். அமைச்சர்கள் இந்தக் குழுக்களில் உறுப்பினர்களாக இருக்கக்கூடாது என்பதுமரபுமுறையாகக்காணப்படுகின்றது.

இதன்படி மாகாண சபையின் சபை நடவடிக்கைக் குழுவின் தலைவராக அவைத்தலைவரும் அதன் உறுப்பினர்களாக எம்.கே.சிவாஜிலிங்கம், து.ரவிகரன், யவாகீர், அ.ஜெயதிலக, சி.தவராஜா, ப.அரியரட்ணம், பா.கஜதீபன் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாகாண சபைக்கான நியதிச் சட்டக் குழுவின் தலைவராக அவைத்தலைவரும் உறுப்பினர்களாக அ.சிராய்வா, கே.சயந்தன், பா.டெனிஸ்வரன், வை.தவநாதன், வே.சிவயோகன், சி.தவராஜா, இ.ஜெயசேகரம் ஆகியோரும்நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாகாண சபைக்கான பொதுக் கணக்கு மற்றும் கணக்கு குழுவின் தலைவராக அவைத்தலைவரும் அதன்உறுப்பினர்களாக த.குருகுலராஜா, ச.சுகிர்தன், ப.அரியரட்ணம், பா.டெனிஸ்வரன், ரா.இந்திரராசா, சி.தவராசா ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்குமாகாணசபையின்பொதுமக்கள் முறைப்பாட்டுக்குழுவுக்குத்தலைவராக அவைத்தலைவரும் அதன் உறுப்பினர்களாகசு.பசுபதிப்பிள்ளை, இ.ஆனோல்ட், பா.கஜதீபன், க.விந்தன், அஸ்மின், மை.தியாகராசா, த.செனவிரட்ன, ப.சத்தியலிங்கம் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாகாண சபையின் நடைமுறை விதிக் குழுவின் தலைவராக பிரதி அவைத் தலைவர்கமலேஸ்வரனும்அதன்உறுப்பினர்களாக க.தர்மலிங்கம், பொ.ஐங்கரநேசன், ரிப்கான் பதியுதீன், அ.பரஞ்சோதி, சி.அகிலதாஸ், முகமத் றெயீஸ், அ.புவனேஸ்வரன்ஆகியோரும்நியமிக்கப்பட்டுள்ளனர் என்று மேலும் அவைத் தலைவர் மேலும்தெரிவித்தார். (4-8)

# பொதுவானஒழுங்குமுறையில் இனிமேல்சிறுவர் இல்லங்கள்

## சிறுவர் பராமரிப்புத் திணைக்களம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம். ஒக். 3
வடக்கு மாகாணத்தில் உள்ளசிறுவர்இல்லங்களை பொதுவான ஒரு நடைமுறையின்கீழ் சிறப்பாகச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.அதற்காகச்சிலஒழுங்குமுறைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்று சிறுவர்நன்னடத்தைப்பராமரிப்புத் திணைக்கள ஆணையாளர் தி.விஸ்வரூபன் தெரிவித்தார்.

இது தொடர்பில் திணைக்களம் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் உள்ள சிறுவர் இல்லங்கள் வடக்குமாகாணசபையின் நியதிச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் நடைபெற்றுவருகின்றன.

சிறுவர் இல்லங்களை அவற்றின் நிர்வாகிகள் இயக்கினாலும் சிறுவர்களைப் பராமரித்து வருவதால் சில நடவடிக்கைகள் இல்லங்களுக்கு அவசியமாகின்றன. அது அனைவருக்கும் பொதுவானதாக அமைந்தால்திணைக்களம் அதனை நிர்வகிப்பது இலகுவாக அமையும்.

ஆகவே சிறுவர் இல்லங்களை நடத்துவதற்குப் பொதுவானசிலவிதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் சிறுவர் இல்லங்களைப் பதிவுசெய்தல் முக்கியமானது. அங்கு பணிபுரிபவர்கள் திணைக்களத்தின் அனுமதியுடன்நடைபெற்றுவரும் டிப்ளோமா கற்கைநெறியை நிறைவு செய்ய வேண்டும், தொழிற் திணைக்களத்தின் விதிகளுக்குஅமைவாகஅனைத்து ஊழியர்களும் பதிவு செய்யப்படல் வேண்டும், சிறுவர் இல்லங்களை நடத்துபவர்களால் நியமிக்கப்பட்ட ஊழியர்களுக்கும் இந்த விதிமுறைகள் பொருந்தும்.

இவ்வாறானவிடயங்களை முழு மைப்படுத்தும்போது சிறுவர் இல்லங்கள் ஒரு பொதுவான நடைமுறைக்குள் செயற்படும். ஆகவே இந்த விடயங்களை அனைத்து சிறுவர் இல்லங்களும் பின்பற்ற வேண்டும், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றனஎன்றுஅவர்மேலும் தெரிரித்தார். (4-ரி)

# சிறுவர்களுக்கான பொறுப்புகளை பெரியோர் உணர்த்த வேண்டும்

## மகளிர் விவகார அமைச்சின் செயலர் இமெல்டா வலியுறுத்து

வவுனியா, ஒக். 3
சமுதாயத்தில் இருக்கின்ற அனைத்துப் பெரியவர்களும் தாங்கள் விடுகின்ற பிழைகளைச் சிந்தித்து உணர்ந்து திருந்த வேண்டும். சிறுவர்களை மதித்து வழிநடத்தி அவர்களுக்கான பொறுப்புக்களை உணர்த்தவேண்டும். இனி எந்தஒருசிறுமிமீதும்பாலியல்முறைகேடுஇடம்பெறாதவாறு உன்னிப்பாகவும் கவனமாகவும் செயற்பட வேண்டும்.

இவ்வாறு சிறுவர் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார்தெரிவித்தார்.

சிறுவர் முதியோர் தின நிகழ்வு வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அன்புடன் சிறுவர்களைப் பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதுஅவர் மேலும்தெரிவித்ததாவது:

தாய், தந்தை, முதியவர்கள் ஆகியோருடைய பாசப்பிணைப்பினூடாகச் சிறுவர்களை ஓர்அதிசயமானஉலகுக்கு இட்டுச்செல்லவேண்டும். இந்தத்தொனிப்பொருளில்தான் பெரியவர்களுக்கான பொறுப்பு வலியுறுத்தப்படுகின்றது. இதுமிகமுக்கியமானது.

இந்த வருடத்தில் சிறுவர் தின நிகழ்வு பன்னாட்டு ரீதியாகப் பெரியோர்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வாகத்ததான் இடம்பெறுகிறது.உலகம்முழுவதும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் பாலியல்முறைகேடுகள்போன்ற பல்வேறுபட்ட அழுத்தங்கள்இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. இவற்றுக்கு எல்லாம்பதில்கூறவேண்டியவர்கள் பெரியவர்கள்.

அந்த வகையிலே பெரியோர்கள் தங்களுடைய பொறுப்புக்களைஉணர்ந்து கொள்ளவேண்டும்என்பது முதலாவது முக்கிய விடயம். இன்றைய சிறுவர்கள் தான் நாளை உலகை வழிநடத்திச்செல்பவர்கள். இந்த உலகத்தை நிர்வகிப்பவர்கள். அவர்கள் எதிர்காலத்திலே மிகப்பெரிய மதிப்புடன் வாழவேண்டியவர்கள். அப்படிப்பட்டவர்கள் இன்றையகாலகட்டத்திலே அறியாமையால் பல்வேறு துன்ப துயரங்களுக்கு ஆளாகின்றனர்.

வெளிநாட்டுக்குச் சென்ற தாயின் குடும்பம் படும்பாடு பரிதாபம். எத்தனையோ குடும்பங்களில் பெற்றோரை இழந்தசிறுவர்கள் அநாதரவாக இருக்கின்றார்கள். கல்வியைத் தொடரமுடியாமல், வசதி வாய்ப்புக்கள் அற்ற நிலையில் இருக்கின்றார்கள். ஒரு வேளை சாப்பாட்டுக்குக்கூட அல்லலுறும்சிறுவர்களும்உள்ளனர்- என்றார். (4)

# தென்னை மரங்களுக்கு இடையில் தேங்காய் மட்டைக்குழி அமையுங்கள்

## வறட்சியிலிருந்து பாதுகாக்க இது சிறந்த வழியென அறிவுறுத்துகிறார் தென்னைச் செய்கை முகாமையாளர்

யாழ்ப்பாணம், ஒக். 3
தென்னை மரங்களை வறட்சியிலிருந்துமீட்பதற்குத் தேங்காய்மட்டைக் குழிகள் அமைப்பது சிறந்த வழி. அதனைப் பின்பற்றி வறட்சியிலிருந்து தென்னைகளைப் பாதுகாப்பதோடு உற்பத்தியையும் அதிகரிக்கலாம் என்று தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்மேலும்தெரிவித்ததாவது:

தென்னைமரங்கள் பூக்கும் காலம் பெரும்பாலும் வருடத்தின் மார்ச் மற்றும் ஜுலை மாத காலப்பகுதிகளே. அந்தக்காலப்பகுதியில்தான்தென்னை மரங்களில் கருக்கட்டல் நடைபெறும். இந்தக்கருக்கட்டலுக்கு27பாகைசெல்சியஸ் வெப்ப நிலைக்கும் குறைவான காலநிலையே தேவைப்படுகின்றது. எமது மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த காலங்களில் வெப்பநிலையின் தாக்கம் அதிகரித்தே காணப்பட்டது.

இவ்வாறுவறட்சியானகாலநிலைநிலவும்போது தென்னை மரங்களின் பூக்கள் உதிர்ந்து தேங்காய் உற்பத்தி குறைவடையும்.



இந்தப்பாதிப்பிலிருந்துவிடுபடவேண்டுமானால்தென்னைப்பயிர்ச்செய்கையாளர்கள் தங்களின் தென்னைமரங்களுக்கு இடைப்பட்ட பகுதிகளில் எட்டு அடி ஆழத்தில் கிடங்கு வெட்டி அந்தக் கிடங்கின் அடியில் தேங்காய் மட்டைகளை நிமிர்த்தியபடி அடுக்க வேண்டும். அதன்பின்னர் மட்டைகள் மறையும்வரைமண்போட்டுமூடவேண்டும். அதன்பின்னரும்ஒருதொகைமட்டைகளை நிமிர்த்தியபடி அடுக்க வேண்டும்.

அதன் பின்னர் மண்ணை நிரப்பி மூட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பொச்சு மட்டைகளாலான குழிகளை அமைப்பதன் ஊடாக தென்னை மரங்களுக்கு தண்ணீர் இறைக்கும்போது நிலத்தின்கீழ்உள்ள தேங்காய் மட்டைகள் நீரை அதிகளவில் உறிஞ்சி வைத்திருக்கும். அவ்வாறுதண்ணீர்உறிஞ்சி வைக்கப்படுவதால் வறட்சியான காலநிலையிலும் தென்னை மரத்துக்குத் தேவையானதண்ணீர்தொடர்ச்சியாக கிடைக்கும்.

தேங்காய்க்குத் தட்டுப்பாடு ஏற்படுவதற்குகாலநிலையே முக்கியகாரணம். அதுமட்டுமன்றித் தேங்காய் உற்பத்தியாளர்களில் 70 வீதமானோர் தங்கள் உற்பத்திகளான தேங்காய்களைத் தமது தேவைகளுக்கே பயன்படுத்துகின்றனர். மிகுதி30 வீதமேசந்தைக்கு வருகின்றன.

இதனாலும் சந்தையில் தேங்காய்க்கான கேள்வி அதிகமாகக் காணப்படுகின்றது - என்றார். (4-8)

முன்னாள் போராளிகளின் கோரிக்கையை நிராகரித்து

## அக்கராயனில் 210 ஏக்கர் கரும்புத் தோட்டத்தை மீண்டும் குத்தகைக்கு விட்டார் முதலமைச்சர்

*மாற்று ஏற்பாடு இல்லை என்றும் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம். ஒக். 3

அக்கராயன் பகுதியில் உள்ள கரும்புத் தோட்டத்தின் 210 ஏக்கர் நிலத்தையும் முன்னர் குத்தகை அடிப்படையில் பெற்றிருந்த நிறுவனத்திடமே கையளிக்குமாறு மாகாணக் காணி ஆணையாளருக்கு வடக்கு மாகாண காணி அமைச்சரும் முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் உத்தரவிட்டுள்ளார். அங்குள்ள முன்னாள் போராளிகள் மற்றும் விவசாய நிலம் இல்லாதவர்களின் கோரிக்கையை நிராகரித்து முதலமைச்சர் இவ்வாறு செயற்பட்டுள்ளார் என்று அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அக்கராயன் பகுதியில் உள்ள கரும்புத் தோட்டத்தின் 210 ஏக்கர் நிலத்தையும் அந்தப் பகுதியிலேயே வாழும் நிலமற்ற விவசாயிகளுக்கும் முன்னாள் போராளிகளுக்கும் வழங்க வேண்டும் என்று ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால். அவ்வாறு பலருக்குக் கூறுபோட்டு வழங்குவதன் மூலமாகவும் ஏற்கனவே 90 வருட குத்தகைக்கு 1964ஆம் ஆண்டில் அந்த நிலத்தைப் பெற்றவர் போர் காரணமாகவும். இராணுவம் அந்தப் பகுதியில்குடிகொண்டிருந்த நிலையிலும் ஒப்பந்தத்தைப் புதுப்பிக்காத நிலையில் ஏனையோருக்கு வழங்கினால் முதலீட்டாளர்களின் ஆர்வம் குறையும் என்பதன் அடிப்படையிலும் குறித்த நிலத்தை முன்னர் குத்தகைக்கு எடுத்த நிறுவனத்திடமே வழங்குமாறு முதலமைச்சர் பணித்துள்ளார்.

குறித்த நிலத்தை உரியவருக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மாகாண காணி ஆணையாளர் , மாவட்டச் செயலர், பிரதேச செயலாளர் மாவட்டத்தின் இணைத் தலைவர்களுக்கும் பிரதியிட்டு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் போருக்குப் பின்னர் அந்தப் பகுதியை உள்ளூர் விவசாயிகள் தமது வாழ்வாதாரத்துக்காக வழங்குமாறு கோரியிருந்தனர். இதன் அடிப்படையில் இந்த விடயம் ஒருங்கிணைப்புக் குழுவில் ஆராயப்பட்டது.

குறித்த நிலத்தை முழுமையாக முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்தைப் பெருக்கும் வகையில் தலா 3 ஏக்கர் வீதம் குத்தகைக்கு வழங்குவதாக இணக்கம் காணப்பட்டிருந்தது.

இந்த நிலையில். முதலமைச்சர் எழுத்தில் உத்தர விட்ட கடிதத்தில் காணி அற்ற உள்ளூர் விவசாயிகளுக்கு வேறு அரசநிலத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை கூறியுள்ளபோதும் தமக்கு அவ்வாறான எந்த ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படாதமை வருத்தம் அளிப்பதாக உள்ளூர் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (4-101)

## கசிப்பு வைத்திருந்தோருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம்

கிளிநொச்சி. ஒக. 3

கிளிநொச்சியில் சுமார் 5 லீற்றர் கசிப்பை வைத்திருந்த இருவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தது கிளிநொச்சி நீதிமன்று.

குறித்த குற்றச்சாட்டில் இருவரும் மன்றில் முற்படுத்தப்பட்டபோது தம் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டர். 320 மில்லி லீற்றர் கசிப்பை வைத்திருந்த நபருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

5 லீற்றர் கசிப்பை வைத்திருந்தவருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (4-6)

மாகாணத் திணைக்களங்களிலிருந்து பறித்தெடுக்கப்பட்டுச் சேர்த்த

# ஆளுநர் சுயேச்சை நிதியிலிருந்து 32 மில்லியன் ரூபா நிதி விடுவிப்பு

*கிராமிய வங்கிகள் மூலமாக மக்கள் பயன்பாட்டுக்கு*

யாழ்ப்பாணம். ஒக். 3

வடக்கு மாகாண ஆளுநர் சுயேச்சை நிதியத்திலிருந்து மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்துக்கு 32 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளதாகக் கூட்டுறவு அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த நிதி 21 கூட்டுறவுச் சங்கங்களின் கிராமிய வங்கிகள் மூலமாக மக்கள் பயன்பாட்டுக்கு விடப்படும்.

இது தொடர்பில் கூட்டுறவு அமைச்சு மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் ஆளுநர் நிதியத்தின் ஊடாக அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு 144 மில்லியன் ரூபா வரையில் கூட்டுறவுத் திணைக்களம் உட்பட பல்வேறு திணைக்களங்களில் நிதி பெறப்பட்டது. இவ்வாறு பெறப்பட்ட நிதி முறைமை தவறானது என்று பல்வேறு தரப்பினராலும் கடந்த காலங்களில் சுட்டிக் காட்டப்பட்டது. இதனைக் கருத்தில் கொண்டு மக்களின் நன்மை கருதி கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்திடம் இருந்து பெறப்பட்ட நிதியை ஈடுசெய்வதற்கு ஆளுநர் செயலக பொது வைப்புக் கணக்கு மற்றும் ஆளுநர் சுயேச்சை நித்தியத்திலிருந்து 32 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளது. அதற்கான அனுமதி வடக்கு மாகாண சபையின் 54 ஆவது அமைச்சரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதற்குரிய பயனாளிகள் தெரிவுசெய்யப்படும்போது கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களாகவும், போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களாகவும் இருக்கவேண்டும் என்றும் அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்று மேலும் தெரிவித்தது. (4-ரி)

## வடக்கு மாகாண சபையின் அரசியல் அறம் தாழ்ந்துவிட்டது

இப்படிக் கூறுகிறார் உறுப்பினர் ஐங்கரநேசன்

யாழ்ப்பாணம், ஒக். 3

வடக்கு மாகாணசபை பலம் பெற்றுவிடக் கூடாது என்பதற்காகத் தெற்கு முன்னெடுத்த சதிக்கு எம்மவர்கள் சிலரும் தெரிந்தோ தெரியாமாலோ துணைபோனதன் மூலமாக வடக்கு மாகாணசபையின் அரசியல் அறம் தாழ்ந்து போயுள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சரும் தற்போதைய மாகாண சபை உறுப்பினருமான பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

தாவடி வேதவிநாயகர் விளையாட்டுக்கழகத்தின் வாணிவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்வி. செல்வம். வீரம் ஆகிய முப்பெரும் வளங்கள் வாழ்க்கைக்கு அவசியமானவை. அறம் என்றால் மாசு இல்லாத மனசு என்கிறது திருக்குறள். கல்வி அறிவு எவ்வளவுதான் இருந்தாலும் அந்த அறிவு ஆக்கத்துக்கு அல்லாமல் அழிவுக்குப் பயன்படுத்தப்பட்டால், செல்வம் எவ்வளவுதான் குவிந்தா லும் அது உழைப்பால் அல்லாமல் குறுக்கு வழியில் தேடிய சொத்தாக இருந்தால், எவ்வளவுதான் பலம் பொருந்தியவராக இருந்தாலும் அந்த வீரம் நேருக்கு நேராக அல்லாமல் முதுகில் குத்தும் துரோகமாக இருந்தால் அறம் பிழைத்துவிடும். கடைசியில். என்றோ ஒருநாள் அதற்கான விளைவை அனுபவித்தே தீர வேண்டிவரும்.

பௌத்த சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராக நாங்கள் முன்னெடுத்த ஆயுதப் போரட்டம் ஒட்டுமொத்தத் தமிழ் இனத்தின் விடுதலைக்கானது என்பதில் அதற்கான அறம் உள்ளது. ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டாலும் இந்த அறம் எமக்கான தீர்வைத் தேடித்தரும். ஆனால், அதனை நோக்கிப் பயணிக்க வேண்டிய அரசியல்வாதிகள் பலரின் அரசியல் அறம்தான் கேள்விக் குறியாக உள்ளது.

விடுதலை அரசியலில் விடுதலை என்ற இலக்கு மாத்திரமே போராளிகளுக்கு இருந்தது. அங்கு தனிமனித ஆசைகளுக்கு இடம் இருக்கவில்லை. ஆனால், தேர்தல் அரசியலில் கதிரைகள் மட்டுமே இலக்கு என்ற துர்ப்பாக்கிய நிலைமையே இன்று உள்ளது. எந்தச் சதியில் ஈடுபட்டேனும் கதிரைகளைப் பிடிக்க முயலுவதும் பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்தவர்களே எவ்வித கூச்சமும் இல்லாமல் அமைச்சர்களாவதும் இன்று அரங்கேறி வருகிறது. வடக்கு மாகாணசபை பலம் பெற்று விடக் கூடாது என்பதற்காகத் தெற்கு முன்னெடுத்த சதிக்கு எம்மவர்கள் சிலரும் தெரிந்தோ தெரியாமாலோ துணை போனதன் மூலம் வடக்கு மாகாணசபையின் அரசியல் அறம் தாழ்ந்து போயுள்ளது. என்றார். (4-8)

## தையல் போதனாசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

யாழ்ப்பாணம். ஒக். 3

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் நிலவும் தையல்போதனாசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் ஜெ.ஜெ.பெலீசியன் தெரிவித்தார் இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின்கீழ் நிலவும் தையல் போதனாசிரியர் வெற்றிடங்கள் பல வருடங்களாக நிரப்பப்படவில்லை. அதனால் ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு வந்தனர். வடக்கு மாகாணத்தில் நெடுந்தீவு. மடு. வவுனியா வடக்கு. கோப்பாய் ஆகிய பிரதேசங்களுக்கு இவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் தையல் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு வந்தனர்.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தற்போது மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. ஆள்ச்சேர்ப்புத் திட்டத்தின்படி பெறப்பட்ட விண்ணப்பதாரிகளுக்குப் பரீட்சைகள் நடத்தப்பட்டு அவர்களில் 4 பேர் தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் நிரந்தமரகப் பணியாற்றுவதற்கான நியமனக் கடிதங்கள் விரைவில் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவித்தார். (4-ரி)

# சம்பள முரண்பாடுகளைத் தீர்க்குமாறு உடல்கல்வி ஆசிரியர்கள் கோரிக்கை

யாழ்ப்பணாம், ஒக்.2

உடற்கல்வி ஆசிரியர் வேதனத்தில் உள்ள மாறுபாடுகளால் வடக்கில் பணியாற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பளமட்ட வேறுபாடுகளால் பாதிக்கப்பட்ட எமக்கு நிவாரணம் பெற்றுத்தர வடக்கு மாகாண உடற்கல்வி ஆசிரியர் சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன் முன்வரவேண்டும் என பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கடிதம்மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உடற்கல்வி ஆசிரியர்கள் டிப்ளோமா சான்றிதழுக்கான அங்கீகாரத்தை பெற்றுத்தருமாறு சங்கத்திடம் கோரிக்கை எனும் விடயக் கோரிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: உடற்கல்வி டிப்ளோமா பட்டத்தைப் பெற்று ஆசிரிய நியமனம் பெற்றவர்களின் ஒரு பகுதியினர் இரண்டு வருட டிப்ளோமா பட்டம் பெற்றவர்கள் மூன்று வருட டிப்ளோமாப் பட்டம் பெற்றவர்கள் என உள்ளனர். இரண்டுவருட டிப்ளோமா பட்டம்பெற்றவர்கள் என்.வி.கியு தரம் 6இல் உள்ளதால், ஆசிரியர் சம்பளத் திரட்டு வகுப்பு 3 தரம் 1(இ) இல் ஆரம்ப சம்பளத்தைப் பெறத் தகுதியுடைவர்கள். அதேபோல மூன்றுவருட டிப்ளோமா பட்டத்தைப் பெற்றவர்கள் என்.வி.கியு தரம் 7இல் உள்ளதால் ஆசிரிய சம்பளத் திரட்டு வகுப்பு 3 தரம் 1(ஆ) பகுதியில் உள்வாங்கப்பட வேண்டியவர்கள்.

எனினும் 2வருட. 3வருட டிப்ளோமாப் பட்டங்களை உடைய உடற்கல்வி ஆசிரியர்கள் எவரும் உரிய சம்பள படி நிலைகளில் வைக்கப்படாது அலைக்கிக்கப்படுகின்றனர். எனவே, உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர்சங்கத்தலைவர் ப.தர்மகுமாரன் உரிய தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். சம்பள நிலை ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து உரிய படிநிலைகளில் வைக்க மாகாண கல்வி அதிகாரிகள், செயலாளர்கள், மாகாண உறுப்பினர்களுடன் அவர் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (ய-50)

# வடக்கு - கிழக்கு இணைப்போ கூட்டாட்சியோ கிடையாது அனைவரும் அதற்கு இணக்கம்

## இப்படிக் கூறுகிறார் மனோ கணேசன்



கொழும்பு, ஒக். 3


வடக்கு - கிழக்கு இணைப்பு மற்றும் கூட்டாட்சித் தீர்வை வழங்குதல் என்ற யோசனை புதிய அரசமைப்பில் ஒருபோதும் உள்வாங்கப்படாது என்றும் அவ்வாறு உள்வாங்குவதில்லை என்று அனைவரும் இணக்கம் கண்டுள்ளனர் என்றும் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தெற்கில் சிங்களவர்கள் பெரும்பான்மையாகவும் வடக்கு கிழக்கில் தமிழர்கள் பெரும்பான்மையாகவும் வாழ்கின்றனர். இவர்கள் எல்லோரும் ஒன்றிணைந்துதான் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். சிங்கள மக்களின் உள்ளத்தை வெற்றி கொண்டால்தான் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பதைத் தமிழர்கள் புரிந்துகொள்ள வேண்டும். தமிழர்களும் இந்த நாட்டு மக்கள்தான். அவர்களுக்கும் சம உரிமை உண்டு என்பதை சிங்களவர்கள் உணர வேண்டும். இவ்வாறான உணர்வைக் கட்டியெழுப்பும் வகையில்தான் புதிய அரசமைப்பு உருவாக்கப்படவுள்ளது. அதில் பொய் இல்லை. மறைப்பதற்கு எதுவுமில்லை. எல்லாமே வெளிப்படை.

சில விடயங்கள் தொடர்பில் இணக்கப்பாடு உண்டு. குறிப்பாக, வடக்கு கிழக்கை இணைப்பதில்லை மற்றும் கூட்டாட்சித்தீர்வைக்கொண்டு வருவதில்லை என்று அனைவரும் இணங்கி இருக்கின்றனர். அந்த உண்மை தெரிந்து கொண்டு மகிந்த தரப்பினர் பொய் கூறித் திரிகின்றனர். வடக்குகிழக்கு இணைக்கப்படும் என்றும் கூட்டாட்சி அடிப்படையில் தமிழீழம் உருவாக்கப்படும் என்றும் பொய் கூறுகின்றனர். நான் மிகவும் பொறுப்புடன் கூறுகின்றேன். இந்த விடயங்கள் இடம்பெறவேமாட்டா.

இது தொடர்பில் இன்னும் விரிவாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து பேசவிருக்கின்றோம். அந்தப் பேச்சுக்களில் எட்டப்படும் இறுதித் தீர்மானங்களைக் கொண்டே அரசமைப்பு சட்டவரைவு உருவாக்கப்படும். அது நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட பின்னர் மக்களிடம் செல்வோம். பொது வாக்கெடுப்பை நடத்துவோம். அந்த அரசமைப்பு தேவையா இல்லையா என்று இறுதியாக மக்களே தீர்மானிப்பர் - என்றார். (5,3)



# கூட்டாட்சிக்கு ஒருபோதும் இடமில்லை!

## சிவாஜிலிங்கம் கனவுலகில் வாழ்கிறார் என்கிறார் கம்மன்பில

கொழும்பு, ஒக். 3

புதிய அரசமைப்பு இயற்றப்பட்ட பின்னர் தனிநாடு உதயமாகிவிடும் என்ற கனவிலேயே வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் வாழ்கிறார். அவரது கனவு ஒருபோதும் நனவாகாது. கூட்டாட்சியை உள்ளடக்கிய அரசமைப்பை உருவாக்குவதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம், என்று தூய ஹெல உறுமயவின் தலைவரான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அந்தக் கட்சியின் பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தனிநாடு மலரும் என்ற கனவில் வாழும் சிவாஜிலிங்கம் ரோஹிங்ய முஸ்லிம்களை இலங்கை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கூறிவருகிறார். ரோஹிங்ய அகதிகளை வில்பத்துவில் குடியேற்றும் வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் திட்டம் ஒருபோதும் நடைமுறைச் சாத்தியமாகாது.

புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்று அரசு அறிவித்துவந்தாலும் அது இன்னும் இறுதிப்படுத்தப்படவில்லை. புதிய அரசமைப்பு இன்று வரும், நாளை வரும் எனக் கூறியே அரசு காலத்தை இழுத்தடித்துவருகின்றது.

இந்த நிலையில்தான் தனி ஈழம் உருவாக்கப்பட்டுவிட்டது என்றும், அதற்கான தனி தேசியக் கொடியும், தேசிய கீதமும் இயற்றப்பட்டுவிட்டது என்றும் சிவாஜிலிங்கம் கனவுகாண்கிறார். வடக்கு மாகாண சபையின் கீழ் தனி இராச்சியமொன்று இயங்குகின்றது என்ற கனவுலகிலிருந்து அவர் இன்னும் மீளவில்லை - என்றார். (5)

# மக்களுக்கு உடன்பாடில்லாத தீர்வு எதற்கு?

## இப்படிக் கேள்வி எழுப்புகிறார் மேல் மாகாண ஆளுநர்

கொழும்பு, ஒக். 3

கூட்டாட்சி முறைமைக்கு எந்தவொரு கட்சிக்கும் விருப்பமில்லை. மக்களுக்கும் விருப்பமில்லை. ஒட்டுமொத்தமாக அனைவரும் வெறுக்கும் ஒன்று எப்படி அரசியல் தீர்வாக வரும்? ஒற்றையாட்சியின்கீழ்தான் தீர்வு என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. இவ்வாறு மேல் மாகாண ஆளுநர் ஹேமகுமார நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் காணப்படும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காகவே கூட்டு அரசு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அரசால் கொண்டுவரப்படவுள்ள புதிய அரசமைப்பு இந்தத் தீர்வைக் கொண்டு வரும்.

நாட்டின் பாதுகாப்புக்கு இறைமைக்கு ஆபத்து ஏற்படாவண்ணம் ஒற்றை ஆட்சியின்கீழே தீர்வு முன்வைக்கப்படும். ஒருபோதும் கூட்டாட்சி முறைமையின்கீழ் தீர்வு வராது. கூட்டாட்சி முறைமைக்கு எந்தவொரு கட்சிக்கும் விருப்பமில்லை. மக்களுக்கும் விருப்பமில்லை. ஒட்டுமொத்தமாக அனைவரும் வெறுக்கும் ஒன்று எப்படி அரசியல் தீர்வாக வரும்? ஒற்றையாட்சியின்கீழ்தான் தீர்வு என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது.

தீர்வு வழங்கப்படும்போது எந்தவோர் இனமும் பாதிக்கப்படக் கூடாது. அவ்வாறு பாதிக்கப்பட்டால் அது நிலையான தீர்வாக அமையாது. தீர்வு என்ற பெயரில் இருக்கின்ற பிரச்சினையை மேலும் அதிகரித்துக் கொண்டதாக அமைந்துவிடும்.

கூட்டு அரசு இருக்கின்றபோதுதான் இவ்வாறான பிரச்சினைகள் அனைத்தையும் தீர்த்துக்கொள்ள முடியும். எதுவாக இருந்தாலும் அரசுடன் பேசி முடிவெடுக்கக்கூடிய சனநாயகம் இப்போது உள்ளது. இதனால் கிடைக்கப்போகும் தீர்வு அனைவரையும் திருப்திப்படுத்தும் வகையில் அமையும் என்பதில் சந்தேகமில்லை - என்றார். (5,3)

# மகிந்த அணியின் பரப்புரைக்கு பதிலடி கொடுக்க அரசு நடவடிக்கை

## புதிய அரசமைப்புத் தொடர்பில் ராணுவத்துக்கு விளக்கம்

புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையானது நாட்டைக்கூறுபோடுவதற்கான ஆரம்பக்கட்டம் என்றும், அது படையினருக்கும் பேராபத்தை ஏற்படுத்திவிடுமென்றும் மகிந்த அணியால் முன்னெடுக்கப்பட்டு வரும்பரப்புரைப்போரை முறியடிக்கும் முயற்சியில் அரசு தீவிரமாக இறங்கியுள்ளது.

இதன் ஆரம்பக்கட்ட வியூகமாக இடைக்கால அறிக்கை தொடர்பில் முப்படையினருக்குத் தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் சட்டப்பணியகத்தின் உதவியுடனும், சட்டவல்லுநர்களின் பங்களிப்போடும் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்த வேலைத்திட்டத்தின் ஆரம்பக்கட்ட நடவடிக்கையாக அண்மையில் இராணுவத்தின் ஒரு பிரிவினருக்கு கருத்தரங்கொன்று நடத்தப்பட்டுள்ளது.

இதன் இரண்டாம் கட்ட நிகழ்வு அடுத்தவாரம் இடம்பெறவுள்ளது. கடற்படை, வான்படைகளின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு புதிய அரசமைப்பு சம்பந்தமாகத் தெளிவுபடுத்தப்படவுள்ளது என்று அறியமுடிகின்றது.

வழிநடத்தும் குழுவின் இடைக்கால அறிக்கை வெளிவந்துள்ள நிலையில், அதற்கு எதிரான பரப்புரையை மகிந்த தலைமையிலான பொதுஎதிரணியும், கடும்போக்குடைய சிங்கள தேசிய வாத அமைப்புகளும் ஆரம்பித்துள்ளன.

'எலிய' (வெளிச்சம்) எனும் அமைப்பொன்றை உருவாக்கி அதன் ஊடாக புதிய அரசமைப்புக்கு எதிரான போரை முன்னாள் பாதுகாப்புச்செயலர் கோத்தபாய ராஜபக்சவும் ஆரம்பித்துள்ளார்.

புதிய அரசமைப்பு நாட்டைக் கூறுபோடும் என்றும், படையினர் பலிக்கடாக்களாக்குவதற்கு அது வழிசமைத்துக் கொடுத்துவிடும் என்றும் சிங்கள மக்கள் மற்றும் படையினர் மத்தியில் அச்சத்தை உருவாக்கும் வகையில் மகிந்த அணியின் பரப்புரை அமைவதால் அது அரசுக்கு சிங்கள மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பொது வாக்கெடுப்புக்குச் சென்றால் அது சிக்கலாக அமைந்து விடுமென்பதாலேயே புதிய அரசமைப்பு எதற்காக கொண்டுவரப்படுகின்றது? நோக்கம் என்ன என்று படையினருக்கு விளக்கமளிக்கப்பட்டு வருகின்றது.

பிக்களுக்கும் தெளிவுபடுத்தப்படவுள்ளது. இதற்கான பொறுப்பு பௌத்தசாசன அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (5)

# கூட்டாட்சிக்கு இடமில்லை என்றால் எமது வேணவாக்கள் எப்படி நிறைவேற்றப்படும்?

## கேள்வி எழுப்புகிறார் எம்.கே.சிவாஜிலிங்கம்



யாழ்ப்பாணம், ஒக். 3

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கூட்டாட்சிக்கு இடமில்லை என்கிறார். இந்த நிலையில் எமது மக்கள் ஏற்றுக் கொள்ளும் எமது மக்களின் வேணவாக்களை முழுமையாக்கும் புதிய அரசமைப்பு எப்படி உருவாகும் என்பதே சந்தேகமாக உள்ளது. இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வெளியாகியுள்ள இடைக்கால அறிக்கை தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரின் பின்னர் வடக்கு கிழக்கில் நடைபெற்ற தேர்தல்களில் எல்லாம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த தேர்தல் அறிக்கைக்கு தமிழ் மக்கள் வாக்களித்தனர். தேர்தல் அறிக்கையில் கூட்டமைப்பு முன்வைத்த விடயங்கள் இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

புதிய அரசமைப்பு, ஏற்கனவே உள்ள 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு வர்ணம் பூசியதாகவே உள்ளது.

மக்களின் வேணவாக்களை உள்ளடக்கியாகதாகவே புதிய அரசமைப்பு இருக்க வேண்டும். சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்குத் தேவையான அல்லது ஆட்சியில் இருப்பவர்களுக்குத் தேவையனதாகவே வெளிவந்துள்ள இடைக்கால அறிக்கை அமைந்துள்ளது. இதற்கு தமிழ் மக்கள் ஆதரவளிக்க முடியாது.

எது எப்படியிருப்பினும் தற்போது வெளிவந்துள்ளது இடைக்கால அறிக்கை மட்டுமே. இதற்கு அப்பால் நிறைய விடயங்கள் உள்ளது. இன்னும் எமக்கான வழிகள் உள்ளன -என்றார். (5,8)

# வரவு – செலவுத்திட்டத்துக்கு ஆலோசனைகளைப் பெறக் குழு

## நிதி அமைச்சு நியமித்தது

கொழும்பு, ஒக். 3
2018ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்துக்கு ஆலோசனைகளையும் கருத்துக்களையும் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் சிறப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக நிதி மற்றும் ஊடக அமைச்சு அறிவித்துள்ளது.
நிதி மற்றும் ஊடக அமைச்சு ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
2018ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் அடுத்த மாதம் 9ஆம் திகதி நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவால் சமர்ப்பிக்கப்படவுள்ளது. வரவு-செலவுத் திட்டத்துக்கு உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பான ஆலோசனைகளையும் கருத்துகளையும் பெற்றுக்கொள்ளவதற்கு சிறப்பு நிபுணத்துவத்துடனான அதிகாரிகளை கொண்ட சிறப்புக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் 15ஆம் திகதி வரைக்கும் கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (5,31)

ரோஹிங்யர்கள் மீதான தாக்குதல்

# திட்டமிட்டு அமைதியை சீர்குலைக்கும் செயல்

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 3
ஐ.நா. அகதிகளுக்கான மனிதாபிமான முகவரகத்தின் பாதுகாப்பின் கீழ் தங்கியிருந்த ரோஹிங்ய முஸ்லிம் ஏதிலிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்டமை திட்டமிட்டு அமைதியைச் சீர்குலைக்கும் சம்பவமாகும். பன்னாட்டு ரீதியில் நாட்டுக்கு அவப் பெயரைக் கொண்டு வரும் இத்தகைய சீர்குலைவுகளுக்கு இடமளிக்கப் போவதில்லை. இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஏதிலிகள் மீது அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவம் மிகத் திட்டமிட்டு நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும், அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தும் நடவடிக்கை. இதில் மாற்றுக் கருத்தில்லை. இந்த விடயத்தில் இன்னும் எத்தனை பேர் கைது செய்யப்படுவர் என்று துல்லியமாக கூற முடியாது. இன்னும் பலர் கைது செய்யப்படுவர்.
அவர்களில் தேரர்களும் உள்ளடங்குகின்றனர். அவர்களை கண்டிப்பாக கைது செய்வோம். அதில் மாற்றுக் கருத்து இல்லை. அதன் பின்னர் இந்த சதி நடவடிக்கையின் பின்னணி நோக்கம் குறித்து துல்லியமாக வெளிப்படுத்த முடியும் - என்றார். (5,31)

# பொரல்லை சிறைச்சாலை விரைவில் அகற்றப்படும்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 3
பொரல்லை சிறைச்சாலை அகற்றப்பட்டு நகர அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படும். 2020ஆம் ஆண்டில் பொரல்லையில் 20 ஆயிரம் வீடுகள் பொதுமக்களுக்கு கையளிக்கப்படும். இவ்வாறு நகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.
பொரல்லை பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மேல் மாகாண அபிவிருத்தி தொடர்பில் நாம் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றோம். பொரல்லை, கொலன்னாவை உள்ளிட்ட பகுதிகளின் புதிய குடியிருப்புகளை அமைக்கும் திட்டத்தை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.
அனைத்து வேலைத்திட்டங்களும் பொரல்லை நகரை மையமாகக் கொண்டே முன்னெடுக்கப் பட்டு வருகின்றது. சரியான முறைமையில் நகர அபிவிருத்தி வேலைத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டிய தேவை உள்ளது.
காலி முகத்திடலில் முன்னெடுக்கும் நகர அபிவிருத்திகள் பலமாக முன்னெடுக்கப்படுகின்றன. இது பன்னாட்டுச் சமூகத்துக்கு நிலம் விற்கப்படும் வேலைத்திட்டம் அல்ல - என்றார். (5-31)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**கனகம்மா இரத்தினசபாபதி**
திதி - பூர்வபக்க திரியோதசி

பாசமாய் என்றும் பழகுதற்கு இனியவளாய்
ஊரையும் உறவையும்
உபசரித்த எம் குலவிளக்கே
ஆண்டொன்று ஓடி எம்முன் மறைந்தாலும்
காண்கின்றோம் உம்மை எம் முன்னே–
என்றென்றும்
உங்கள் ஆத்மா சாந்தி பெறப்
பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 17.03.1932
இறப்பு 14.10.2016

உங்கள் நினைவில் வாழும்
குடும்பத்தினர்.
நயினாதீவு 07.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 . 08 . 1949



மறைவு 03 . 10 . 2016

**நவரட்ணம் விமலாதேவி**
"சீவியத்தில் நேசித்தோம் மரணத்திலும் மறவோம்"
ஓர் ஆண்டு ஆனாலும் அழியாத
உங்கள் நினைவுகள் எங்களோடு சீவிக்கும்
எங்கள் அன்புத் தாயே! உங்கள் ஆன்மா
நித்திய இளைப்பாற்று அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
விமலா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்

காலானை,
பத்தமேனி, அச்சுவேலி.
கணவர், பிள்ளைகள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
077 672 7577

### 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 . 09 . 1956



மறைவு 18 . 09 . 2002

**திருமதி புஸ்பராணி வேலுப்பிள்ளை**
திதி : திரியோதசி
அம்மா என்பதற்கு முழு அர்த்தமான
எம் அம்மாவே.....
கஸ்ரப்பட்டு எம்மை வளர்த்தெடுத்த
எம் தெய்வமே
எமது உயர்ச்சியை கண்டு மகிழ்வடைய
உன்னை காலன் விடவில்லையே
நீ எங்கிருந்தோ பார்க்கின்றாய் என்ற
நம்பிக்கையில் உன் நினைவுடன்

கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி.
உங்கள் பிரிவால் தவிக்கும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



சமூகசேவகர்
அமரர் **தம்பிராசா பாலேந்திரன்**
(பாலுமாமா)
தோற்றம் 15.02.1961
மறைவு 14.10.2016
திதி : திரயோதசி,03.10.2017

ஓராண்டு சென்றாலும் நாளாக நாளாக
தீராது உங்கள் பிரிவின் வலி...
ஆசைமுகம் மறைந்து அவலம்தான் சூழ்ந்ததுவோ?
பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் திகழ்ந்த உங்களை
இனி எப்போது காண்பது...

என்றும் அழியா உங்கள் நினைவுகளுடன்
கொம்மந்தறை,
உடுப்பிட்டி வடக்கு.
குடும்பத்தினர்.

### 16 ஆம் ஆண்டு பிரிவின் நினைவலைகள்

03.10.2017



வட இலங்கை சர்வோதய ஸ்தாபகரும் ஜீவதானியும் சமூக சேவையாளருமாகிய தொண்டர்
**கந்தையா திருநாவுக்கரசு**
திரு முகிழ்ப்பு 01.03.1939
திரு அவிழ்ப்பு 03.10.2001

"என் கடன் பணி செய்து கிடப்பதே"
"எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் – மக்கள்
இனமீன்ற தமிழ் நாடு தனக்கும் – என்னால்
தினையளவு பயனேனும் கிடைக்குமென்றால்
செத் தொழியும் நாளெனக்குத் திருநாளாகும்"
இறுதிமூச்சு வரை வாழ்ந்து காட்டி விட்டுச் சென்ற எம் தந்தையே!
நீங்கள் மறைந்து ஆண்டுகள் பதினாறு சென்றாலும் உங்கள்
ஆத்மா சிவயோக சுவாமிகளின் திருவடி நிழல் நிற்கப்
பிரார்த்திக்கின்றோம்.

03.10.2017 முற்பகல் 10.30 மணிக்கு வட இலங்கை சர்வோதய புஸ்பா மணி மண்டபத்தில் நடைபெறவுள்ள தொண்டரின் நினைவு தின நிகழ்வில் கலந்து கொண்டு மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறும் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சர்வோதய சேவை வளாகம்,
புங்குடுதீவு – 03
வட இலங்கை சர்வோதய
குடும்பத்தினர்.

# மகிந்தவும் மைத்திரியும் கைகோர்க்க சு.க. செயலர் துமிந்தவை நீக்கவேண்டும்

## அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளரின் கோரிக்கை இது

கொழும்பு, ஒக். 3

மகிந்த அணியும் மைத்திரி அணியும்இணையவேண்டு மென்றால் துமிந்த திசா நாயக்கவைச் சுதந்திரக் கட்சியின் செயலர் பதவியில் இருந்து நீக்கி மூத்த உறுப்பினர் ஒருவரை அந்த இடத்துக்கு நியமிக்க வேண்டும் என்று அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டு அரசில் இணைந்து இருக்கின்றபோதிலும் தொடர்ந்து இது சாத்தியப்படாது. 2020ஆம் ஆண்டு தனித்து ஆட்சி அமைக்க வேண்டும் என்பதுதான் கட்சியின் திட்டம். அதற்குத் தடையாக இருப்பது சுதந்திர கட்சி இரண்டாகப் பிளவுபட்டு இருப்பதுதான்.

மைத்திரி அணி என்றும் மகிந்த அணி என்றும் கட்சி இரண்டாகப் பிரிந்து செயற்படுவது கட்சியின் எதிர்காலத்துக்கு ஆபத்தை ஏற்படுத்தும். 2020ஆம் ஆண்டு தனித்து ஆட்சி அமைக்க முடியாமல் போய்விடும். இரண்டு தரப்பும் முதலில் இணைய வேண்டும். இணைவதற்குத் தடையாக இருக்கின்ற விடயங்கள் என்னவென்று தேடிப் பார்த்து அவற்றை நீக்க வேண்டும்.

துமிந்த திசாநாயக்க சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலராக இருப்பதைத்தான் இரண்டு தரப்பினரும் இணைய முடியாமல் இருப்பதற்கான தடையாக நான் பார்க்கின்றேன். முதலில் அவரை அந்தப் பதவியில் இருந்து நீக்கி மூத்த உறுப்பினர் எவரையாவது நியமிக்க வேண்டும்.

துமிந்தவுக்குத் தேசிய அமைப்பாளர் போன்ற வேறு பதவிகளைக் கொடுக்கலாம். உண்மையில் துமிந்த துணிச்சல்மிக்க அரசியல்வாதி. அவர் பயப்படாமல் கட்சியில் இருந்து மைத்திரியுடன் வெளியேறினார். அவரது தந்தை மிகவும் சிறந்த அரசியல்வாதி. அவர் இப்போது உயிருடன் இருந்திருந்தால் அநேகமாக இந்தக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டிருக்காது. அவரிடம் இருந்து மகிந்த முதலமைச்சர் பதவியைப் பறித்தது மிகவும் மோசமான அநியாயமான செயலாகும்.

மகிந்த செய்த இந்தச் செயலுக்காகத் துமிந்த கட்சியில் இருந்து விலகி மகிந்தவைப் பழிவாங்கிவிட்டார். ஆனால், தொடந்து அந்தப் பொறாமையை மனதில் வைத்துக்கொண்டு செயற்பட முடியாது. கட்சியை மீண்டும் இணைக்க வேண்டுமென்றால் மகிந்த என்ற பாத்திரத்தைத் தவிர்க்க முடியாது. எமது மனதில் இருக்கின்ற தனிப்பட்ட கோபத்துக்கு முன்னுரிமை கொடுத்து கட்சியைச் சீரழிக்க கட்சியின் ஒற்றுமையைச் சிதைக்க முடியாது - என்றார். (5.3)

# நிறம் மாறும் தேங்காய்

கொழும்பு, ஒக். 3

பாவனையாளர்களுக்குக் குறைந்த விலையில் தேங்காய் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெங்கு உற்பத்திச் சபை தெரிவித்துள்ளது.

"தேங்காயின் விலை 65 ரூபாவாக நேற்று முதல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மோசடிகளைத் தவிர்ப்பதற்காக தேங்காய்க்கு வர்ணம் பூசப்பட்டே விநியோகிக்கப்படும்" என்று தெங்குச் சபைத் தலைவர் கபில யகன்தாவல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குறைந்த விலையில் விற்கப்படும் தேங்காயைக் கொள்வனவு செய்து அதிக விலையில் விற்பனை செய்ய முயற்சிக்கும் வர்த்தகர்களைத் தடுக்கவும் சிறப்புத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் ஊடாக கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நேற்றுக் காலை குறைந்த விலையில் தேங்காய் விநியோகம் இடம்பெற்றதுடன், ஒருவர் 10 தேங்காய்கள் வரை கொள்வனவுசெய்ய முடியும். மோசடியைத் தடுப்பதற்காக வர்ணம் பூசப்பட்டே இந்தத் தேங்காய்கள் விநியோகிக்கப்படுகின்றன. இதனால், அந்தத் தேங்காய்களை மீண்டும் விற்பனைசெய்ய முடியாது - என்றார்.

இந்தக் குறைந்த விலையில் சதொச விற்பனை நிலையங்களில் தேங்காய்கள் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெங்கு உற்பத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது. நடமாடும் லொறிகள் ஊடாகத் தேங்காய் விற்பனைசெய்யும் நடவடிக்கையை இன்னும் இலகுபடுத்தும் நடவடிக்கைகளை எதிர்வரும் நாள்களில் முன்னெடுக்கவுள்ளதாக அந்தத் திணைக்களம் அறிவித்துள்ளது. (5)

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை ஆச்சிப்பிள்ளை



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை ஆச்சிப்பிள்ளை நேற்று (02.10.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - நல்லபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முருகேசு - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முருகேசு பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் இராசலட்சுமி, குணலட்சுமி (நோர்வே), பத்மநாதன் (நில அளவை திணைக்களம் - யாழ்ப்பாணம்), சிவனேசன் (லண்டன்), குலேந்திரராசா (குலம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பற்பளாசிங்கம், முருகானந்தன், சிவரஜனி, கலாநாயகி, நந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் யசோதரன், புவிதா, கீத்தா, ஆதீபன், பார்த்தீபன், ஜெயதீபன், அற்புதன், தாமரை ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடி நிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பண்ணாகம்,**
**சுழிபுரம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# சீனப் பெண்ணின் செயலால் பொலிஸாருக்குத் தலையிடி

கடவுச்சீட்டை இரண்டு லட்சம் ரூபாவுக்கு அடகு வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்ட சீனப்பெண்ணால் பொலிஸாருக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. தனது கடவுச்சீட்டை யாரிடம் அடகு வைத்தார் என்பது தெரியாத நிலையில், அதை தேடும் பணியில் தற்போது பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். சூதாட்டத்தில் ஈடுபட்ட பெண் அதில் தோல்வியுற்ற காரணத்தினால் கடவுச்சீட்டை ஒருவரிடம் அடகு வைத்துள்ளார். ஆள் அடையாளத்தை நிரூபிக்க எந்த ஆவணங்களும் இல்லாத நிலையில் சீனப் பெண் கைது செய்யப்பட்டார். (5)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 03.09.2017 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

**அமரர்**
**சின்னத்துரை அண்ணாமலை**
**(அனிசன்)**

ஆசிரியர்
(யா/பாசையூர் சென் அன்ரனிஸ் மகளிர் கல்லூரி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (03.10.2017) செவ்வாய்க்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எதிர்வரும் 05.10.2017 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**நாவற்குழி கிழக்கு,**
**தச்சன் தோப்பு, கைதடி.**

**குடும்பத்தினர்.**
**077 031 3514**

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
14 . 08 . 1948



**மறைவு**
30 . 09 . 2017

### சுப்பிரமணியம் சிவலோகநாதன்

**(சொக்கர் - சிவா - த பினான்ஸ் கொம்பனி லிமிட்டெட்)**

கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவலோகநாதன் 30.09.2017 சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - செல்வரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், அருளேஸ்வரியின் (கோண்டாவில்) அன்புக் கணவரும், சிந்துஜா, கண்ணன் (நோர்வே), அனுசியா (நோர்வே), சாந்தன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகராணி (கனடா), உலகநாதன் (கனடா), வைகுந்தா (கனடா), ஜெகநாதன் (நோர்வே), கமலநாதன் (நோர்வே), வேதநாயகி (கனடா), சுபந்தினி (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரரும், சத்தியலிங்கம் (வீதி அபிவிருத்தி அதிகார சபை - மதவாச்சி), சுரேஸ்நாதன் (நோர்வே), சிவதுர்க்கா (நோர்வே), அபிராமி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஶ்ரீஸ்கந்தராசா ஶ்ரீபாலச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும், சஜித்தா (நோர்வே), யஸ்வந் (நோர்வே), அஸ்மிதா (மாணவி - வவுனியா இறம்பைக்குளம் மகளிர் தேசிய பாடசாலை), கிஷானா (நோர்வே), ஹஷ்வினி (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கலைவாணி வீதி,**
**கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**0212227741**

# கருணாவை வளைத்து கிழக்கில் குதிக்கிறது ராஜபக்ச அன் கோ

கொழும்பு, ஒக். 3

வடக்கில் மூன்று நாள்கள் தீவிர அரசியல் பரப்புரையில் ஈடுபட்ட முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதான அரசியல் செயற்பாட்டாளருமான பசில் ராஜபக்ச அடுத்த மாதம் கருணா அம்மான் என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தலைமையில் கிழக்கு மாகாணத்தில் களமிறங்கவுள்ளார்.

2018ஆம் ஆண்டு ஜனவரியில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த அரசு தயாராகிவரும் சூழலில் 'தாமரை மொட்டு' சின்னத்தில் வாக்குகளை வேட்டையாட முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அணியினர் நாட்டின் நாலாபுறத்திலும் தீவிர பரப்புரையில் ஈடுபட்டு, அரசியல் செயற்பாட்டாளர்களையும் வளைத்துப்போட்டுவருகின்றனர்.

அடுத்த மாதம் கிழக்கில் முன்னாள் பிரதி அமைச்சரும் விடுதலைப்புலிகள் அமைப்பின் இரண்டாம் நிலைத் தளபதியாக இருந்தவருமான கருணா அம்மான் தலைமையில் தீவிர அரசியல் பரப்புரையை மேற்கொள்ள பசில் ராஜபக்ச களமிறங்கவுள்ளார் எனவும் அறியமுடிகின்றது. (5)

# இலங்கைத் தமிழர் ஆஸி. முகாமில் சாவு



கொழும்பு, ஒக். 3

மனுஸ் தீவில் உள்ள ஆஸ்திரேலிய குடிவரவுத் தடுப்பு முகாமில், இலங்கைத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பப்புவா நியூகினியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கைத் தமிழரான 32 வயதுடைய ஆண் ஒருவரே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் மருத்துவமனையில் தனது உயிரை மாய்த்துக் கொண்டார் என்று ஏதிலிகள் நடவடிக்கைக் கூட்டணியைச் சேர்ந்த இயன் ரின்ரோல் தெரிவித்துள்ளார்.

மருத்துவமனையின் சமையல் கூடம் அருகே இவரது உடல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மனுஸ் தீவு முகாமில், இரண்டு மாதங்களில் இடம்பெற்றுள்ள இரண்டாவது உயிர் மாய்ப்பு சம்பவம் இது என்றும் அவர் கூறினார்.

மனுஸ் தீவு முகாமில், இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 700 ஆண் புகலிடக் கோரிக்கையாளர்கள் ஆஸ்திரேலிய அரசினால் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த நான்கு ஆண்டுளுக்கு முன்னர் இந்த முகாம் திறக்கப்பட்ட பின்னர், இடம்பெற்றுள்ள ஆறாவது உயிரிழப்பு இதுவாகும். (5)

# நடன ஆசிரியையின் உயிர் பயிற்சி அரங்கில் பிரிந்தது

கொழும்பு, ஒக். 3

சிறுவர் தினத்துக்காக மாணவர்களுக்கு நடனம் பயிற்றுவித்த ஆசிரியை மேடையிலேயே உயிரிழந்தார்.

மெனிக்திவெல்ல மத்திய மகா வித்தியாலயத்தில் கடமையாற்றும் 45 வயதான தீபா குமாரி குலதுங்க என்ற ஆசிரியையே உயிரிழந்துள்ளார்.

ஆசிரியையின் உயிரிழப்புத் தொடர்பில் சரியான காரணங்களைக் கூற முடியாத காரணத்தினால் உடல் பாகங்களைப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்குமாறு கண்டி மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி எம். சிவசுப்ரமணியம் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆசிரியை புற்று நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார் எனவும், நீண்ட காலம் அதற்காகச் சிகிச்சை பெற்று வந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. புற்று நோய் காரணமாக ஆசிரியை உயிரிழந்திருக்கலாம் என்று குறிப்பிடப்படுகிறது. (5)

# மன்னாரில் சூரியசக்தி திட்டத்துக்கு அமைச்சர் பதியுதீன் கடும் எதிர்ப்பு



கொழும்பு, ஒக். 3

மின்சாரத் தேவைக்காக மன்னாரில் நூறு மெகாவோற் சூரிய சக்தி மின்சாரத்தைத் தயாரிப்பதற்கு மின்சக்தி அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கைக்கு அமைச்சரவையில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தால் மன்னாரில் சுற்றாடலுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுமெனவும் இந்தத் திட்டத்துக்குச் சமயத் தலைவர்களும் பொதுமக்களும் ஆட்சேபம் தெரிவித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மின்சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய வருகை தராததால் பதில் அமைச்சர் அஜித் பீ.பெரேரா இந்தத் திட்டத்திற்கான பிரேரணையை அமைச்சரவையில் சமர்ப்பித்தார்.

இதனைத் தொடர்ந்து தனது கடும் ஆட்சேபத்தைத் தெரிவித்த அமைச்சர் பதியுதீன் இந்தத் திட்டம் உடனடியாக நடைமுறைப்படுத்தக் கூடாதெனவும் வலியுறுத்தியுள்ளார். (5)


**Chundikuli Girls' College,**
**WANTED**

Applications are invited from suitable Candidates (Females) for the following vacancies

1. Teacher of Health & Physical Education (English medium)
2. Physical Training Instructor

*Those who have a degree / Teacher training certificate/ Diploma in the relevant field would be given preference.*

*Applications close on* ***14th October 2017****. Only suitable candidates will be called for an interview.*

*Principal*
*Chundikuli Girls' College*
*Jaffna*
*Te.: 021 222 2338* *E.mail: forwardcgc@yahoo.com*


# மாகாண தேர்தலுக்கான சாத்தியம் 2018ஆம் ஆண்டிலும் மிகக் குறைவு

## ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 3

பதவிக் காலம் முடிவடைந் துள்ள மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலையும் அடுத்த ஆண்டில் நடத்துவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே இருப்பதாகத் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கிழக்கு, வடமத்திய, சப்பிரகமுவ மாகாணசபைகளில் பதவிக் காலங்கள் முடிவடைந்துள்ளன. பதவிக் காலம் முடிவடையும் மாகோண சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டிய நிர்பந்தம் அரசுக்கு ஏற்பட்டிருந்தது. 20ஆவது திருத்தச் சட்ட வரைவின் ஊடாக அதனை ஒத்திப்போடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. உயர்நீதிமன்றத்தின் விளக்கத்தையடுத்து 20ஆவது திருத்தச் சட்டவரைவைக்கைவிட்ட அரசு, மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்து, சட்டவரைவை நிறைவேற்றியது. இதனூடாக மாகாணசபைகளுக்கான எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மாகாணசபைகளுக்கான தேர்தல் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெறும் என்று அரசு அறிவித்திருந்தது. இந்த விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளரிடம் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

'அடுத்த ஆண்டிலும் தேர்தல் நடப்பதற்கான சாத்தியம் 50 சதவீதத்துக்கும் குறைவாகவே உள்ளது. புதிய மாகாண சபை திருத்தச் சட்டத்தின் பிரகாரம் உத்தேசிக்கப்பட்டுள்ள எல்லை மீள் நிர்ணயக்குழுத் தேர்தல் தொகுதிகளை வரையறுக்கும் பணிகளை முடிக்க வேண்டும். அதன்பின் முழு விடயமும் மீளாய்வு செய்யப்பட்டு, குறைகள் திருத்தப்பட வேண்டும்.

இந்த நடைமுறைகள் அனைத்தும் முடிந்து அடுத்த வருடம் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது' - என்றார். (5)


**தவறிவிட்டது**

செபமாலை பீற்றர் பியன்வெனு என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல 572401448V) யாழ் நகரப் பகுதிக்கும் மானிப்பாய் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு :- 077 020 3447
077 020 4558



**பகுதிநேர வேலைவாய்ப்பு**

வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு
**காப்புறுதி ஆலோசகராக** யாழ்.மண்ணில் 50வருடங்களாகச் சேவையாற்றி வரும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்ற வாய்ப்பு.

- 1 வாரப் பயிற்சிக் காலத்தையுடையது.
- பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர் பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
- பணி நிலையங்கள்:

**யாழ்ப்பாணம், நெல்லியடி.**

**அடிப்படைத் தகைமைகள்**

- G.C.E (O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- 18 - 55 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை 20.10.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**விளம்பர இல: 5545**
**C/O உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**



**UK, CANADA வில் குறைந்த செலவில் Business Management கற்கைநெறியினை தொடர அரிய வாய்ப்பு**

- தலைசிறந்த கல்லூரி, பல்கலைக்கழக அனுமதிகள்
- எங்குமில்லாத மிகக் குறைந்த கட்டணங்கள் (மொத்தச் செலவு 15 இலட்சங்களுக்குள்)
- இலவச **IELTS,** விமானப்பயணச்சீட்டு
- பகுதி நேர வேலை வாய்ப்புக்கள்
- தங்குமிட வசதிகள்

வெள்ளி, சனிக்கிழமைகளில் இது தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். முன்பதிவினை மேற்கொண்டு நேரில் வரவும்.

**7 இலங்கையருக்கு மாத்திரமே இவ்வாய்ப்பு**
**விண்ணப்ப முடிவு திகதி - 11.10.2017**

**WINSTAR VISA CONSULTANTS**
106, தபாற்பெட்டிச் சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி.
**021 300 4641**

## அமெ. இலங்கை கடற்படை பயிற்சி திருகோணமலையில் நேற்று ஆரம்பம்

அமெரிக்க - இலங்கைக் கடற்படைகளுக்கு இடையிலான ஐந்து நாள் கூட்டுப் பயிற்சி திருகோணமலைத் துறைமுகத்தில் நேற்று ஆரம்பமாகியது.

கரட் 2017 எனப்படும் 'கப்பல் தயார் நிலை மற்றும் பயிற்சி ஒத்துழைப்பு2017' என்ற இந்தக் கூட்டுப் பயிற்சியை இலங்கைக் கடற்படையும், அமெரிக்காவின் பசுபிக் கடற்படையும் இணைந்து ஒழுங்கு செய்துள்ளன.

அமெரிக்க இலங்கைக் கடற்படைகள் ஆண்டு தோறும் கூட்டுப் பயிற்சிகளை நடத்தவுள்ளன. அதன் முதற்கட்டமாகவே இந்தப் பயிற்சி நேற்று ஆரம்பமாகியது. எதிர்வரும் 6ஆம் திகதி வரை இந்தக் கூட்டுப் பயிற்சிகள் இடம்பெறும்.

கடல்சார் பாதுகாப்பு முன்னுரிமைகள், படைகளுக்கிடையிலான இயங்குதன்மையை வலுப்படுத்தல், தெற்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளின் படைகளுக்கிடையில் நிலையான ஒத்துழைப்பை வலுப்படுத்தல் ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் இந்தப் பயிற்சிகள் இடம்பெறவுள்ளன.

இந்தப் போர்ப் பயிற்சியில் பங்கேற்க அமெரிக்க கடற்படையின் யு.எஸ்.எஸ். கொரனாடோ என்ற போர்க்கப்பல் திருகோணமலை துறைமுகத்துக்கு வந்துள்ளது. (5)

# தேர்தல்களை நடத்தாவிட்டால் தேர்தல் ஆணையாளர் எதற்கு ?

## மகிந்த அணியின் கேள்வி இது

கொழும்பு, ஒக். 03

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திப்போடும் அரசின் திட்டத்துக்குத் தேர்தல்கள் ஆணையாளர் துணை போகின்றார். அவரால் தேர்தலை நடத்த முடியாவிட்டால் உடன் பதவி விலக வேண்டும் என்று மகிந்த அணி தெரிவித்துள்ளது.



அந்த அணியின் பொலன்னறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொசான் ரணசிங்க தெரிவித்ததாவது:

இந்த அரசு சதித் திட்டங்கள் மூலமே அனைத்தையும் சாதித்துக்கொள்கிறது. ஆட்சியைக் கைப்பற்றியதும் சதி மூலம் தான் தேர்தல்களை ஒத்திப்போடுவதும் சதி மூலம்தான். 2020ஆம் ஆண்டு வரை தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கான ஏற்பாட்டைத்தான் இந்த அரசு செய்துகொண்டு போகிறது.

காலத்தை இழுத்தடிப்பதற்காக அந்தச் சட்டவரைவு இந்தச் சட்டவரைவு என்று சம்பந்தம் இல்லாமல் சட்டவரைவுகளைக் கொண்டு வருகிறது. இதற்குப் பின்னால் மக்கள் அலையத் தொடங்குகின்றனர். இந்த ஓட்டத்தில் 2020 வந்துவிடும். இது மிகவும் நுட்பமான சதி.

சுதந்திரக் கட்சியாலும் ஐக்கிய தேசியக் கட்சியாலும் தேர்தலை எதிர்கொள்ள முடியாது. அவர்கள் நிச்சயம் தோல்வியடைவர். தேர்தலை ஒத்திப்போடுவதற்கு இதுவே உண்மையான காரணம். மத்திய வங்கி ஊழலால் ஐக்கிய தேசியக் கட்சியால் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ள முடியாது. மறுபுறம் மகிந்த அணியின் வளர்ச்சியால் மைத்திரி தரப்பால் தேர்தலை எதிர்கொள்ளமுடியாது.

உரிய ஏற்பாடுகளைச் செய்து தந்தால் ஆட்டத்தை நடத்த முடியும் என்று தேர்தல்கள் ஆணையாளர் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றார்.

அவர் உண்மையில் அரசுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றார். உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திப்போடும் அரசின் திட்டத்துக்குத் தேர்தல்கள் ஆணையாளர் துணை போகின்றார். அவரால் தேர்தலை நடத்த முடியாவிட்டால் உடன் பதவி விலக வேண்டும். நாம் அவரை மதிக்கின்றோம். அவரது நற்பெயரை அவர் கெடுத்துக் கொள்ளாமல் பதவி விலகுவதே நல்லது - என்றார். (5,3)

### சரி செய்யப்படாத மன அழுத்தத்தினால் உருவாகக்கூடிய நோய்கள்

- இருதய நோய்கள்
- இழுப்பு / ஆஸ்துமா
- அதீத உடற்பருமன்
- தலையிடி
- உணவுக்குழாய், குடல் சம்பந்தமான பிரச்சினைகள் (குடற்புண்)
- மறதி நோய்
- வேகமாக முதுமையடைதல்
- வயதிற்கு முந்திய இறப்பு

– சாந்திகம்.

## மகிந்த அணியே மக்களை தொடர்ந்து அச்சமூட்டுகிறது

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதலைக் குற்றமாக அறிவிக்கும் சட்டவரைவு தொடர்பில் நாட்டு மக்களுக்கு ஒருவித சந்தேகமும் அச்சமும் ஏற்பட்டுள்ளது. மகிந்த அணியினரின் செயற்பாடும், அரசில் உள்ள சில அமைச்சர்கள் தெரிவிக்கும் கருத்துக்களே காரணமாகும். இவ்வாறு மேல் மாகாணமுதலமைச்சர்இசுறு தேவப்பிரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

படையினரைக் காட்டிக் கொடுப்பதற்கு அரச தலைவர் மைத்திரி முயற்சிக்கின்றார் என்று பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அரச தலைவர் அமெரிக்காவில் ஐ.நா. மாநாட்டில் பங்கேற்றார். புலம்பெயர் தமிழர்கள் அரச தலைவருக்கு எதிராகப் போராட்டம் நடத்தினர். அரச தலைவர் மைத்திரி எத்தகைய நிலைப்பாட்டில் இருக்கின்றார் என்பது இதனூடாகப் புரிந்திருக்கும்.

இந்த நாட்டின் எல்லை எங்கிருக்கின்றது என்றுகூடத் தெரியாத புலம்பெயர் தமிழர்களே நாட்டைப் பிரித்துத் தமிழீழம் அமைக்குமாறு கோருகின்றனர். அவர்களுக்கு இந்த நாட்டின் நிலைமை பற்றி எதுவும் தெரியாது. எங்கேயோ இருந்துகொண்டு தமிழீழம் கேட்கின்றனர். அவர்கள் ஒருபோதும் இலங்கைக்கு இனி வரமாட்டார்கள். கொழும்பிலும் நாட்டின் ஏனைய இடங்களிலும் வாழ்கின்ற தமிழர்களுடன் நாம் பழகுகின்றோம். அவர்கள் ஒருபோதும் நாட்டைப் பிரித்துக் கேட்கவில்லை.

போர் முடிந்து எல்லோரும் நிம்மதியாக வாழ்கின்றபோது எதற்கு இந்தத் தேவை இல்லாத பிரச்சினை? ஆகவே, புலம்பெயர் தமிழர்களின் கோரிக்கைக்கு அடிபணிந்து படையினரைக் காட்டிக்கொடுப்பதற்கோ, தமிழீழத்தை அமைப்பதற்கோ அரச தலைவர்மைத்திரிபாலஒருபோதும் முன்வரமாட்டார்-என்றார். (5,3)



## கிம்முடன் பேசுவது நேரத்தை வீணாக்கும் செயல்: ட்ரம்ப்

வொஷிங்டன், ஒக். 3
"வடகொரிய அதிபருடன் பேச்சு நடத்தி ரெக்ஸ் டில்லர்சன் நேரத்தை வீணாக்குகிறார்" அமெரிக்க அதிபர் ட்ரம்ப் குறிப்பிட்டார்.

உலக நாடுகளின் கடும் கண்டனங்களையும் மீறி வடகொரியா தொடர்ந்தும் ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது. இது அமெரிக்காவை எரிச்சலடையச் செய்துள்ளது.

ஏற்கனவே வடகொரியா மீது ஐக்கிய நாடுகள் சபை பல தடைகளை விதித்துள்ளது. இந்தத் தடைகளுக்கு அமெரிக்கா, ஜப்பான், சீனா உட்படப் பல நாடுகள் ஆதரவளித்துள்ளதால் வடகொரியாவக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், "கொரியத் தீபகற்பத்தில் நிலவிவரும் பரபரப்பான சூழ்நிலை குறித்து வடகொரிய அதிபருடன் தொடர்ந்து பேச்சு நடத்தி வருகிறோம்" என்று அமெரிக்க அயலுறவுத்துறைச் செயலாளர் ரெக்ஸ் டில்லர்சன் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார். இந்தப் பேச்சுக்கள் வீண்வேலை என்று குறிப்பிட்டுள்ளார் ட்ரம்ப்.

ட்ரம்ப் தனது ருவிற்றர் பதிவில், "நான் சின்ன ரொக்கெட் மனிதருடன் பேச்சு நடத்த முயற்சித்து நேரத்தை வீணடிக்கிறீர்கள் என்று எங்களுடைய அற்புதமான செயலாளர் ரெக்ஸ் டில்லர்சனிடம் கூறினேன்" என பதிவிட்டுள்ளார். (ம)






## காட்டலோனி

மட்ரிட், ஒக். 3
ஸ்பெய்னிடம் இருந்து பிரிந்து தனி நாடு கோரும் காட்டலோனியாவில் பரபரப்பான சூழ்நிலையில் நேற்று முன்தினம் பொது வாக்கெடுப்பு நடந்தது.

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஸ்பெய்ன் நாட்டின் தன்னாட்சி பெற்ற மாகாணமாக காட்டலோனியா திகழ்கிறது.

வடகிழக்கு
பகுதி. கா
ஸ்பெய்ன்
யில் 16 ச
வாழ்கிறா
நாட்டின் ஏ
பங்களிப்
செய்கிறது.
மொத்த உ
யாவின் பா

### சிரிய உள்நாட்டுப் போரால்

# கடந்த மாதத்தில் மட்டும் 3,000 பேர் துயரச் சாவு

டமஸ்கஸ், ஒக். 3
சிரியாவில் நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போரால் கடந்த மாதத்தில் மட்டும் சுமார் 3 ஆயிரம் அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சிரியாவில் 'சியா', 'சன்னி' என்றும் இரு பிரிவு இஸ்லாமியர்கள் வாழ்ந்து வருகிறார்கள். சிரிய அதிபர் அல் அசாத் 'சியா' பிரிவைச் சேர்ந்தவர். அவரைப் பதவியில் இருந்து இறக்கவேண்டும் என்ற கோரிக்கைகளுடன் தோற்றம் பெற்ற சன்னி பிரிவு அழுத்தக் குழுக்கள் படிப்படியாக அரசுக்கு எதிரான ஆயுதக் குழுக்களாக மாற்றம் பெற்றன. கடந்த 2011ஆம் ஆண்டு முதல் அங்கு உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அலெப்போ, இட்லிப் உள்ளிட்ட முக்கிய இடங்கள் கிளர்ச்சியாளர்களின் பிடியிலேயே இருந்தன. அலெப்போ மீட்கப்பட்டாயிற்று. ஏனைய பகுதிகளில் தற்போது போர் நடைபெற்று வருகிறது.



சிரிய அரசுக்கு ஆதரவாக ரஷ்யா கடுமையான தாக்குதல்களை நடத்தி வருகிறது. கடந்த மாதம் சுமார் 3 ஆயிரம் பேர் இந்தத் தாக்குதல்களில் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் சுமார் 400 பேர் சிறுவர்கள் என்று சிரியாவில் போர் நிலவரங்களைக் கண்காணித்துவரும் அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது. இவர்களில் பெரும்பாலானவர்கள் ரஷ்யாவின் வான் தாக்குதல்களில் கொல்லப்பட்டனர் என்றும், சுமார் 70 சதவீதமானவர்கள் அவ்வாறு ரஷ்யத் தாக்குதல்களில் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிரிய உள்நாட்டுப் போரில் இந்தவருடம் அதிக உயிரிழப்புக்களைச் சந்தித்த மாதமாக கடந்த செப்ரெம்பர் மாதமே பதிவாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஆஸ்திரியாவில் முகத்திரைக்கு வந்தது தடை

ஆஸ்திரியாவில் பொது இடங்களில் முஸ்லிம் பெண்கள், முழு முகத்தையும் மூடும் முகத்திரை அணிவதற்கான தடை நடைமுறைக்கு வந்தது.

ஆயுததாரிகளின் தாக்குதல்கள், ஆஸ்திரியாவின் கோட்பாடுகள், ஆஸ்திரியாவின் தேசியப் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இஸ்லாமியப் பெண்கள் முகத்திரை அணிவதற்குத் தடை விதிப்பது தொடர்பில் ஆஸ்திரிய அரசு பரிசீலித்து வந்தது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. முகம் முதல் தாடை வரை மறைத்தல் கூடாது என்று அந்தச் சட்டத்தில் தெளிவாகக் குறிப்பி டப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின் மூலம், வளைகுடா நாடுகளில் இருந்து, ஆஸ்திரியாவிற்கு சுற்றுலா வருபவர்களின் எண்ணிக்கை குறைய வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது. (ம)

## பெரும்பான்மையை நிரூபிக்க அ.தி.மு. கழக அரசு தயாரா?

### கேள்வி எழுப்புகிறார் ஸ்டாலின்

சென்னை, ஒக். 3
"சட்ட சபையில் தனது பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு அ.தி.மு. கழக அரசு தயாராக உள்ளதா?" என்று கேள்வி எழுப்பியுள்ளார் எதிர்கட்சித் தலைவரான ஸ்டாலின்.

நீலகிரி மாவட்டத்தில் நேற்று முன் தினம் நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஸ்டாலின் இவ்வாறு தெரிவித்தார். "தமிழ் நாட்டில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடந்து கொண்டிருக்கும் ஆட்சி மீது மக்கள் அளவு கடந்த கோபத்தில் இருக்கிறார்கள். ஆட்சியில் இருக்கிற கோபத்தை விட எங்கள் மீதுதான் கோபத்தில் உள்ளனர்.



இன்னும் இந்த ஆட்சியை கலைக்காமல், கவிழ்க்காமல் உள்ளார்களே என்பதுதான் அந்தக் கோபம். மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அடிக்கடி வந்த கோடநாடு இங்குதான் உள்ளது. கோடநாட்டில் ஓய்வெடுத்து வந்த ஜெயலலிதாவின் சாவு மர்மமான நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளது. இந்தச் சாவு எப்படி ஏற்பட்டது என்று விடை காண முடியாத நிலையில், கல்லறையில் இருக்கும் ஜெயலலிதாவுக்கு இன்னும் ஓய்வு கிடைக்கவில்லை. பலர் அங்கு சென்று தியானம் செய்வதையும், சமாதியை ஓங்கி அடிக்கும் காட்சியையும் காண்கிறோம். பாரதிராஜா இயக்கிய 'முதல் மரியாதை' படத்தில் நடிகர் சாமிக்கண்ணு அடிக்கடி சொல்லும் வசனம் 'எனக்கொரு உண்மை தெரிஞ்சாகணும்'. அதுபோல் மேடையில் இருக்கும் எங்களுக்கும், மக்களுக்கும் ஓர் உண்மை தெரிஞ்சாகணும். ஜெயலலிதாவின் சாவு தொடர்பான உண்மை தெரிஞ்சாகணும்.

18 சட்டமன்ற உறுப்பினர்கள் உங்களிடம் இருந்து சென்று விட்டனர். உங்களை மாற்ற வேண்டும் என்று போர்க்கொடி தூக்கி உள்ளனர். உங்களுக்கு தைரியம் இருந்தால், இந்த ஆட்சி பெரும்பான்மை ஆட்சி என்று நீங்கள் சொல்வதை நாங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று சொன்னால் 18 சட்டமன்ற உறுப்பினர்களை நீக்கிய உத்தரவை திரும்பப் பெற்றுவிட்டு சட்டமன்றத்தைக்கூட்டி பெரும்பான்மையை நிரூபியுங்கள். இதைச் செய்ய முதலமைச்சரால் முடியுமா? என ஸ்டாலின் மேலும் தெரிவித்தார். (ம)

# ...னியாவில் பெரும் பதற்றம்

வடகிழக்கு ஸ்பெய்னில் செழிப்பான பகுதி காட்டலோனியாதான். ஸ்பெய்ன் நாட்டின் மக்கள் தொகையில் 16 சதவீதமானோர் இங்கு வாழ்கிறார்கள்.

நாட்டின் ஏற்றுமதியில் 25.6 சதவீத பங்களிப்பை இந்த மாகாணம்தான் செய்கிறது. ஸ்பெய்னின் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் காட்டலோனியாவின் பங்கு 19 சதவீதம் ஆகும். ஸ்பெய்னுக்கு வருகிற அன்னிய நேரடி முதலீட்டில் 20.7 சதவீதம் இந்த மாகாணத்துக்குப் போகிறது. இந்த மாகாணத்தில் கூடுதல் சுயாட்சி உரிமைகள் வழங்கப்பட்டிருந்தாலும், ஸ்பெய்ன் அரசியல் சட்டம் அதை தனி நாடாக அங்கீகரிக்கவில்லை.

அங்கு கடந்த 5 ஆண்டுகளாக தங்கள் தலையெழுத்தை தாங்களே நிர்ணயித்துக்கொள்வதற்காக சுய நிர்ணய அதிகாரம் (தனி நாடு) வேண்டும் என்று ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வந்தன. பிரிந்து போவது தொடர்பான வாக்கெடுப்பும் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டுள்ளது. இந்த வாக்கெடுப்புக்கு ஸ்பெய்ன் அரசு தடை விதித்ததால் பரபரப்பான சூழ்நிலை காட்டலோனியாவில் நிலவுகிறது. (ம)

## தலைதூக்குகிறது ஐ.எஸ்.

சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு மீண்டும் ஆதிக்கம் செலுத்த எத்தனிக்கிறது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் ஆதிக்கம் நிறைந்திருந்த மாகாணங்களில் ஒன்று ஹோம்ஸ். இந்த மாகாணத்தின் கிரயதாயின் நகரம் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்து மீட்கப்பட்டது. இந்த நிலையில் இந்த நகரத்தை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு மீண்டும் கைப்பற்றியுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. சிரியாவில் உள்நாட்டுப் போரில் மற்றொரு முனையில் அரச படைகள் கவனம் செலுத்தி வருகின்றன. இதனைப் பயன்படுத்தி ஐ.எஸ்.ஐ.எஸ். தனது ஆதிக்கத்தை விரிவாக்க முனைகிறது. இதனாலேயே ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் மீண்டும் ஆதிக்கம் செலுத்தினர் என்று சொல்லப்படுகிறது. (ம)





AIA யின் உயர்கல்விப் புலமைப் பரிசில் வெற்றியாளர்கள்

17 வருடங்களாக, ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் சாதனையாளர்களுக்கு வெகுமதியளித்து வந்த பயணத்தில், AIA காப்புறுதி நிறுவனம், மற்றுமொரு மைல்கல்லை அடைந்துள்ளது. 2010 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் அதிக புள்ளிகளைப் பெற்ற 25 மாணவ, மாணவியருக்கு AIA உயர்கல்விப் புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொடுத்தமைக்கு காரணம், அவர்கள் வெளிப்படுத்திய திறமையாகும். உயர்தர வகுப்பு முதல், பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்யும் வரை இந்த மாணவ, மாணவியர்களுக்கு, மாதாந்தம் நிதி அனுகூலங்கள் வழங்கப்படுகின்றன. இந்தப் புலமைப் பரிசிலின் விசேடத்துவம், AIA காப்புறுதி நிறுவனத்திலிருந்து ஆயுள் காப்புறுதியைப் பெற்றிருப்பதோ அல்லது பெறாதிருப்பதோ இதற்குத் தகுதி பெறக் காரணியாக அமைந்து விடாது. திறமைக்கு மாத்திரம் இது பெற்றுக் கொடுக்கப்படுகிறது.

1994 ஆம் ஆண்டில் ரூபா 10 மில்லியனுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த உயர்கல்வி புலமைப் பரிசில் நிதியம், தற்போது 06 மடங்காக வளர்ச்சியடைந்துள்ளது. நாட்டின் எதிர்காலத்தை வளமாக்கும் மாணவ, மாணவியரின் கல்விக் கனவை நனவாக்கிட, அதன்மூலம் தொடர்ச்சியான பங்களிப்புக் கிடைக்கும். கடந்த 17 வருடங்களாக 575 க்கும் அதிகமான மாணவ மாணவியர்கள் AIA உயர்கல்விப் புலமைப் பரிசிலுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

முன்வரிசை: (இடமிருந்து வலம்)
ஹம்பாந்தோட்டை - ஏ.ஜீ.ஆதித்யா தீபதி, யாழ்ப்பாணம் - தரணி பாலேந்திரன், அநுராதபுரம் - எம்.வி.ஹரிந்திரபிரிய சில்வா, கம்பஹா - நவீன் யசங்க பேமரதன, இரத்தினபுரி - எச்.எம்.சி.என்.குலதுங்க பண்டார, மாத்தறை - திமுது ஹேஷா அமரவீர, குருநாகல் - டப்ளியூ.எம்.கே.திலங்க வன்னிநாயக்க, களுத்துறை - ஜீ.ஜே.கவனி பவசரா

பின்வரிசை: (இடமிருந்து வலம்)
பொலன்னறுவை - டப்ளியூ.எம்.தக்சர நந்திம பண்டார, மாத்தளை - டப்ளியூ.எம்.ஜீ.ஜீ.பானுக பண்டார தலகிரியாவ, மட்டக்களப்பு - எம்.எப்.எம்.பஸால் ராஜா, புத்தளம் - டப்ளியூ.சீ.பாரிந்யா பீரிஸ், காலி - ஆர்.எல்.லகித் நவோத்ய, கொழும்பு - ஏ.ஏ.சனுஜ கல்ஹான் எதிரிசிங்க, கேகாலை - எச்.டி.சத்யாங்கனி குமுது குமாரி, மொனராகலை - கே.ஏ.நிதமி பிரசாதிகா ரூபசிங்க, மன்னார் - ஜே.எப்.ஜூட் மிதுஷான், கண்டி - எஸ்.முஹம்மத் சபீர், நுவரெலியா - டபிள்யூ.புது தத்சரண, பதுளை - டி.எம்.எஸ்.பங்கஜ மதுபாஷி, அம்பாறை - சுபதா மாலவன்

சமுகமளியாதோர்:
கிளிநொச்சி - நிஷாந்த் ஹமஷிகன், வவுனியா - யோகேஸ்வரன் பிரியநேசன், திருகோணமலை - ஷாலினி லிங்கேஷ்வரன், முல்லைத்தீவு - ஜயனநடராஜா கிருஷிகன்

THE REAL LIFE COMPANY

AIA

aialife.com.lk

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும் காட்டும் அரசமைப்பு வேண்டாம்

புதிய அரசமைப்புத் தொடர்பில் ஒரே நாளில் சிங்கள மற்றும் தமிழ்த் தலைவர்கள் தெரிவித்திருக்கக்கூடிய கருத்துக்கள்பலகேள்விகளைஎழுப்புகின்றன. சிங்கள பௌத்தர்களுக்கு வேண்டியதை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும், தமிழர்களுக்கு வேண்டியதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் கூறியிருக்கிறார்கள். ரணில் அனுராதபுரத்திலும் சம்பந்தர்மன்னாரிலும்பேசினார்கள்.அவைஒவ்வொன்றும்ஒன்றுக்கொன்றுமுரண்பாடானவிடயங்களைச்சொல்கின்றன.

அவர்கள் சொல்வது உண்மையானால் பாம்புக்குத் தலையும், மீனுக்கு வாலும் காட்டக்கூடிய ஒரு வடிவத்தில்தான் புதியஅரசமைப்புஉருவாக்கப்படும்என்றுகொள்ளவேண்டும். அப்படியொரு அரசமைப்பு முழு ஏமாற்று வேலை. அதனால் இலங்கை மக்களுக்கு எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு எந்தவிதத் தீர்வும் ஏற்படப்போவதில்லை.

புதிய அரசமைப்பு ஒற்றையாட்சித் தன்மையுடன் அமையக்கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியுடன் தெரிவித்திருந்தது. அரசமைப்புக்கான வழிகாட்டல் குழுவில் இது ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையிலேயே இடைக்கால அறிக்கையில் அரசின் தன்மை குறித்த விடயம் மாற்றப்பட்டது.

அதாவது அது சிங்களத்தில் "ஏக்கிய ராஜ்ஜிய' என்றும் தமிழில்ஒருமித்தநாடுஎன்றும்குறிப்பிடப்பட்டது. இப்படிஇரு மொழிகளிலும் குறிப்பிடப்பட்டாலும், பிரச்சினை என்று வரும்போது நீதிமன்றங்கள் சிங்கள மொழியின் பொருளையே ஏற்றுக்கொள்ளும் என்கிற வாதம் தமிழர்களின் தரப்பில்முன்வைக்கப்பட்டபோது, அந்தவாக்கியங்களுக்கானபொருளை, ''ஏக்கியராஜ்ஜிய 'ஒருமித்தநாடு' என்பது பிரிக்கப்படாதமற்றும்பிரிக்கப்படமுடியாதநாடுஎன்னும் பொருளாகும்'' என்று தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

ஆனால்,அனுராதபுரத்தில்பேசியரணில்விக்கிரமசிங்கவோ, ''இடைக்கால அறிக்கையில் சிங்கள மற்றும் தமிழ்ப்பதங்கள்ஒற்றையாட்சிஎன்பதைஉறுதிப்படுத்தியுள்ளன. இதில் எந் மாற்றங்களும் இல்லை. ஆங்கிலத்தில் 'யுனிற்ரி' என்ற வார்த் தையை உள்ளடக்குவது குறித்து விவாதிக்கப்பட்டு வருகிறது. நாம் ஒற்றையாட்சிக்குள்ளேயே அதிஉச்ச அதிகாரங்களைவழங்கவுள்ளோம். இடைக்காலஅறிக்கையில் அது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது'' என்று தெரிவித்துள்ளார்.

அதேநாளில் மன்னாரில் பேசிய சம்பந்தனோ, ''வெளியாகியுள்ள இடைக்கால அறிக்கையில் ஒற்றையாட்சி, 'யுனிற்ரரி ஸ்ரேட்' என்ற சொற்கள் நீக்கப்பட்டுள்ளன. 'ஏக்கிய ராஜ்ஜிய' என்பதற்கான விளக்கமும் தெளிவாக வழங்கப்பட்டுள்ளது'' என விளக்கம் அளித்துள்ளார்.

வழிகாட்டல் குழுவில் இதுவரை நடந்தவைகளை உற்றுப் பார்க்கும்போது வெளிப் படையாக இடைக்கால அறிக்கையை வாசிக்கும்போதும் சம்பந்தன் சொல்பவை உண்மையானவை என்றே தோன்றுகின்றன. ஆனால், எதை எப்படிக்குறிப்பிட்டாலும்கடைசியில்அதைசிங்கள, பௌத்தம் தனக்குச்சாதகமாகவே திரித்துப் பயன்படுத்திக்கொள்ளும் என்றுபன்னெடுங்காலமாகத்தமிழ்மக்கள்கொண்டிருக்கும் அச்சத்தை நிரூபிக்கும் வகையில் ரணிலின் உரை அமைந்திருக்கிறது.

இப்படித் தகிடு தத்தங்களைச் சிங்களத் தலைவர்கள் செய்வார்கள் என்பதனாலேயே உருவாக இருப்பது கூட்டாட்சி (சமஷ்டி) அரசமைப்பு என்று தெளிவாகக் கூறத் தமிழர்கள் தொடர்ந்து வலியுறுத்தினார்கள். சிங்கள, பௌத்த தலைவர்களைநம்பித்தமிழர்கள்காரியமாற்றுவது இலங்கையில் எப்போதும் சாத்தியமானது அல்ல என்பதையே அவர்கள் மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகின்றார்கள்.

எனவே இதுபோல் சிங்கள மக்களுக்கு ஒன்றும், தமிழ் மக்களுக்கு ஒன்றுமாக பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும் காட்டக்கூடிய அரசமைப்பு முயற்சிகளைவிட்டுவிட்டு குழப்பம் இல்லாத தெளிவான வரையறையுடனான அரசமைப்பே உருவாக்கப்படவேண்டும்.


> "தமிழ் மக்கள் தமது உணர்ச்சி வேகத்தைக் கட்டுப்படுத்திச் சிந்தித்துச் செயற்பட வேண்டிய தருணம் இது. போலிகளையும் சந்தர்ப்பவாதிகளையும் சுயநலவாதிகளையும் அவர்கள் இனம்கண்டு கொள்ள வேண்டும். தமது சிந்தனைக்கு வேலை கொடுக்க வேண்டும்"

## தமிழர்களை பிளவுபடுத்தும் அரசியலால் சாதிக்க போவதென்ன?

இந்துமதி

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தல் அடுத்த ஆண்டு இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண சபையின் பதவிக்காலம் கடந்த வாரம் முடிவடைந்த நிலையில் வடக்கு மாகாண சபையின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் பூர்த்தியடையவுள்ளது. இரண்டு மாகாண சபைகளுக்கும் ஒரே திகதியில் தேர்தல் இடம்பெறமெனத் தெரிகின்றது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக இணைந்து கொள்வது தொடர்பாக அரசமைப்புச் சபையின் வழிப்படுத்தும் குழுவின் இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இணைவதற்கான சாத்தியப்பாடுகள் மிகக் குறைவாகவே உள்ளன. அந்த வகையில் அடுத்த மாகாணசபைத் தேர்தல்கள் வடக்கிலும் கிழக்கிலும் தனித்தனியே இடம்பெறுமென்பது உறுதியாகிவிட்டது.



### ஈழத் தமிழர்களது ஏகப் பிரதிநிதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே

வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற தமிழர்களின் ஏகப் பிரதிநிதி என்ற அசைக்க முடியாத அந்தஸ்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கே உள்ளது. கூட்டமைப்பு கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கில் அதிக இடங்களைக் கைப்பற்றி நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் பெற்றுக்கொண்டுள்ளது. கூட்டமைப்புக்கு எதிரானவர்கள் மக்களுக்கு வாக்குறுதிகளை அள்ளி வழங்கியபோதிலும், தேர்தல்களில் வெற்றிகளை ஈட்ட முடியாமல் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதன் வெளிப்பாடாக எதற்கெடுத்தாலும் கூட்டமைப்பை விமர்சனம் செய்வதையே இவர்கள் தொழிலாகக் கொண்டுள்ளனர்.

வடக்கு முதலமைச்சருக்கு எதிராகத் தமிழ் அரசுக் கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தபோது கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற ஏனைய மூன்று கட்சிகளும் முதலமைச்சருக்குத் தமது ஆதரவை வழங்கின. கூட்டமைப்புக்கு எதிரானவர்களும் முதலமைச்சரின் பின்னால் நின்றனர். அப்போதேகூட்டமைப்புக்கு மாற்றான் அணியொன்றை உருவாக்குவது தொடர்பாக ஆராயப்பட்டது. இந்த யோசனையின் மையப் புள்ளியாக சி.வி.விக்னேஸ்வரன் காணப்பட்டார். தற்போது அடுத்தமாத இறுதிக்குள் மாற்று அணி உருவாக்கப்பட்டுவிடுமென்ற செய்தி கசிந்துள்ளது. கூட்டமைப்புக்கு எதிரான அனைவரும் இந்த அணியில் இணைந்து கொள்வார்களென எதிர்பார்க்க முடியும். கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற சில கட்சிகள் கூட மாற்று அணிக்கு மாறக்கூடிய வாய்ப்புக்களும் உள்ளன.

### தமிழ் மக்கள் பேரவையின் நிலைப்பாடு தெளிவற்ற நிலையில்

தமிழ் மக்கள் பேரவையில் கூட்டமைப்புக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டிருப்பவர்கள் அங்கம் வசிக்கின்றமை இரகசியமானதொரு விடயமல்ல. சந்தர்ப்பத்தைப் பொறுத்து இதுவொரு அரசியல் அமைப்பாக மாற்றம் பெறுமென்ற கணிப்பு இது ஆரம்பிக்கப்பட்டபோதே பலரிடத்திலும் காணப்பட்டது. ஆனால் இது மறுதலிக்கப்பட்டது. மாற்று அணியொன்று உருவாக்கப்படும்போது தமிழ் மக்கள் பேரவையும் அதில் சங்கமமாகிவிடுமென எதிர்பார்க்க முடியும். முதலமைச்சர் விக்னேஸ்வரன்கூட இதில் தம்மை இணைத்துக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன.

இந்த நிலையில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் இடம்பெறும்போது தமிழர் பகுதிகள் அரசியல் போர்க்களமாக மாறிவிடப் போகின்றன. பல ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் தேர்தல்கள் இடம்பெறும் வேளைகளில் ஏட்டிக்குப் போட்டியாக மேடைகள் அமைத்து ஒரு தரப்பினரை மறு தரப்பினர் தரக்குறைவாக விமர்சித்து பரப்புரைகளில் ஈடுபட்ட நிகழ்வுகள் மீண்டுமொரு தடவை அரங்கேறப் போகின்றன. மக்களிடையே பகையுணர்வும் வன்மமும், உருவாகப் போகின்றன. ஆனால் பதவி ஒன்றையே குறியாகக் கொண்டு செயற்படுகின்ற சுயநலவாதிகள் அரசியல் களத்தில் சமர் ஆடப் போகின்றனர்.

இது இனவாதிகளுக்கும், அவர்களுடன் இணைந்து செயற்படுபவர்களுக்கும் வாய்ப்பாக அமைந்துவிடப் போகின்றது. தென்னிலங்கையைச் சேர்ந்த அரசியல் கட்சிகள் தமிழர் பகுதிகளில் முழுமூச்சுடன் செயற்படுவதற்கான வாய்ப்பையும் இது வழங்கப் போகின்றது. குளத்தைக் கலக்கிப் பருந்துக்கு விருந்து படைத்த கதை போன்று இங்கும் இடம்பெறப் போகின்றது.

### நல்லவர்களை இனம்காணும் பொறுப்பு பொதுமக்களுக்கு உண்டு


தமிழ் மக்கள் தமது உணர்ச்சி வேகத்தைக் கட்டுப்படுத்திச் சிந்தித்துச் செயற்பட வேண்டிய தருணம் இது. போலிகளையும், சந்தர்ப்பவாதிகளையும், சுயநலவாதிகளையும் அவர்கள் இனம் கண்டுகொள்ள வேண்டும். தமது சிந்தனைக்கு வேலை கொடுக்கவேண்டும். தமது இனத்தின் விடுதலைக்காகப் போராடி வரலாறு காணாத அவலங்களை எதிர்கொண்ட ஈழத்தமிழினம் தமக்குள்ளேயே முரண்பட்டுப் போராடத் துணிந்தமை மிகப் பெரியதொரு வரலாற்றுத் தவறாகும்.

கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் அரசியல்வாதிகள் தாம் வகித்த பதவிகளால் மக்களுக்கு எதைச் சாதித்துக் கொடுத்திருக்கிறார்கள்? அவர்கள் பதவிவழி வந்த சுகங்களை அனுபவித்துக் கொண்டிருக்க, அப்பாவித் தமிழ் மக்கள் நடுவீதியில் நின்று துயரங்களுடன் போராடிக் கொண்டிருக்கின்றனர். பதவிக்காகப் போராடுவதே தமிழர்களின் வேலையாகிப் போய்விட்டது. இந்த நிலை நீடிக்குமானால், தமிழர்களின் தலைவிதியை எவராலும் மாற்றிவிட முடியாது.

தமிழ் அரசியல்வாதிகளுக்கு ஆழமாகச் சிந்தித்து ஒரு நல்ல முடிவை எடுப்பதற்கு இன்னமும் அவகாசம் உள்ளது.

தமிழர்களின் ஒற்றுமையைக் குலைக்காத வகையில் நல்லதொரு முடிவை அவர்கள் எட்ட வேண்டும். வீணான அரசியல் போட்டிகளைத் தவிர்த்து ஆரோக்கியமானதும் மக்களுக்கு நன்மை பயப்பதுமான அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

# ஈழத்தமிழரின் நிலையில் றொஹிங்ய முஸ்லிம்கள்



சேரலாதன்

மியன்மாரில் இருந்து இனச் சுத்திகரிப்பின் காரணமாக இடம்பெயர்ந்து இலங்கையில் தஞ்சம் புகுந்த றொஹிங்ய முஸ்லிம் மக்கள் தங்கியிருந்த இடம் பௌத்த பிக்குகளால் சுற்றிவளைக்கப்பட்டதுடன், அவர்கள் மீதும் தாக்குதல் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது.

பெண்கள், குழந்தைகள் உட்பட சுமார் 20 பேர் தங்க வைக்கப்பட்டுள்ள இடத்திலேயே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது. இலங்கையில் பௌத்த பேரினவாதச் சிந்தனை எந்தளவுக்கு வியாபித்துக் காணப்படுகின்றது என்பதற்கு இந்தச் சம்பவம் ஒரு சிறந்த உதாரணமாகும். மியன்மாரில் இராணுவத்தால் முஸ்லிம் சிறுபான்மையினர் மீது தொடர்ந்து அட்டூழியங்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

### மியன்மாரில் மனித உரிமைகள் மதிப்பளிக்கப்படுவதில்லை

மனித உரிமைகள் மியன்மாரில் மதிக்கப்படுவதில்லை. அங்குள்ள சிறுபான்மை மக்கள் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலைமையிலேயே நீண்டகால நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இரு பகுதியினருக்கும் இடையில் அடிக்கடி மோதல் கள் இடம்பெற்று வந்தன . தற்போது மோதல்கள் உச்சக்கட்டத்தை எட்டி விட்டதால் றொஹிங்யர்கள் மீதான இராணு வத்தினரது வன்செயல்கள் அதிகரித்து விட்டன. இதன் காரணமாகவே அந்த மக்கள் இலட்சக் கணக்கில் மியன்மாரில் இருந்த இடம் பெயர்ந்து வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இலங்கையிலும் சிறு தொகையினர் தஞ்சமடைந்துள்ளனர்.

### இலங்கையில் பௌத்த மதக் கோட்பாடுகள் உரிய முறையில் பேணப்படுவதில்லை

பௌத்த நாடுகள் எனக் கூறிக் கொண்டாலும் மியன்மாரிலும், இல்ங்கையிலும்புத்தபிரானின்போதனைகள்உரியவாறு கடைப்பிடிக்கப்படுவதில்லை.புத்தரின் வழியில் செல்ல வேண்டிய பௌத்த துறவிகள், வன்செயல்களைத் தூண்டி விடுவதில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதை அந்தப் புத்தபிரான் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள மாட்டார். இலங்கையில் றொஹிங்ய அகதிகள் தங்கியிருந்த இடத்தை பௌத்த பிக்குகள் சுற்றி வளைத்திருப்பதையும் அங்கிருந்து பெண்கள் குழந்தைகள் உட்பட தஞ்சமடைந்தவர்கள் சோகத்துடன் வெளியேறுவதையும் தொலைக் காட்சியில் பார்த்தபோது மனதில் தாங்க முடியாத சோகம் சூழ்ந்து கொண்டது. இரக்கமும் மனிதாபிமானமும் இந்த நாட்டில் செத்துவிட்டதா? என்ற கேள்வியும் மனதில் எழுந்து நின்றது.



...மாக வாழ்ந்து வருகின்றனர்.

மனித உரிமைச் செயற்பாட்டாளரான ஆங் சாங் சூகியைப் பல ஆண்டுகள் வீட்டுச் சிறையில் அடைத்து வைத்துக் கொடுமைப்படுத்தியதும், இந்த இராணுவ ஆட்சி தான். தேர்தலில் வெற்றி பெற்றதால் ஆங் சாங் சூகி தலைமையிலான அரசு மியன்மாரில் அமைக்கப்பட்டுள்ளது.

ஆனால் அந்த நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக பிற நாட்டவர் ஒருவரை மணமுடித்த காரணத்தால் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்பதற்கு ஆங்சாங் சூகியால் முடியவில்லை. ஆனால் அரசின் தலைமை ஆலோசகராக இருந்து நாட்டை நிர்வகிப்பது ஆங்சாங் சூகி தான்.

மியன்மாரில் இலங்கையைப் போன்றே பௌத்த மத்தினர் பெருபான்மையினராக வாழ்கின்றனர். றொஹிங்ய முஸ்லிம்களும் இந்துக்களும் சிறுபான்மையினராக வாழ்ந்து வருகின்றனர்.

அங்குள்ள பௌத்தர்கள், முஸ்லிம் மக்களை ஒரு போதுமே அந்த நாட்டுப் பிரஜைகளாக ஏற்றுக் கொண்டதில்லை. இதனால் இனமோதல்கள் அங்கு இடம்பெறுவது வழக்கமாகிவிட்டது. பௌத்தர்களைப் பெருமளவில் கொண்ட இராணுவத்தினரும் முஸ்லிம் மக்கள் மீது முறைகளைக் கையாண்டு வந்தனர்.

இதனால் றொஹிங்க முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய...

இந்த நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழர்கள் மீது சிங்கள பௌத்தவாதிகளால் பல தடவைகள் வன்செயல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. 1958ஆம் ஆண்டிலும் 1977 மற்றும் 1983ஆம் ஆண்டுகளிலும் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரங்கள் மிகக் கொடியவை. ஆட்சியாளர்களின் ஆசீர்வாதத்துடன் இவை இடம்பெற்றமை தான் வேதனை தருகின்றது. இறுதியாக, இறுதிப் போர் இடம்பெற்றபோது நடந்த சம்பவங்கள் இலங்கையின் அரசியல் வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயங்களைக் கொண்டவை.


ஆனால் இலங்கையில் ஆட்சியாளர்களோஅல்லதுபௌத்தபீடாதிபதிகளோ இவற்றையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. போரில் கிடைத்த வெற்றியை மட்டுமே அவர்கள் எண்ணிப் பார்க்கின்றனர். ஈழத் தமிழர்கள் பிறநாடுகள் பலவற்றில் புலம்பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர். ஏராளமானவர்கள் இவ்வாறு புலம்பெயர்ந்து சென்றுள்ளதால் நாட்டின் சனத்தொகையில் தமிழர்களில் இனவிகிதாசாரத்தில் பெரும் வீழ்ச்சி காணப்படுகின்றது. இதனால் எதிர்காலத்தில் பல பாதகமான விளைவுகள் ஏற்படப்போகின்றன.

**இலங்கைத் தமிழர்கள் மற்றும் மியன்மார் றொஹிங்யர்களில் நிலை ஒரே மாதிரியைக் கொண்டுள்ளது. இந்த இரண்டு இன மக்களும் பௌத்த மேலாதிக்க வாதிகளின் நெருக்குதல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.**

அரசமைப்பில் பௌத்த மதத்துக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. பெரும்பான்மையான மக்கள் பௌத்தத்தைப் பின்பற்றுவதால் இது சாத்தியமாகியுள்ளது. ஆனால் வேற்று மதத்தினர் வாழ்கின்ற பகுதிகளிலும் அரசும் பௌத்த கடுங்கோட்பாளர்களும் பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்குவதை ஏற்றுக் கொள்ள முடியாது. வரலாற்றுப் பிரசித்தி பெற்றதும் நாயன்மாரால் பாடல் பெற்ற தலமுமான மன்னார் திருக்கேதீஸ்வரம் சிவன் ஆலயம், இந்து மதத்தைப் பின் பற்றுகின்ற மக்களின் முக்கியமான வணக்க ஸ்தலமாகும். இதன் சூழலில் படையினர் முகாம் அமைத்து இருந்தபோது சிறியதொரு பௌத்த வணக்கத்தலத்தை அமைத்திருந்தனர். படையினர் அந்த இடத்தை விட்டு அகன்றுவிட்ட போதிலும் குறிப்பிட்ட வணக்கத்தலம் தொடர்ந்து பராமரிக்கப்படடு வந்தது. தற்போது தனியார் ஒருவருக்குச் சொந்தமான 10 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி பெரிய தொரு பௌத்த விகாரை அந்த இடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாடு ஒட்டுமொத்த இந்துக்களையும் அதிர்ச்சிக்குள் ஆழ்த்தி விட்டது.

### மத நல்லிணக்க முயற்சிகளின் பலாபலன்கள் கேள்விக்குரியவையே

இந்த நாட்டின் மத நல்லிணக்கம் இந்த இலட்சணத்தில் தான் உள்ளது. அகதிகளாக வருபவர்களை அரவணைத்துக் கொள்வது தான் மனித தர்மம். இந்தத் தர்மம் கடைப்பிடிக்கப்பட்டதால் தான் இலங்கை மற்றும் வேறு நாடுகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். ஆனால் மியன்மாரில் இருந்து இடம்பெயர்ந்து தஞ்சமடைந்திருந்த றொஹிங்ய முஸ்லிம்கள் பௌத்த துறவிகளால் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். இலங்கைத் தமிழர்கள் மற்றும் மியன்மார் றொஹிங்யர்களின் நிலை ஒரே மாதிரியாகத் தான் உள்ளது. இந்த இரண்டு இன மக்களும் பௌத்த மேலாதிக்கவாதிகளின் நெருக்குதல்களை எதிர்கொண்டு வருகின்றனர். அகிம்சா



## ஆசிரியருக்கான கடிதம்

### த.தே.கூட்டமைப்பு என்னதான் செய்யப் போகிறது?

ஐயா, அண்மைக்காலங்களில் நாட்டில் நடந்துவரும் சம்பவங்களை நோக்குகையில், இப்படித்தான் கேட்கத் தோன்றுகிறது. எங்கும் எதிலும் காவி உடைத் தரித்த பிக்குகளே முன்னிலை வகிக்கின்றனர்.

பெரும்பான்மை இனத்தவர்களின் பௌத்த மதத்தினரால் மியன்மாரில் துன்புறுத்தப்பட்டு கொழும்பில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருக்கும் றொஹிங்ய முஸ்லிம் மக்கள் மீது பிக்குகளும் காடையர்களும் மேற்கொண்ட வன்செயல், மனிதப் பண்புள்ள அத்தனை பேரையும் அதிர்ச்சியடைய செய்துள்ளது.

அதுமட்டுமல்லாது இன்றைய கூட்டாட்சி அரசு முன்னெடுத்து வரும் புதிய அரசமைப்பு விடயத்திலும் இவர்களின் அச்சுறுத்தல் தொடர்கிறது.


கூட்டாட்சி அரசைப் பொறுத்தவரையில் இரண்டு கில்லாடிகள் சேர்ந்து நடிக்கும் நாடகமே. முன்னைய ஆட்சியில் செய்யப்பட்ட குற்றக் கும்பலைப் பாதுகாப்பது மட்டுமே அவர்களின் குறிக்கோள்.

சிறுபான்மையோர் விடயத்தில் கூட்டாட்சி அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் இற்றைவரை மேற்கொள்ளவில்லை.

படையினரால் கைப்பற்றப்பட்ட காணிகள் காணாமல் ஆக்கப்பட்டோரின் கண்ணீர்க் கதைகள் எதையுமே இவர்கள் கருத்தில் எடுத்துக் கொள்வதாகத் தெரியவில்லை. பிக்குகளும் படையினருமே ஆட்சி நடத்துகிறார்கள். இதற்கு இந்த நூற்றாண்டின் ஹிட்லர் ராஜபக்சவும் பகவான் புத்தரும் துணை போகின்றார்கள் என்றே கொள்ள வேண்டியுள்ளது.

இந்த இலட்சணத்தில் இன நல்லிணக்கம் ஏற்படுமா? இது குறித்து சம்பந்தன் ஐயா சிந்திப்பாரா? ஈழத் தமிழினத்தைக் காப்பாற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னதான் செய்யப் போகிறது?

யே.நித்திலன்,
வட்டக்கச்சி.




## நடப்பாண்டின் செப்ரெம்பர் மாத காலப்பகுதியில் நகரும் சராசரிப் பணவீக்கம் அதிகரித்துள்ளது

நடப்பு வருடத்தின் செப்ரெம்பர் மாத காலப்பகுதிக்கான நகரும் சராசரிப் பணவீக்கம் 5.8 வீதமாக அதிகரித்துள்ளது. அதே வேளை ஒகஸ்ட் மாதத்துக்கான நகரும் சராசரி பணவீக்க பெறுமானம் 5.5 சதவீதமாக அமைந்துள்ளமை குறித்து நோக்கத்தக்கது. தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் ஆண்டு ரீதியான பணவீக்கம் என்பவற்றுக்கிடையே யான ஒப்பீட்டு அசைவாக அவை அமைந்துள்ளன. (ஓ)

## சுற்றுலாத்துறைக்கு இந்த வருடம் அதிக வருமானம் கிடைத்துள்ளது

### வருமான ஈட்டம் 4.8 வீதமாகப் பதிவு

நடப்பாண்டின் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் சுற்றுலாத் துறையின் வருமானம் ஆயிரத்து 521.9 மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்படுவதுடன் இது 4.8 வீத அதிகரிப்பாகப் பதிவாகியுள்ளது.

2016 ஆம் ஆண்டு இதே காலப்பகுதியில் ஆயிரத்து 451.8 மில்லியன் அமெரிக்க டொலர் வருமான ஈட்டமாகக் கிடைக்கப்பெற்றுள்ளது.

SRI LANKA TOURIST BOARD
CERTIFIED COMPANY

நடப்பு வருடத்தில் ஜனவரி மாதம் தொடக்கம் மே மாத காலப்பகுதி வரை சுற்றுலாப் பயணிகளின் வருகை 4.8 வீதமாக அதிகரித்துள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வருகை 8 இலட்சத்து 87 ஆயிரத்து 93 ஆகக் காணப்படுகிறது.

இந்தக்காலப்பகுதியில் இந்தியா, சீனா, பிரிட்டன், ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் நாடுகளில் இருந்து நாட்டினுள் வருகை தந்த மொத்த சுற்றுலா பயணிகளின் விகிதாசாரம் 51.4 ஆகக் காணப்படுகின்றது.

நடப்பு வருடத்தின் மே மாத காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 2.5 சத விகிதம் சரிவடைந்துள்ளது. ஒரு இலட்சத்து 21 ஆயிரத்து 891 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்குள் வருகை தந்துள்ளனர். 209.1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தொகை மதிப்பீடுடைய வருமானம் கிடைத்துள்ளது. (ஓ)

## இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மேம்படும்

### நாணய நிதியத்தின் குழுத் தலைவர் ஜெய்வு லி தெரிவிப்பு

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி எதிர்காலத்தில் மேம்படும் என்ற தகவலை பன்னாட்டு நாணய நிதியத்தின் குழுத் தலைவர் ஜெய்வு லீ வெளிப்படுத்தியுள்ளார்.

தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ள முன்னேற்றம் என்பது கலப்புத் தன்மை உடையதாகக் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

" பன்னாட்டு நாணய நிதியத்துடன் இலங்கை அரசு கொண்டுள்ள தொடர்பில் பல சவால்கள் காணப்படுகின்ற போதும் கடந்த மூன்று வருட காலப்பகுதியில் இடம் பெற்ற நிதி விஸ்தரிப்புத் தொடர்பான நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் நம்பிக்கையைத் தந்துள்ளது. வெளிப்படுத்தப்பட்டுள்ள முன்னேற்றம் கலப்புத் தன்மை உடையதாக காணப்படுகிறது.

கடந்த 2016 ஆம் ஆண்டு மற்றும் நடப்பு வருடத்தில் நாட்டில் ஏற்பட்ட கடும் வறட்சியான காலநிலை மாற்றம் காரணமாகப் பொருளாதார வளர்ச்சி 4.5 வீதமாக அமைந்துள்ளது. விவசாய உற்பத்தி சிறந்த முறையில் அமையும் போது பொருளாதாரத்தின் உட்கட்டமைப்புகள் சிறந்த வெற்றியைத் தரும். நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக உணவுப்பொருள்களை நாட்டினுள் இறக்குமதி செய்வதற்கு அதிகளவான நிதி மூலங்கள் செலவிடப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இலங்கையின் பொருளாதாரம் அபிவிருத்தி இலக்கை எட்டும்" - என்றார். (ஓ)

## உணவுப் பாதுகாப்பினைக் கொண்டிருக்கும் குடித்தனங்களின் விகிதாசாரம் அதிகரிப்பு

### தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தகவல்

"இலங்கையின் மொத்தக் குடித்தனங்களுள் உணவுப் பாதுகாப்பினைக் கொண்டிருக்கும் குடித்தனங்களின் விகிதாசாரம் 90 வீதம்" என தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்ஹ தெரிவித்துள்ளார்.

இதன்படி இலங்கையின் மொத்தக் குடித்தனங்களுள் உணவுப் பாதுகாப்பின்மையை அண்மித்த குடித்தனங்களின் விகிதாசாரம் 0.9 வீதமாகவும், ஓரளவு உணவுப் பாதுகாப்பின்மையைக் கொண்ட குடித்தனங்களின் விகிதாசாரம் 2.2 வீதமாகவும், நடுத்தர உணவுப் பாதுகாப்பின்மையைக் கொண்ட குடித்தனங்களின் விகிதாசாரம் 4.1 வீதமாகவும் மற்றும் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையைக் கொண்ட குடித்தனங்களின் விகிதாசாரம் 3.1 வீதமாகவும் காணப்படுகின்றது.

இலங்கையில் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்நோக்கும் குடித்தனங்களுக்கான பாதுகாப்பின்மை நுழைவுச் சுட்டெண் பெறுமதியானது 9.20 ஆகப் பதிவாகியுள்ளது.

தவிர மொத்தக் குடித்தனங்களுள் அவர்கள் முகங்கொடுத்த அனுபவங்களுக்கமைய குறைந்த தரத்திலான உணவினை நுகரும் குடித்தனங்களின் விகிதாசாரம் 3 வீதமாகவும், குறைந்த உணவு வேளையொன்றை நுகரும் குடித்தனங்களின் விகிதாசாரம் 3.7 வீதமாகவும் காணப்படும் தன்மை அளவீட்டுத் தரவுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இது குறித்து கருத்துரைத்துள்ள அவர்,

"செயற்றிறன் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான நாட்டின் சகல மக்களும் சகல சந்தர்ப்பங்களிலும் போதுமான அளவு பாதுகாப்பான மற்றும் போசாக்கான உணவைப் பெற்றுக்கொள்வதற்கு காணப்படும் ஆற்றல் உணவுப் பாதுகாப்பாகக் கருதப்படுகிறது.

> “ உணவுப் பாதுகாப்பின்மை நுழைவுச் சுட்டெண் பெறுமதி பூச்சியத்துக்கும் 24 இற்கும் இடையில் காணப்படும். இங்கு பெறுமதி 0 என்பது குறைந்த உணவுப் பாதுகாப்பின்மையும் பெறுமதி 24 என்பது மிகவும் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையும் நிலவுகின்றது என்பதை குறித்து நிற்கின்றன.

இதன்பிரகாரம் உணவுப் பாதுகாப்பின்மையானது மேலும் பகுப்பாய்வு செய்யப்பட்டு நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டது. அவை உணவுப் பாதுகாப்பின்மையை அண்மித்த, ஓரளவு உணவுப் பாதுகாப்பற்ற, நடுத்தர உணவுப் பாதுகாப்பற்ற மற்றும் கடுமையான உணவுப் பாதுகாப்பற்ற தன்மைகள் என்ற விதமாக அமைந்துள்ளன.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், உணவு மற்றும் போசணை தொடர்பான தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்கும் வேலைத்திட்டம் என்பவற்றினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்நோக்கும் குடித்தனங்களின் அனுபவத்தை பெறுமான ரீதியாக அளவிட்டுக் காட்டக்கூடிய முறைமையாக குடித்தன உணவுப் பாதுகாப்பின்மை நுழைவுச் சுட்டெண்கள் அமைந்துள்ளன" - என்றார். (ஓ)

## வரவு-செலவுத் திட்டம் செயற்றிறனோடு வரும்

### அமைச்சர் மங்கள சமரவீர நம்பிக்கை

2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் செயற்றிறன் மிக்கதாக அமையுமென நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.



குறித்த திட்டத்தின் படி 'மக்ரோ' பொது நிதிக் கட்டமைப்பின் மொத்த உள்ளீட்டில் பொது வருமானத்தினை 16.5 வீதம் அதிகரிப்பதோடு பொது வரிச் செலவினை 5.3 வீதமாக குறைக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான இந்தத் திட்டம் அரச உள்வாங்கல் திட்டங்களில் உள்ளடக்கம் பெற்றுள்ளமையும் குறித்த திட்டம் தொடர்பாக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமையும் குறித்து நோக்கத்தக்கது. (ஓ)


CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

2/10/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | ↑ 32.72 | 6,470.96 | 6,438.24 |
| S&P SL20 | ↑ 21.69 | 3,709.66 | 3,687.97 |
| வியாபாரப்புரள்வு | | 549,431,810 | 782,344,640 |
| உள்நாடு:- கொள்வனவு | | 493,209,408 | 456,653,280 |
| விற்பனை | | 504,228,800 | 644,610,110 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 56,222,412 | 325,691,328 |
| விற்பனை | | 45,203,000 | 137,734,528 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| மல்வத்தை பிளான்டேசன் | MAL.N | 12.3 | 3,043,304 | 41,715,708 |
| லங்கா ஓரிஸ் லீசிங் | LOLC.N | 132 | 284,052 | 39,426,895 |
| பலாங்கொட பிளான்டேசன் | BALA.N | 36.6 | 951,810 | 37,113,107 |
| லங்கெம் டெவெலப்மென்ட்ஸ் | LDEV.N | 12.1 | 2,305,334 | 35,422,145 |
| லங்கா சிமெண்ட் | LCEM.N | 8.1 | 4,346,251 | 33,311,478 |
| கேமாஸ் ஹோல்டிங்ஸ் | LION.N | 480 | 51,762 | 24,586,782 |
| சம்பத் வங்கி | SAMP.N | 310 | 72,118 | 22,787,790 |
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | MAL.X | 12.1 | 1,534,807 | 20,586,422 |
| சிலோன் டுபாக்கோ | CTC.N | 1,000.00 | 2,295 | 19,067,949 |
| மாதுளசிமா ப்ளண்டஷன்ஸ் | MADU.N | 19.4 | 649,662 | 18,570,417 |

அறிவித்தல்கள் -

பங்குலாபம்

மெர்க்கன்டைல் முதலீடுகள் (MERC)- Rs. 7.00
பீ.ஆர்ஏசி லங்கா பினான்ஸ் (NIFL)- Rs. 0.04

| சந்தைக் குறிகாட்டிகள். | | |
|---|---|---|
| கம்பனிகள் | ↑ | 295 |
| பரிமாற்றத்தில் | ↑ | 250 |
| விலை உழைப்பு | ↓ | 10.8 |
| புத்தகப்பெறுமதி | ↓ | 1.4 |
| பங்குலாப விளைவு | ↓ | 2.9 |

# முள்ளை முள்ளால் எடுத்தல் நன்றே



முல்லா என்பவர் சிறந்த புத்திசாலியும் நகைச்சுவையான குண இயல்பும் உடையவர். ஒரு நாள் அவரிடம் ஒருவர் வந்து, "முல்லா அவர்களே, எனக்குக் கொஞ்சம் பணக் கஷ்டமாக இருக்கிறது. தயவு செய்து ஒரு பொற்காசு கடனாகக் கொடுங்கள். கூடிய விரைவில் அதனைத் திருப்பிக் கொடுத்து விடுவேன்" என்றார். அம் மனிதனைப் பற்றி முல்லா முன்பே அறிந்திருந்தார். அவன் கண்டவர்களிடமெல்லாம் கடன் வாங்குவான். ஆனால் அதனைத் திருப்பிக் கொடுக்கும் வழக்கம் அவனிடம் இல்லை. ஆனாலும் அந்த மனிதன் திரும்பத் திரும்ப வந்து தனக்கு தொந்தரவு தர வேண்டாம் என்று எண்ணிய முல்லா அவனுக்கு ஒரு பொற்காசை அளித்தார். அந்த மனிதன் முல்லாவைத் தலைதாழ்த்தி வணங்கி விட்டுப் போய் விட்டான்.

வாங்கிய கடனைத் திருப்பித் தர வேண்டுமே என்று அஞ்சி அவன், தன் வீட்டுப் பக்கமே வர மாட்டான் என்பது முல்லாவின் எண்ணம். ஆனால் அவர் நினைத்ததற்கு மாறாக இரண்டொரு நாள்கள் கழித்து கடன் வாங்கிய மனிதனே திரும்பி வந்து கடனைத் திரும்பிக் கொடுத்து விட்டான்.

சில நாள்களுக்குப் பின்பு அதே மனிதன் திரும்பவும் முல்லாவிடம் வந்தான்.

"முல்லா அவர்களே! ஐந்து பொற்காசுகளைக் கடனாகக் கொடுங்கள் கூடிய விரைவில் நான் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என்றான். முல்லா அந்த மனிதனை நோக்கி "என்னிடம் கடன் வாங்கிய விடயத்தில் நீ நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டாய். அதனால் உனக்கு கடன் தர மாட்டேன்" என்று உறுதியான குரலில் கூறினார். அதனைக் கேட்டு அந்த மனிதன் திகைத்தான்.

"முல்லா அவர்களே! நான் நம்பிக்கைத் துரோகம் செய்தேன் என்றா கூறினீர்கள்? நான்தான் உங்களிடம் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுத்து விட்டேனே" என்றான்.

"அந்த விடயத்தில் தான் நீ நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டாய். நான் உன்னிடம் பணம் கடன் கொடுத்த போது நீ திரும்பித் தரமாட்டாய் என நான் நம்பினேன். ஆனால் என் நம்பிக்கைக்கு விரோதமாக நீ கடனைத் திருப்பிக் கொடுத்து விட்டாய். ஒரு வகையில் இது நம்பிக்கைத் துரோகம் தானே! இப்போது நான் உன்னைப் பார்க்கும் போது வாங்கிய கடனை நீ திருப்பிக் கொடுத்து விடுவாய் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்படுகிறது. என் நம்பிக்கைக்கு விரோதமாக நீ வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்காமலிருந்து விடுவாயோ என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. அதனால் இந்தத் தடவை உனக்குக் கடன் தரமாட்டேன்" என்று கூறினார் முல்லா.

கடன் வாங்க வந்த மனிதனின் நோக்கமும் அதுதான். "ஒரு பொற்காசுக் கடனைத் தான் உடனே திருப்பிக் கொடுத்து விட்டால் முல்லா நம்பிக்கை கொண்டு கூடிய பெறுமதியானஐந்து பொற்காசுகளைக் கடனாகக் கொடுப்பார். கடன் கைக்கு வந்ததும் திருப்பிக் கொடுக்காமல் இருந்து விடலாம்" என்று அந்த மனிதன் திட்டமிட்டிருந்தான்.

தன் திட்டத்தை எப்படியோ விளங்கிக் கொண்ட முல்லா தனக்குக் கடன் கொடுக்காமல் தவிர்த்து விட்டார் என்பதை உணர்ந்த அந்த மனிதன் முல்லாவின் புத்திசாலித்தனத்தை எண்ணி ஆச்சரியம் அடைந்தான்.

## எதையும் தாங்கிய இலட்சியவாதி



ஆபிரகாம் லிங்கன் எளிய குடும்பத்தில் பிறந்து, சுயமாகக் கல்வி கற்று, வழக்கறிஞராகப் பட்டம் பெற்று, மாநில மத்திய சட்ட சபையில் உறுப்பினராகி, இறுதியில் 16ஆவது அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரே அமெரிக்காவின் உன்னத அதிபராக வரலாற்று அறிஞர்கள் பலரால் கருதப்படுபவர்.

1809இல் பெப்ரவரி 12ஆம் திகதி கெண்டாக்கி என்னுமிடத்தில் பிறந்த இவரது, தந்தை தோமஸ் லிங்கன். இவரது தந்தையின் தொழில் செருப்புத் தைத்தலாகும். தாய் நான்சி இவரின் இளவயதில் இறக்க தந்தை, சாரா என்ற இளம் விதவையை மணந்தார். இவர் லிங்கனைப் பரிவோடு வளர்த்தார். எனினும் குடும்ப ஏழ்மை காரணமாக லிங்கனால் தொடர்ந்து படிக்க முடியவில்லை. ஒரு கடையில் எடுபிடி வேலை பார்த்துக் கொண்டே இரவு வேளைகளில் பள்ளிப் பாடங்களைப் படித்தார். அவர் வாழ்ந்த காட்டுப் பகுதியில் புத்தகங்கள் கிடைக்காமையால் பல மைல்கள் நடந்து சென்று புத்தகங்களைப் பலரிடம் இரவல் வாங்கிப் படித்தார். இவர் விரும்பிப் படித்த கதைகளாவன; ஈசாப் கதைகள் ராபின்சன் குரூசோ, ஆப்ரஹாம், பிலகிரிம்ஸ் என்பன. தனது 22ஆவது வயதில் ஓர் அலுவலகத்தில் எழுது வினைஞராக வேலைக்குச் சேர்ந்தார். பின்னர் கடன் பெற்று ஒரு கடையை நடத்தி வியாபாரத்தில் தோற்றும் போனார். பின்னர் தபால்காரராக கடமை புரிந்து கொண்டு தானாகவே முயற்சி செய்து படித்து வழக்கறிஞரானார். 1834ஆம் ஆண்டில் தனது 25ஆவது வயதில் இலினோய் மாநில சட்ட மன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பின்னர் அமெரிக்காவின் அதிபருமானார்.

1833ஆம் ஆண்டு ரூத்லெஸ் என்ற பெண்ணை மணந்தார். ஆயினும் இரண்டு ஆண்டுகளில் அந்தப் பெண் விஷக் காய்ச்சலால் இறந்தார். பின்னர் தனது 33ஆவது வயதில் மேரி டாட் என்ற பெண்ணை மறுமணம் செய்து கொண்டார். இவருக்கு நான்கு குழந்தைகள் பிறந்தன. மூன்று குழந்தைகள் சிறுவயதிலேயே நோயினால் இறந்தனர். இதனால் இவர் மனைவி மனம் நொந்து மனநோய்க்கு ஆழானார். இத்தனை தோல்விகளையும் மன உறுதியோடு தாங்கிக் கொண்ட இவரை பிறந்தது முதல் தோல்விகள் தொடர்ந்து துரத்திக் கொண்டிருந்தன. ஆயினும் அதனைக் கண்டு சோர்ந்து விடாது எதையும் தாங்கி வெற்றி பெற்று ஒரு உன்னத மனிதரானார்.

இவர் தனது மகனுக்கு அறிவுரை கூறாமல், அவனின் பள்ளி ஆசியருக்கு எழுதிய கடிதம் முக்கியம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

## உலகப் பழமொழிகள் (பின்லாந்து)

- மீனுக்கு ஏரியின் அடித்தளம் தெரியும். ஆண்டவனுக்குச் சமுத்திரத்தின் அடித்தளம் தெரியும்.
- பணம் எமது தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லை; பெருக்கவே செய்கிறது.
- செயல் வீரன் சாதிப்பான் - போதிக்க மாட்டான்.
- எம்மை ஏமாற்றாத நல்ல நண்பன் புத்தகம்.
- சம்பாதிப்பவன் சிறந்த மனிதன் அல்லன். அதனைச் சேமிப்பவனே சிறந்த மனிதன்.
- பசி, உழைப்பு, வியர்வை ஆகியவை வாழ்க்கைக்கு மருந்துகள்.
- எல்லோரிடமும் நன்றி விசுவாசத்துடன் இருப்பவருக்கு இறைவனின் நல்லாசி உறுதியாகக் கிடைக்கும்.
- செய்யத் தெரிந்தவன் சாதிக்கிறான்; செய்யத் தெரியாதவன் போதிக்கிறான்.
- முதலாளியின் தயவு எமக்கு வேண்டுமானால் நாம் அவர் நாய்க்குக் கூட உணவு அளிக்க வேண்டும்.

## தெரிந்து கொள்வோம்

1. பெரியம்மை என்னும் நோய் இடைச்சியரால்தான் பரவுகிறது என்று ஒரு நம்பிக்கை. இதை அறிந்து வியந்தார் ஓர் இளம் வைத்திய மாணவர். பின்னர் ஆராய்ச்சியை மேற்கொண்டார். பெரியம்மை வியாதி மாட்டோடு தொடர்புடையது என்ற முடிவுக்கு வந்து நோயுற்ற பசுமாட்டின் சீழ்கட்டிய பருக்களில் இருந்து எடுக்கப்பட்ட சீழைக் கொண்டு வாக்சின் தயாரித்து அதை ஒரு பையனின் உடலில் செலுத்தி ஆராய்ந்தார். அதிலிருந்து பிறந்தது தான் வியாதிகளைக் குணப்படுத்தும் வக்சின் தயாரிக்கும் முறை. இதனைக் கண்டறிந்த இளைஞர்தான் 'எட்வாடு ஜென்னர்'. நோயுற்ற பசுவின் உடலிருந்து 1796ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி வாக்சின் (நோய்த்தடை மருந்து) தயாரிக்கப்பட்டது.

2. ஆகாயத்தில் பறக்கும் முயற்சிகளில் முன்னோடியாக விளங்கிய ஜெர்மானியர் 'ஓட்டோலி லிலியந்தால்' இவர் பறவைகள் பறப்பதைக் கூர்ந்து பார்த்து மனிதனாலும் பறக்க முடியும் என்று முயற்சி செய்து ஆராய்ச்சி மேற்கொண்டு 2000 தடவை தன் கிளைடர் இயந்திரத்தில் வெற்றிகரமாகப் பறந்த சாதனையாளர். இவ்வாறு ஒருமுறை பறக்கும் போது 1896ஆம் ஆண்டு ஒகஸ்ட் 9ஆம் திகதி கிளைடர் இயந்திரம் தரையில் விழுந்து நொறுங்கியதில் உயிரிழந்தார்.


## மூளைக்கு வேலை

| | | |
|---|---|---|
| வி | ர | வா |
| த | தீ | ப |
| ல் | ம் | க |

சதுரத்தினுள் தரப்பட்ட எழுத்துக்களைக் கொண்டு அர்த்தமுள்ள சொற்கள் குறைந்தது 15 எழுதுக

1. ................ 2. ................
3. ................ 4. ................
5. ................ 6. ................
7. ................ 8. ................
9. ................ 10. ................
11. ................ 12. ................
13. ................ 14. ................
15. ................

## புள்ளிகளை இணைத்து உருவத்தைப் பூர்த்தி செய்யுங்கள்



# மகிழ்ச்சியை தருபவர் நந்தி தேவர்



### நந்தி தேவர் பற்றி சில தெரியாத தகவல்கள்

பொதுவாகவே யாராவது எம்முடைய வேலைகளில் குறுக்கீடு செய்தால் , நந்தி மாதிரி என்று நாம் சொல்வது வழக்கம். ஆனால் உண்மையில் நந்தி என்றால் 'ஆனந்தம்', 'மகிழ்ச்சி தருபவர்' என்று பொருள்.
நந்தியின் அனுமதி பெறாமல் ஈசன் உறையும் இடங்களுக்குள் செல்ல யாருக்கும் அனுமதி கிடையாது. ஆதலால்தான் ஈசனை வழிபடும் முன் நந்தியை வழிபட்டு, "சிவனடியில் சரணம் புகுந்து சிவத் தியானத்தில் ஆழ்ந்திருக்கும் மகா புண்ணியம் பெற்ற நந்திகேசுவரரே! சன்னிதிக்குச் சென்று உமையோடு கூடிய ஈஸ்வரனைத் தரிசிக்க எனக்கு உத்தரவு தருக" என்று பிரார்த்திக்க வேண்டும் என்கிறார்கள். இவ்வளவு அதிகாரம் பெற்ற இந்த நந்தி தேவர் யார்?

பிரதோஷகாலம் மட்டுமன்றி எல்லாக் காலங்களிலும் நாம் சிவபெருமானிடம் வைக்கும் வேண்டுதல்களை நந்தி தேவரிடம் வைத்தால் போதும். அவர் அதைப் பரமேஸ்வரனிடம் கொண்டு சென்று சேர்த்துவிடுவார் என்பது தொன்றுதொட்டு நிலவிவரும் ஐதீகம். தானும் நந்தியும் வேறல்ல, ஒருவரே என்று சிவ பெருமான் நந்தி புராணத்தில் கூறியுள்ளதால், நந்தியைத் தொழுவது சாட்சாத் சிவபெருமானைத் தொழுவதற்கு சமம் ஆகும்.
ஆலயத்திற்கு சென்றுவிட்டு நந்தியை மட்டுமே தொழுதுவிட்டு திரும்பிவிட்டால் கூட சிவபெருமானை வணங்கியதன் முழுப்பலனும் கிட்டும் என்றால் எம்பெருமான் அவருக்கு கொடுத்துள்ள முக்கியத்துவம் எமக்கு புரியும்.



சிவாலயங்களைக் காவல் காக்கும் அதிகாரம் உள்ள நந்தி தேவருக்கு, சிவ பெருமானைப் போலவே நெற்றிக்கண்ணும் நான்கு புஜங்களும், கையில் பிரம்பும், உடைவாளும், இருபுஜங்களில் மான் மழுவும் உண்டு. மானும் மழுவும் வேதத்தைக் குறிக்கின்றன. உடைவாள் வீரத்தை அல்லது ஆண்மையைக் குறிக்கிறது எனவும் கூறுவர்.
ஈசன் நந்திதேவருக்கு அளித்துள்ள வரங்கள் `நீயும் ஆனந்தமாக இரு, பிறரையும் ஆனந்தமாக வைத்திரு!' என்பனவாகும்.
நந்திக்கு இவ்வுலகத்தின் எதையும் கண்டிக்கவும் தண்டிக்கவும் அதிகாரம் வழங்கியுள்ளார் பரமேஸ்வரன். எல்லா உயிர்களையும் ஒரு காலத்தில் ஓய்வு படுத்துதல் மகாசங்காரம் எனப்படும். இந்த அதிகாரத்தைச் சிவபெருமான் நந்தி தேவருக்கு வழங்கியிருக்கிறார்.
சிவபெருமானின் முக்கண்ணின் பார்வைக்கு எதிரில் நிற்க நந்திதேவரைத் தவிர வேறு யாராலும் இயலாது. இது சிவபெருமானே நந்தி தேவருக்கு அளித்த வரமாகும்.

## வரலாற்றில் இன்றைய தினம் 03.10.2017



2013 - இத்தாலியத் தீவான லம்பெட்டுக்கு அருகே படகொன்று கவிழ்ந்ததில் 134 அகதிகள் உயிரிழந்தனர்.

1795 - அடிமை எதிர்ப்புத் தலைவர் ரூலா, சாவுத் தண்டனைக்கு உள்ளானார்.
1932 - பிரிட்டனில் இருந்து ஈராக் சுதந்திரம் பெற்றது.
1949 - அமெரிக்காவில் கறுப்பினத்தவருக்குச் சொந்தமான முதலாவது வானொலி நிலையம் அட்லான்டாவில் தொடங்கப்பட்டது.
1952 - பிரிட்டன் வெற்றிகரமாக அணு ஆயுதமொன்றைச் சோதித்ததன் மூலம் உலகின் மூன்றாவது அணு சக்தி நாடாகியது.
1985 - அட்லான்ரிக்கன் மீள் விண் ஓடம் தனது கன்னிப் பறப்பை மேற்கொண்டது.
1990 - மேற்கு ஜேர்மனியும் கிழக்கு ஜேர்மனியும் இணைந்தன. இந்த நாள் ஜேர்மனின் ஐக்கிய நாளாக கடைப்பிடிக்கப்படுகிறது.
1992 - இராணுவ நடவடிக்கை வடக்கில் தொடரும் என அறிவிப்பு.
2016 - விக்கிக்கு பாதுகாப்பு வழங்க இராணுவம் தயாரென இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு.
2016 - விக்கிக்கு எதிராக வீரவன்ச அணி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் போராட்டம்.


### நாளை
**04.10.2017**
புதன்கிழமை
**புரட்டாதி 18**

திதி: சதுர்த்தசி பி.இ. 01.29 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி மு.இ. 10.02 வரை
சுபநேரம்: 04.32–06.02 வரை
ராகுகாலம்: 12.02–01.32 வரை

## பத்தி எழுத்து

### பசிலின் வடக்குப் பயணம் சுயநல அரசியல்

பசில் ராஜபக்சவின் வடபகுதிக்கான பயணம் முழுக்க முழுக்க அரசியல் சுயநலம் கலந்த உள்நோக்கத்தைக் கொண்டது. மகிந்த ராஜபக்சவை அரியணையில் ஏற்றி வைப்பதன் மூலமாகவே தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுபட முடியுமென்பது ராஜபக்சக்களின் எதிர்பார்ப்பாகும். இதற்காக எதைச் செய்வதற்கும் அவர்கள் தயாராக உள்ளார்கள்.
கடந்த அரச தலைவர் தேர்தலில் வடபகுதி மக்கள் மகிந்த ராஜபக்சவை முற்றுமுழுதாக நிராகரித்திருந்தார்கள். தமக்கு முன்பின் பரிச்சயம் இல்லாதவரான மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளித்து அவரை எவருமே எதிர்பார்க்காத வகையில் அரசதலைவரின் ஆசனத்தில் அமரச் செய்தனர். இதைத் தற்போதைய அரசதலைவர் மறந்துவிடவில்லை. பல சந்தர்ப்பங்களில் இதை நன்றியுடன் எடுத்துக் கூறியிருக்கிறார். மகிந்த ராஜபக்சவும் நான் தமிழர்களின் வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டேன் என்று பலமுறை தெரிவித்துள்ளார்.
இறுதிப் போரின்போது தமிழர்கள் எதிர்கொண்ட அவலங்கள் என்றுமே மறக்க முடியாதன. இதற்குக் காரணமானவர்கள் தமிழ் மக்களால் இன்னமும் வெறுக்கப்பட்ட நிலையிலேயே உள்ளனர். இதைப் போக்குவதென்பது இலகுவான விடயமல்ல. ஆனால் மகிந்த தரப்பு அரசியல்வாதிகள் இதைப் போக்குவதற்கு முயற்சி செய்யத் தயங்கமாட்டார்கள். பசிலின் வருகையும் இதையே முக்கிய நோக்கமாகக் கொண்டது என்பதை மறுக்க முடியாது.
இந்த நாட்டைப் பொறுத்தவரையில் தெற்கில் உள்ள அரசியல்வாதிகளால்தான் நாட்டின் அரசில் உயர் பதவிகளை வகிக்க முடியும். இது வொரு எழுதப்படாத விதியாகும். இதனால் சிறுபான்மையின மக்கள் இரண்டாம் தரப் பிரசைகளாகவே வாழ வேண்டிய நிர்ப்பந்தத்தினுள் உள்ளனர். ஆனால் முக்கிய தேர்தல்களின்போது இவர்களின் ஆதரவு அவசியமானதாகக் கருதப்படுகின்றது. இதற்கு உதாரணமாக கடந்த அரசதலைவருக்கான தேர்தலைக் குறிப்பிட முடியும்.
பசில் ராஜபக்சவும் இதை மனதில் கொண்டுதான் வடபகுதியில் கால்பதித்தார். அவரது பயணத்தின்போது இங்குள்ள சிலர் அவருடன் கலந்துரையாடியிருக்கின்றனர். தமது ஆதரவையும் தெரிவித்துள்ளனர். மகிந்த அணியுடன் இணைந்து நிற்பதால் தமக்கு நன்மைகள் கிடைக்குமென்பதுஇவர்களது எதிர்பார்ப்பாகும்.
ஆனால் போரின்போது பாதிக்கப்பட்ட மக்களின் ஆதரவைத் திரட்டுவது பசிலுக்கு இலகுவானதாக இருக்க மாட்டாது. ஏனென்றால் போர் இடம்பெற்றபோது அவரும் அரசின் ஒரு முக்கிய பங்காளியாக இருந்திருக்கிறார். இதனால் தமிழர்கள் எதிர்கொண்ட பாதிப்புக்களுக்கு அவரும் பொறுப்புக் கூற வேண்டும்.



# சாமி - 2 படப்பிடிப்பு ஆரம்பம்

ஹரி இயக்கத்தில் வெளியான 'சாமி' படத்தில் ஆறுச்சாமி என்ற கதா பாத்திரத்தில் விக்ரம் நடித்திருந்தார். தற்போது இதன் இரண்டாம் பாகம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் மீண்டும் பொலிஸ் வேடத்துக் குத் திரும்பியுள்ளார் விக்ரம்.

ஹரி இயக்கத்தில் விக்ரம் நடிப்பில் 2003ஆம் ஆண்டு வெளியாகி மிகப் பெரும் வரவேற்பைப் பெற்றபடம் 'சாமி'. இதில் விக்ரமுக்கு ஜோடியாக திரிசா நடித்திருந்தார்.

கோட்டா சீனிவாசராவ், விவேக் உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரத் தில் நடித்திருந்தார்கள். இதில் ஆறுச்சாமி என்ற பொலிஸ் அதிகாரி கதா பாத்திரத்தில் விக்ரம் நடித்திருந்தார்.

இந்தப் படத்தின் வெற்றியைத் தொடர்ந்து இதன் இரண்டாம் பாகம் உரு வாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், இரண்டாம் பாகத்துக் காக படப்பிடிப்பு கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது. படக்குழு இந் தத் தகவலை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. (ம)

எதுக்குடா சைக்கிளை படுக்க வைச்சிட்டுப் போறாய்...



இங்கு சைக்கிளை நிறுத்தாதீர்கள்னு போர்ட் வைச்சிருக்காங்க! அதுதான்




சீடர்: விஷம் என்றால் என்ன?
குரு: எமது தேவைக்கு அதிகமாக இருப்பது எதுவோ அது தான் விஷம். அது அதிகாரமாக இருக்கலாம் அல்லது செல்வமாகக் கூட இருக்கலாம். ஏன் அன்பு, வெறுப்பு, பசியாகக் கூட இருக்கலாம்.

சீடர்: :பயம்?
குரு: நிச்சயமின்மையை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பது பயம். நிச்சயமின்மையை ஏற்றுக்கொள்ளும் போது அது சாகசம் ஆகிவிடும்

சீடர்: :பொறாமை?
குரு: மற்றவர்களிடம் இருக்கும் நல்லவற்றை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதே பொறாமை, அப்படி ஏற்றுக்கொள்ளும் போது அவர் உனக்கு உத்வேகத்தை தரக்கூடியவராக மாறிவிடுகிறார்

சீடர்: :கோபம்?
குரு: எமது கட்டுப்பாட்டை மீறிச் செல்வதை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பது கோபம். அப்படி ஏற்றுக்கொள்ளும் போது அது சகிப்புத்தன்மை ஆகிவிடுகிறது.

சீடர்: :வெறுப்பு?
குரு: இன்னொரு மனிதனை ஏற்றுக் கொள்ளாமல் நிராகரிப்பது வெறுப்பு. நிபந்தனைகள் இன்றி ஏற்றுக்கொள்ளும்போது அது அன்பாகிவிடுகிறது.



மனிதப் பண்புகள்

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அன்பால் அனைவரையும் அரவ ணைப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த் ததை விட வருமானம் உயரும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் நன்மதிப்பைப் பெற்று மகிழ்வர்.

**இடபம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில் வியாபாரம் செழிக்க கடின உழைப்பு தேவைப்படும். இலாபம் சுமாராக இருக்கும்.

**மிதுனம்:** வீண் பேச்சு பேசுபவரிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் வருமானம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாகலாம்.

**கடகம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடு வீர்கள். தொழில், வியாபாரத்தில் பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். பணியாளர்கள் சுதந்திர உணர்வுடன் பணியாற்றுவர்.

**சிங்கம்:** முக்கிய பணிகளை விரைந்து முடிப் பீர்கள். உறவினர்களின் உதவி கிடைக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**கன்னி:** பிறர் கூறும் குறைகளை பொருட்படுத்த வேண்டாம். தொழில் வியாபாரத்தில் இலாபம் சராசரி அளவில் இருக்கும். சொத்து ஆவணங் களை பிறர் பொறுப்பில் வழங்க வேண்டாம்.

**துலாம்:** உதவி பெற்றவர் கூட நன்றி மறந்து செயல்படுவர். தொழில் வியாபாரத்தில் திடீர் பொறுப்பு அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும்.

**விருச்சிகம்:** வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கப் பெறுவீர்கள். பிறர் வியக்கும் வகையில் தொழி லில் அமோக இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் விரும்பிய இடமாற்றம் கிடைக்கப் பெறுவர்.

**தனுசு:** திட்டமிட்ட பணி விரைவாக நிறைவேறும். தொழிலில் உருவாகிற இடையூறை முறி யடிப்பீர்கள். இலாபம் உயரும். பணியா ளர்கள் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கப் பெறுவர்.

**மகரம்:** நண்பரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் திருப்திகரமாக இருக்கும். பணியாளர்களுக்கு பாராட்டு, வெகுமதி கிடைக்கும். பெண்கள் புகுந்த வீட்டினரால் பெரிதும் மதிக்கப்படுவர்.

**கும்பம்:** ஒருமுகத் தன்மையுடன் பணியில் ஈடுபடுவது அவசியம். தொழில் வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**மீனம்:** இனிய பேச்சால் பிறரைக் கவர்ந்தி ழுப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிகளை விரைந்து முடிப்பர்.

நாங்க கட்டிக்கப்போற பொண்ணு எப்பவும் அடுப்படியிலேயே இருக்கனும்னு சொல்லேல்ல



எப்பவும் ஆன்லைன்லையே இருக்க வேணாம்னுதான் சொல்றோம்.

"சைனீஸ் ரெஸ்டாரென்ட்டுக்குப் போன தலைவர் எதுக்குத் தகராறு பண்றார்?"

"சீனாவுக்குப் பதிலடி கொடுக்கிறாராம்..."



# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | 3 | | 5 | | | | |
| 5 | | | | | | 8 | 7 | |
| | 6 | | | 7 | | | | 5 |
| | | 4 | 1 | | | | | 7 |
| | 5 | | 9 | 4 | 6 | | 1 | |
| 3 | | | | | 7 | 6 | | |
| 2 | | | | 8 | | | 4 | |
| | | 5 | | | | | | |
| | | | | 9 | | 7 | 8 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 1 | 8 | 4 | 2 | 6 | 3 | 5 |
| 6 | 3 | 8 | 5 | 9 | 1 | 2 | 7 | 4 |
| 2 | 4 | 5 | 6 | 3 | 7 | 8 | 9 | 1 |
| 8 | 2 | 4 | 9 | 7 | 6 | 5 | 1 | 3 |
| 5 | 1 | 6 | 4 | 8 | 3 | 7 | 2 | 9 |
| 7 | 9 | 3 | 1 | 2 | 5 | 4 | 8 | 6 |
| 3 | 5 | 2 | 7 | 1 | 4 | 9 | 6 | 8 |
| 4 | 8 | 7 | 3 | 6 | 9 | 1 | 5 | 2 |
| 1 | 6 | 9 | 2 | 5 | 8 | 3 | 4 | 7 |

# சீதனம் !



கி.தவபாக்கியம்

பத்திரிகைச் செய்தியொன்று கடைசி நேரத்தில் சீதனம் கூடக்கேட்டனராம் அதனால்! பெண்தற்கொலை! தென்மராட்சியில் சம்பவம். தற்கொலைக்குக் காரணம், சீதனம் கேட்டவர்களேதான் என்பது சிலரின் வாதம். ஆனால் தற்கொலைக்குக் காரணம் தற்கொலை செய்த பெண்ணின் அறிவீனமேதான் என்றும் எண்ணத் தோன்றுகிறது. சீதனம் கூடுதல் கேட்டபோது. "அவ்வளவு தான் சீதனம், திருமணம் செய்யவிரும்பினால் செய்யுங்கள் என்று கூறுவதை விட்டு ஏன் தற்கொலை செய்யவேண்டும்? திருமணம் செய்யாத பெண்கள் எல்லாரும் வாழவேயில்லையா? எத்தனையோ பெண்கள் சீரும் சிறப்புமாகப் பேரும் புகழுமாக வாழ்ந்தனர். வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். திருமணம் செய்தபெண்கள் எல்லோரும் சிறப்புற வாழ்ந்தார்களா? மூக்குச் சீறிக் கொண்டு கண்ணீரும் கம்பலையுமாகப் பல பெண்கள் துன்பங்களுடன் வாழ்கிறார்கள் என்பது தெரியாதா? பலவருடங்களுக்கு முன் நடந்த சம்பவம், துன்னையம்பதிப் பெண்ணுக்கு மீசாலை மாப்பிள்ளை திருமணம் பேசப்பட்டது. நிறை சீதனம்! பெண்பணக்காரக் குடும்பம். ஆனால் மாப்பிள்ளைக்கு டொனேசன் தரவேண்டும் என்றபோது பெண் திருமணம் செய்ய மறுத்துவிட்டாள்! மாப்பிள்ளைக்கு ஏன் டொனேசன்? என்று அப்பெண் பின்னர் லண்டன் சென்று சகோதரி குடும்பத்துடன் மகிழ்வாக இருக்கிறார். தன் வேலையுண்டு தானுண்டு எனது சகோதரி குடும்பத்துடன் மகிழ்வாக இருக்கிறார். தன் வேலையுண்டு தானுண்டு என்ற அந்தப் பெண்ணே, பெண்கள் திலகம் என்பற்கு எடுத்துக்காட்டு!

வேறொரு பெண், சீதனத்துடன் திருமணம் செய்துவிட்டுப் பின்னர் வேலைக்குப் போகாமல் வீட்டில் உண்டு உறங்கினாள்! மனைவியார் வேலைக்குப் போகவேண்டும் சமைக்கவேண்டும்! அத்துடன் இடையிடையே அடியும் சப்பாத்துக்காலால் உதையும் எங்கேயடி நின்று போட்டு வருகிறாய்? என்று. கனடாவில் குளிர், அதனால் சப்பாத்துக்கால்களால் உதைவிழும் எம்மூரில் வெறுங்காலால் உதைவிழும் பெண்ணுக்குப் பொறுமை எல்லை மீறவே விவாகரத்துச் செய்து விட்டு மிகச் சந்தோசமாக வாழ்கிறாள்.! இன்னோர் பெண், கணவன் எத்தனையோ அடாவடிகளைச் செய்தும் மனைவி மூச்! பொறுத்தார் பூமி ஆள்கிறாள். கணவன் நரகம் ஆள்கிறான்? இது தானையா வாழ்க்கை. அதாவது வாழ்க்கை 'காதல் இல்லையேல் சாதல்' என்னும் கொள்கையைப் பெண்கள் விட்டுவிட்டு ஆக்கபூர்வமான செயலில் ஈடுபடுவது சாலச்சிறந்ததே! திருமணம் செய்யாத பெண்கள் பலரும் செய்த அறச்செயல்களை முன்னுதாரணமாகக் கொள்ளவேண்டும்.

**பெண்கள் சுதந்திரம்**

ஐயகோ! பெண்களுக்குச் சுதந்திரம் இல்லையே? என்று வாய்கிழியக் கோசம் போடுவதில் பிரயோசனமில்லை! அதற்கான செயல்களைச் செய்யவேண்டும். பெண்கள் ஒன்று சேர்ந்து பல செயல்களைச் செய்யவேண்டும் நாடாளுமன்றில் பெண்கள் பலரை அமைச்சர்களாக்கப் பெண்களால் முடியும். ஆனால், செயலில் பின்னடிக்கிறார்களே ஏன்? பெண்கள், அரசியல் ஒரு சாக்கடை என்று நினைக்கிறார்கள் சிலர் கூறுகிறார்கள்! பல்லிலுள்ள அழுக்கைக்கிளறி மற்றவருக்கு மணக்கவிடுவர் என்று கூறுவாரும் உளர் எங்கு அநியாயம் நடக்கிறதோ அங்கு பெண்கள் தட்டிக் கேட்கவேண்டும் வீட்டிலும்கூட. அப்படிச்செய்தால் அவர்கள் என்ன நினைப்பர்? இப்படிச் செய்தால் மற்றவர்கள் என்னநினைப்பர்? தமிழ்ப்பண்பாடு என்னாகும்? என்று பெண்கள் பயந்து எதுவும் செய்யாது இருந்தால் பெண்கள் சுதந்திரம் அதோகதிதான். காலால் உதைப்பவனின் காலை ஒரு திருகு திருகிவிட்டால் அவன் சரியாகி விடுவான். ஐயோ! கணவனையா என்று பதறாதீர்கள் பல கயவன்களையும் அப்படிச்செய்தால் தான் வழிக்குக் கொண்டுவர முடியும் "அடிக்குமேல் அடிஅடித்தால் அம்மியும் நகரும்" என்பர்.

> ❝ ஐயகோ! பெண்களுக்குச் சுதந்திரம் இல்லையே? என்று வாய்கிழியக் கோசம் போடுவதில் பிரயோசனமில்லை! அதற்கான செயல்களைச் செய்யவேண்டும் பெண்கள் ஒன்று சேர்ந்து பல செயல்களைச் செய்யவேண்டும். நாடாளுமன்றில் பெண்கள் பலரை அமைச்சர்களாக்கப் பெண்களால் முடியும். ஆனால் செயலில் பின்னடிக்கிறார்களே ஏன்? பெண்கள், அரசியல் ஒரு சாக்கடை என்று நினைக்கிறார்கள் சிலர் கூறுகிறார்கள்! பல்லிலுள்ள அழுக்கைக்கிளறி மற்றவருக்கு மணக்கவிடுவர் என்று கூறுவாரும் உளர். எங்கு அநியாயம் நடக்கிறதோ அங்கு பெண்கள் தட்டிக் கேட்கவேண்டும்.



American English
First time in Jaffna
வயது வேறுபாடின்றி ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
வகுப்புக்கள் :
வார நாட்கள், வார இறுதி மற்றும் இரவு நேரங்களில் நடைபெறும்.
மொத்தமாக 7 level கொண்ட இப் பாடநெறியானது மாணவர்களின் ஆங்கில அறிவை சரளமாக வளர்க்க கூடியது. வகுப்பறை பயிற்சி மற்றும் களப்பயிற்சிகள் உள்ளடங்கலாக நவீன கற்றல் சாதனங்களின் உதவியுடன் இலகுவாக மாணவர்கள் ஆங்கிலம் பயில்வது உறுதிசெய்யப்படுகின்றது.
Speaking
Listening
Reading
Writing
Skills 4

ஆங்கிலத்தில் ஆரம்ப அறிவு இல்லை என்றால் level 1 இனை தெரிவு செய்யுங்கள்.
BRC யில் நடாத்தப்படுகின்ற English Placement test இல் தோற்றி உங்கள் ஆங்கில அடைவு மட்டத்தை அறிந்து உங்களுக்குரிய கற்கை நெறியை தொடருங்கள்.
கொழும்பிலிருந்து வருகைதரும் ஆசிரியர் குழாமின் வழிகாட்டலில் தனிப்பட்ட கவனிப்பு, விரும்பிய கற்றல் நேரம் என மேலும் அதிகமான சலுகைகளுடன்.
Course Duration : Each stage 1 - 1 1/2 month
Course Fees : Each stage Rs. 2900/=
Registration Rs. 1000/= (one time only)
076 584 22 22
சான்றிதழ் :- ஒவ்வொரு level இனையும் நிறைவு செய்பவர்களுக்கு தனித்தனி சான்றிதழ் வழங்கப்படும்.
(முழுமையாக நிறைவு செய்பவர்களுக்கு Diploma சான்றிதழ் வழங்கப்படும்.
BRC
BRITISH ROYAL COLLEGE
267, Power House Road, Jaffna.
T-021 221 4191
E-mail: collegebritishroyal@gmail.com
Web: www.britishroyalcollege.com

# ஈர்ப்பு அலைகள்

## பேரண்ட ஆய்வின் புதிய அறிவியல் கண்டுகொள்ளல்

ஆனந்த வாணி

சூரியனைவிடமிகஅதிகநிறைகொண்டவிண்மீன்களிலிருந்து வெளியாகும் ஒளியின் அலைநீளம் (Wave Length) அந்த விண்மீன்களின் ஈர்ப்பால் மாற்றமடைந்து விலகல் அடைவதை (Red s_ift) விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

சூரியனை விடப் பல மடங்கு நிறை கொண்ட விண்மீன்களின் எரிபொருள் தீர்ந்து, அதாவது அவற்றின் ஐதரசன், ஹீலியம் வாயுக்கள் அனைத்தும் அணுக்கருப் பிணைப்பின் மூலம் கனமான தனிம அணுக்களாக மாறியதும் அவற்றின் உள் அழுத்தத்தினால் சுருங்கி 'கருந்துளையாக' மாறும். இந்தக் கருந்துளைகள் ஒளியையும் ஈர்க்குமளவு ஈர்ப்பு வலிமை கொண்டவை. அதனால் இவற்றைக் காணமுடியாது.

கருந்துளைகளும், அதிகநிறை கொண்ட நட்சத்திர எச்சங்களும் ஒளியை வளைப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். எனினும், ஐன்ஸ்டீனின் ஈர்ப்பு அலைகளும் பிரபஞ்சத்தில் இருக்க வேண்டும், பரவ வேண்டும் என அவற்றைக் கண்டு சொல்ல ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

1960 ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பட்ட ஈர்ப்பு அலைகளை உணர்ந்து அளவிடும் கருவியை உருவாக்கும் ஆய்வுகள் பல படிநிலைகளையும், நிதிசார் இன்னல்களையும் தாண்டி கடந்த 2000 ஆம் ஆண்டு முடிவுற்றது.


**'லிகோ' (LIGO)**

'லிகோ' (LIGO) எனப் பெயரிடப்பட்ட இக் கருவியில் லேசர் ஒளிக்கற்றை ஒன்று முதலில் உருவாக்கப்படும். அது பின்னர் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒன்றுக்கொன்று செங்குத்தான இரண்டு சுரங்கக் குழாய்களில் அனுப்பப்படும். இரண்டும் துல்லியமாக சமதூரம் (4 கிலோமீற்றர்) சென்று அங்குள்ள கண்ணாடியில் பட்டு மீண்டும் ஒரு இடத்திற்கு வரும். பல முறை இவ்வாறு பயணப்பட்ட பின் இரு கற்றைகளும் ஒப்பு நோக்கப்படும். இரண்டு ஒளிக்கற்றைகளும் பயணித்த தூரம் ஒன்றாக இருந்தால் இரண்டு ஒளிக்கற்றைகளின் அதிர்வெண் - அலைநீளம் ஒன்றை ஒன்று சமன் செய்துவிடும். இரண்டு ஒளிக்கற்றைகளின் அதிர்வெண் - அலைநீளம் சமமாக இல்லையெனில், இரண்டும் பயணித்த தூரத்தில் மாற்றம் இருப்பதை உணரலாம். இந்த மாறுபாட்டை LIGO கருவி கண்டறியும்.

**சோதனைகள்**


'லிகோ' கருவியில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த 2010 ஆம் ஆண்டு வரையான காலம் முதல் சோதனைகள் நடத்தப்பட்டன. அதில் குறிப்பிடத்தகுந்த வெற்றி கிடைக்கவில்லை. பின்னர் கருவி மேம்படுத்தப்பட்டு கடந்த 2015 ஆம் ஆண்டு மீண்டும் தனது சோதனைகளை ஆரம்பித்தது.

நிறையுடன் கூடிய இரு பருப்பொருள்கள் காலவெளி துணியில்




ஒன்றை ஒன்று சுற்றி வருவதாக உருவகம் செய்து கொள்வோம். அவை ஒன்றை ஒன்று சுற்றுவதால் அவற்றின் பள்ளங்கள் (வளைவுகள்) அலை போன்ற அதிர்வுகளை துணியில் ஏற்படுத்தும். இந்த அலைகள் வேறொரு பொருளைக் கடந்து செல்லும்போது, அப்பொருளின் காலம், வெளியில் ஏற்றத்தாழ்வை உருவாக்கும். அதாவது காலமும் வெளியும் ஒரு புறம் விரியும். அதேவேளை அதன் செங்கோட்டு எதிர்த் திசையில் குறுகும்.

காலத்திலும், வெளியிலும் (தூரத்திலும்) ஏற்படும் இந்த மாற்




றம் 'லிகோ' இன் இரண்டு செங்குத்துக் குழாய்களில் ஒன்றை நீட்டும், மற்றொன்றைச் சுருக்கும். அணுவின் அளவில் ஆயிரத்தில் ஒரு பங்கு அளவுக்கே இருக்கும் மிக மிகச் சிறியதான இம்மாற்றத்தைக் கைப்பற்றி அளவிடுவது எளியதல்ல.

'லிகோவின்' சுரங்கப்பாதைகளில் பயணித்த லேசர் ஒளிக்கற்றைகளுக்கு இடையில் மிகச் சிறிய வேறுபாடு தெரியும். இந்த வேறுபாட்டைத்தான் 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 04 ஆம் திகதி முதல் முறையாகக் கண்டறிந்து அளவிட்டுள்ளதாக விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

**ஒளியின் வேகத்தில் பயணித்த ஈர்ப்பு அலை**

இதுமட்டுமின்றி அவ் அல்லை களின் தோற்றுவாயையும் கணக்கிட்டுள்ளனர். பூமியிலிருந்து 130 கோடி (1.3 பில்லியன்) ஒளியாண்டுகள் தொலைவில் எமது சூரியனைப்போல முறையே 36 மடங்கு நிறையும், 29 மடங்கு நிறையும் கொண்ட இரண்டு கருந்துளைகள் ஒன்றை ஒன்று சுற்றிச் சுழன்று கொண்டிருந்தன. அவை படிப்படியாக நெருங்கி ஒன்றோடொன்று மோதி சூரியனைப் போல 62 மடங்கு நிறை கொண்ட கருந்துளையாக மாறின. அவற்றிலிருந்து வெளியான ஆற்றல் ஈர்ப்பு அலைகளாக பரவின.

அதாவது, தொலைதூரத்தில் அண்ணளவாக 130 கோடி ஆண்டுகளுக்கு முன்னால் இரண்டு கருந்துளைகள் ஒன்றோடு ஒன்று இணைந்ததால் வெளியான ஈர்ப்பு அலைகள் ஒளியின் வேகத்தில் பயணித்து கடந்த 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 04 ஆம் திகதியன்று பூமியைக் கடந்து சென்றன.

இந்த நூற்றாண்டின் சிறந்த சாதனைக் கண்டுபிடிப்பாக இதைக் கொண்டாடுகின்றனர் விஞ்ஞானிகள்.

**கருந்துளைகள்**

ஒரு பொருள் வெளியிடும் ஒளி அல்லது பொருளின் மீது பட்டுப் பிரதிபலிக்கும் ஒளியைக் கொண்டு தான் நாம் எல்லாப் பொருள்களையும் கண்களால் காண்கிறோம். கலிலியோவின் தொலைநோக்கியால் நட்சத்திரங்கள் வெளியிடுகின்ற கண்ணால் காணும் ஒளியையும், ஒளியைப் பிரதி பலிக்கும் கோள்களையும் மட்டுமே காணமுடிந்தது.

பின்னர் அறிவியலும் தொழில்நுட்பமும் வளர்ந்து, ஈர்ப்பு விசையால் அதிர்வெண்ணும், அலை நீளமும் மாற்றப்பட்டு இதர மின் காந்த அலைகளான அகச்சிவப்பு, புற ஊதா, நுண்ணலை, ரேடியோ அலைகள், எக்ஸ் கதிர்கள் (XRay) போன்றவற்றை வெளியிடும் அல்லது பிரதி பலிக்கும் பொருள்களைக் காணவும், ஆராயவும் முடிந்தது.

**ஒளியும், மின்காந்த அலைகளும்**

ஆக,ஒளி மின்காந்த அலைகளை வெளியிடாத, அவற்றையும் ஈர்க்கக்கூடிய கருந்துளைகளை எப்படி பார்ப்பது, ஆய்வு செய்வது என்ற கேள்விகள் எழலாம். உண்மையில் பெரு வெடிப்பு நிகழ்ந்ததி லிருந்து 3 இலட்சத்து 78 ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் தான் நாம் காணக்கூடிய ஒளியும், மின்காந்த அலைகளும் தோன்றிப் பரவ ஆரம்பித்தன.

மின் காந்த அலைகள் தவிர்த்த வேறு அலைகள் இருக்கும் பட்சத்தில் அவற்றை உணர்ந்து கணக்கிட முடிந்தால் அவற்றைக் கொண்டு கருந்துளைகளையும், முதல் மூன்று லட்சம் ஆண்டுகளின் விண்பொருள்களை காணவும் ஆராயவும் முடியலாம். மின்காந்த அலைகளைத் தவிர்த்து வேறு அலை ஒன்று இருப்பதைத் தான் ஐன்ஸ்ட்டின் தனது பொதுச் சார்பியல் கோட்பாட்டில் விளக்கி அதற்கு ஈர்ப்பு அலைகள் எனப் பெயரிட்டார்.

**புதிய விண்பொருள்களைத் தெரிந்து கொள்வதற்கான ஆரம்பம்**

அந்த வகையில், தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஈர்ப்பு அலைகளின் இருப்பு இப் பிர பஞ்சத்தை மேலும் புதிய கோணத்தில் ஆய்ந்த றிய உதவி செய்யும். உதாரணமாக, தற்போது கண்டறியப்பட்ட ஈர்ப்பு அலைகளைக் கொண்டு அதன் தோற்றுவாயான கருந்துளை இணைவைக் கணக்கிட்டுள்ளனர்.

இந்த ஈர்ப்பலைச் சோதனைகளை மேலும் மேம்படுத்திச் செல்லும்போது, இதுவரை நாம் கண்டிராத விண்பொருள்களைப் பற் றித் தெரிந்து கொள்ளமுடியும், அது விடை தெரியாத புதிர்களை வெளிப்படுத்தும். இன்றளவிலும் கருதுகோள் நிலையிலேயே உள்ள பெருவெடிப்பின் மூலம் பிரபஞ்சம் தோன்றிய ஆரம்பக் கட்டங்களை தெரிந்து கொள்ள உதவும். எமது ஒட்டுமொத்தப் பார்வைக் கோணத்தைவிரிவும்ஆழமும்கொண்டதாக மாற்றும் தன்மையுள்ளது இந்தக் கண்டுபிடிப்பு. நூற்றாண்டுகாலத் தேடலுக்கு விடை கிடைத்துவிட்டது. ஆனால் பேரண்ட ஆய்வுகள் புத்தம் புதிய திசையில் முதல் அடியெடுத்து வைக்க தொடங்கி விட்டன.

**Double Cab வாடகைக்கு**

Double Cab Full Automatic வாகனம் மாத வாடகைக்கு வழங்கப்படும். அரச மற்றும் தனியார் நிறுவன உயரதிகாரிகளுக்கு உகந்தது. - 077 404 8775

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி சகுந்தலாதேவி சிவநேசன் அவர்களின்
அன்புக் கணவர்

**சுப்பையா சிவநேசன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம், யா/நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை.**

## கண்ணீர் அஞ்சலி


**ம.கணேசரட்ணம்**
(ஓய்வுபெற்ற சத்திர சிகிச்சை நிபுணர்)



அவர்களின் மறைவினால் துன்புற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**வைத்தியசாலைச் சமூகம்**
**யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்



### திருமதி பவளவதி புஸ்பநாதன்

நீர்வேலிவடக்கைப்பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி பவளவதி புஸ்பநாதன் நேற்று (02.10.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற புஸ்பநாதன் அவர்களின் அன்பு மனைவியும்காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் அரசம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை நாகரத்தினம் தம்பதியரின் அன்புமருமகளும் மதிவதனா (யா/அச்சுவேலி ஆரம்ப பாடசாலை), வாசுகி (சுவிஸ்), ரவிக்காந் (டென்மார்க்) காலஞ்சென்ற ஜெயக்காந்தன் (கோபி) ஆகியோரின் அன்புதாயும் சிவநாதன் (யா/ ஸ்ரீ புத்தூர் சோமஸ்கந்தாக்கல்லூரி ஆசிரியர்), சுபாஸ்கரன் (சுவிஸ்), வினோதினி (டென்மார்க்) ,நிறஞ்சனா (ஸ்கந்தபுரம் இல.02 பாடசாலை ஆசிரியை) ஆகியோரின் அன்புமாமியும் புனிதவதி, கந்தசாமி (ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகஸ்தர் கிளிநொச்சி), செல்வநாயகம் (ஓய்வு பெற்ற இ.போ.ச உத்தியோகத்தர்), பத்மாவதி, உமாவதி ஆகியோரின் அன்புச்சகோதரியும் கிருஷிகா(யாழ். இந்து மகளிர் கல்லூரி), சபிதா, கவிசன், டர்மிளா (சுவிஸ்), டிவ்வியன், லதுனா (டென்மார்க்) ,சங்கீர்த்தனா (ஸ்கந்தபுரம் இல.02 பாடசாலை) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2017) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி. 077 8922 447**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் 710
சீட்டிழுப்பு திகதி 02.10.2017 திங்கட்கிழமை
Q 29 42 47 65
சுப்பர் ஜக்பொட் ரூ. 40, 999,136/=
பச்சை நிற டிக்கட்டுகள் 2017.10.05 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1403 சீட்டிழுப்பு திகதி 2017.10.02
வெற்றி இலக்கங்கள்
10 19 25 51 B
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 11,135,368/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919

## தேவை

அரைக்கும் ஆலைக்கு அனுபவமுள்ளவர்கள் ,பழக விரும்புபவர், பில்கிளாக், பொதியிடல் ,சமையல் உதவியாளர் என்பவற்றுக்கு பெண்கள் தேவை. 077 174 6101

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2937 திகதி 02.10.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
13 32 56 69 L
போனஸ் இல. 12
புதன் கிழமை ஜக்பொட் 44, 486,710/-
தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
2017.10.04 ஆம் திகதி புதன் கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 33
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2017.10.02
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 59,235,155/-
வெற்றி இலக்கங்கள்
08 21 59 69 K
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919

# தீராத நோய்களை தீர்க்கும் பருத்தி

பருத்தியை நாம் ஆடைகள் தயாரிக்கவும், மெத்தைகள் தயாரிப்பதற்காகவும் தான் பயன்படுத்துகின்றோம். ஆனால், இந்தப் பருத்தியின் இலை, பூ, பஞ்சு, பட்டை,வேர்,வேர்ப் பட்டை என அனைத்தும் மருத்துவ குணாங்கள் உடையன. இந்தப் பருத்திப் பஞ்சு மெத்தையில் படுத்து உறங்குவதால் ஆயுள் அதிகரிக்கும். பருத்தி ஆடைகள் கோடை காலத்திற்கு ஏற்றது. பருத்தியின் மேலான பயன்களாக

**நரம்புக்கோளாறுக்குப் பயன்படும் பருத்தி**

கற்பனையில் ஒரு சிலர் தங்களுக்கு கை வலி, கால் வலி என கூறுவார்கள். மருந்தால் இது சரியாகாது. இது மனஅழுத்தம் ஏற்பட்டு அதனால் நரம்பு மண்டலம் பாதிப்படைந்து உண்டாகும் நோயாகும். இதற்கு பருத்தி வேரின் பட்டையை அரை லிட்டர் தண்ணீரில் போட்டு பாதியளவு சுண்டும் வரை காய்ச்சி வடிக்கட்டி 30மில்லி லீற்றர் அளவில் அரை மணி நேரத்திற்கு ஒரு முறை குடித்து வந்தால் நரம்பு கோளாறுகள் அதனால் ஏற்படும் கற்பனை நோய்கள் நீங்கும்.

**வலிமைக்கு**

இலைக்கொழுந்தை நிழலில் காயவைத்து குடிநீரிட்டு கழிச்சல்களுக்கு கொடுத்தால் கழிச்சல் நிற்கும். உடல் வலிமை பெறும்.

**வெள்ளை படுதல்**

30 கிராம் இலை அல்லது மொக்கை எடுத்து மசிய அரைத்து 80 மில்லி லீற்றர் பசும்பாலில் கலந்து காலையில் ஒரு வேளை மட்டும் குடித்து வந்தால் பெண்களின் வெள்ளைபடுதல் முதலிய சிறுநீரகக் கோளாறுகள் நீங்கும்.

**வயிற்றுக் கடுப்பு**

தீராத வயிற்றுக் கடுப்பு ஏற்பட்டால், இலைச்சாறு 30 மில்லி லீற்றர் எடுத்து 150 மில்லி லீற்றர் பசும்பாலில் கலந்து காலை மாலை குடித்து வந்தால் மூலம் வயிற்றுக் கடுப்பு நீங்கும்.

## விற்பனைக்கு

மருத்துவ ஆய்வு கூட
உபகரணங்கள் விற்பனைக்கு
உண்டு.
077 305 1460 மருதனார்மடம்

## 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 04 . 09 . 1947 இறப்பு 23 . 09 . 1999

**அமரர் சின்னத்தம்பி கந்தசாமி**

திதி : திரயோதசி [03.10.2017]

ஐயா என்றழைத்து பதினெட்டு ஆண்டானதோ?
எம்மை ஆளாக்கிய தெய்வமே
ஆறவில்லை எம்துயரம் - என்றும்
உங்கள் நினைவுகளுடன் வாழும்

G.S.லேன்,
எருவன், கொடிகாமம்.

உங்கள்
மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



திருமதி **இரத்தினம்மா இரத்தினம்**

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம்மா இரத்தினம் நேற்று (02.10.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லம்மா தம்பதியரின் அன்புமருமகளும் முன்னாள் காலி கடை முதலாளி V.S.R இரத்தினத்தின் அன்பு மனைவியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புகையிரத நிலைய வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். 021 205 3308**

**தகவல்: குடும்பத்தினர்.**

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆசான்

**Dr. ம. கணேசரட்ணம்**


சத்திரசிகிச்சை நிபுணர் நேற்று இறைபதமடைந்தார்.

நாளாந்தம் மனிதர்கள் வருகிறார்கள், போகிறார்கள்.
சிலர் மட்டுமே மற்றவர்களின் வாழ்வை வளமாக்குகிறார்கள்.
அவர்களை மட்டுமே உலகம் மறப்பதில்லை.

உங்கள் வழிகாட்டலில் வந்தவர்கள் - நாம்
உங்களை ஒருபோதும் மறப்பதற்கில்லை.

"யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியநிபுணர்களின் அமையம்"

## மரண அறிவித்தல்



அன்னை மடியில் 12 . 06 . 1928 ஆண்டவன் அடியில் 02 . 10 . 2017

**தேவசகாயம் மைக்கல் இராசையா**

*(ஓய்வுபெற்ற உப அதிபர், யா/நாவற்குழி மகா வித்தியாலயம், ஆங்கில ஆசிரியர்)*

பங்களா வீதி, மீசாலையை வசிப்பிடமாகக் கொண்ட தேவசகாயம் மைக்கல் இராசையா தனது 89ஆவது வயதில் நேற்று (02.10.2017) திங்கட்கிழமை ஆண்டவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தேவசகாயம் கிறிஸ்ரினா தம்பதியரின் அன்பு மகனும் லூர்துமலரின் அன்புக் கணவரும் மேரி அமலதாஸ் (கொழும்பு), மேரி மெற்றில்டா (கனடா), அன்ரனி (கொழும்பு), மேரி ஜெசில்டா (பிரதேச செயலகம், சாவகச்சேரி), மேரி இமெல்டா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்ரன் ருவாஸ், மேரி பெனடிக்றசன், பத்மநாதன் ஆகியோரின் அன்பு மாமனும் பப்ரிஸ்கா, பற்றிசன், ஜேன் செடோனி, போல் ரிசாந், ஆஞ்சலோ டி. டயஸ், ஜெவ்னிக்கா, காணல் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதி நல்லடக்க ஆராதனைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பங்களா வீதி.
மீசாலை.**

**தகவல்: குடும்பத்தினர்.
077 275 8138**

# விடுதலைப் புலிகள் புதைத்த வெடிபொருள்களைத் தேடி புதுக்குடியிருப்பில் அகழ்வு

## பொலிஸாரின் நேற்றைய முயற்சிக்குப் பயனில்லை

விடுதலைப்புலிகளால் புதைக்கப்பட்ட வெடிபொருள்களைத் தேடி புதுக்குடியிருப்பில் அகழ்வுப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. எனினும் பொலிஸாரின் அந்த முயற்சி பயனளிக்கவில்லை.

போர் நடைபெற்ற காலத்தில் விடுதலைப் புலிகளால் பல்வேறு பகுதிகளில் வெடிபொருள்கள் புதைக்கப்பட்டன என்ற இரகசியத் தகவல் கிடைக்கப்பெற் றது. புதுக்குடியிருப்பின் பச்சைப் புல்மோட்டை மற்றும் உடையார்கட்டுப் பகுதிகளில் வெடிபொருள்கள் புதைத்து வைக் கப்பட்டுள்ளதாக நம்பத்தகுந்த இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டன. அவை முல்லைத்தீவு நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் தோண்டப்பட்டன.

ஆனந்தபுரம், பச்சைப்புல்மோட்டைப் பகுதியில் நேற்று மாலை 3 மணியளவில் தோண்டும்பணி தொடங்கப்பட்டது. மாலை 5.30 மணியளவில் 10 அடி ஆழத்துக்குத் தோண்டி எதுவித வெடிபொருள்களும் காணப்படாத நிலையில் அகழ்வு நடவடிக்கை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உடையார்கட்டுப்பகுதியில் தோண்டும் நடவடிக்கை பிற்போடப்பட்டுள்ளது" என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-ரி3)

# பெண் போராளி இந்தோனேசியாவில் உயிரிழப்பு

சிறுநீரகப் பாதிப்பால் அவதியுற்ற முன்னாள் பெண் போராளி ஒருவர் இந்தோனேசியாவில் உயிரிழந்தார்.

மாலதி படையணிப் போராளியும் மணலாறு கட்டளைப் பணியகத் தளபதி குமரனின் துணைவியும் படைப்பாளியுமான சந்தியா என்பவரே இந்தோனேசியாவில் உயிரிழந்தார்.

இறுதிப் போரின்போது அரச கட்டுப்பாட்டுக்கு வந்த அவர் பின்னர் இந்தோனேசியா சென்று வாழ்ந்து வந்தார். இந்த நிலையில் சிறுநீரகப் பாதிப்புக் காரணமாக சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். (வ-ரி3)

# வாள்வெட்டுக்கு இலக்காகி தாயும் மகனும் படுகாயம்

யாழ்ப்பாணம் ஒக் 3

படுகாயமடைந்த நிலையில் தாயும் மகனும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் வாள் வெட்டுக்கு இலக்காகியே படுகாயமடைந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மானிப்பாய்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மானிப்பாயைச் சேர்ந்த விக்னேஸ் வரன் கணேஸ்வரி (வயது 39), விக்னேஸ்வரன் துஷ்யந்தன்(வயது -19) ஆகிய இருவருமே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

"அயல் வீட்டாருடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பான விசாரரணைகள் இடம்பெறுகின்றன" என மானிப்பாய்ப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-8, ரி1)

## சில...

மேற்பட்டோர் படுகாயமடைந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

லொஸ் வெகாஸ் நகரில் உள்ள மாண்டலே பே சூதாட்ட விடுதியின் 32வது மாடியிலேயே அமெரிக்க நேரப்படி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 10.30 மணிக்கு இந்த அசம்பாவிதம் நடைபெற்றது. துப்பாக்கிச் சூட்டினாலும், அதைத் தொடர்ந்து மக்கள் சிதறி ஓடியதால் ஏற்பட்ட நெரிசலுக்குள்ளும் சிக்கி காயமடைந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 400 என்று பன்னாட்டு ஊடகமான டெய்லி மெய்ல் குறிப்பிட்டது. இவர்களில் பலரின் நிலமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு அதிகரிக்கலாம் என்றும் அச்சம் வெளியிடப்பட்டது.

தாக்குதலில் ஈடுபட்டவர், 64 வயதுடைய ஸ்டீபன் பேடக் என்றும், உள்ளூரைச் சேர்ந்த அந்த நபரை பொலிஸார் சுட்டுக்கொன்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. சம்பவத்துக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் தீவரவாத அமைப்பு உரிமை கோரியுள்ளது.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப், முன்னாள் அதிபர் ஒபாமா உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் இந்தத் தாக்குதலுக்கு தமது கண்டனத்தைத் தெரிவித்தனர். (வ-ம)

## முல்லையில்...

முல்லைத்தீவு 14ஆம் கட்டையை அண்மித்து 19ஆவது கெமுனுவோச் படைப்பிரிவினரின் முகாம் அமைந்துள்ளது. அங்கு அந்தச் சிப்பாய் நேற்று திடீரென்று மயங்கி சரிந்துள்ளார். அவரை சக சிப்பாய்கள் மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்த்தனர். எனினும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என மருத்துவ பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

உடற்கூற்று பரிசோதனையின்போது அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதனால் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இராணுவ பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-4-ரி3)

## புதுக்குடியிருப்பு...

தைச் சேர்ந்த தேவராசா நிசாந்தன் (வயது -25) என்பவரே உயிரிழந்தார்.

பிக்கப் ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதுண்டதில் விபத்து இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் படுகாயமடைந்தார். அவர் உடனடியாக மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக அவர் வவுனியா மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காது சில மணித்தியாலங்களில் அவர் உயிரிழந்தார்.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டுள்ளதாகப் புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர். (4-ரி3)

## சட்ட மருத்துவர்...

மே மாதம் படுகொலை செய்யப்பட்ட தாஜுதீன் தொடர்பில் முதலாவது உடற்கூற்றுப் பரிசோதனைகளை சட்டமருத்துவ அதிகாரியாக அப்போது கொழும்பில் கடமையாற்றிய ஆனந்த சமரசேகர மேற்கொண்டிருந்தார். 2015ஆம் ஆண்டு தாஜுதீனின் சடலம் மீளத் தோண்டி எடுக்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டபோது ஆனந்த சமரசேகரவின் உடற்கூற்றுப் ப...சோதனை அறிக்கை பொய்யான தகவல்கை...க் கொண்டிருந்தமை உறுதியானது.

ஆனந்த சமரசேகரவுக்கு எதிராக இலங்கை மருத்துவச்சபை முன்னெடுத்த விசாரணைகளிலும் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டு மருத்துவ அடையாள அட்டையும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே அவரைக் கைது செய்யக் குற்றப் புலனயவுப் பிரிவு நீதிமன்றிடம் அனுமதி கோரியுள்ளது. (வ-5,31)

## சரத்...

சரத் என் சில்வாவின் அடிப்படை உரிமை மீறல் மனுவின் இடையீட்டு மனுதாராக தம்மை ஏற்று, அதனை ஆராய்ந்து சரத் என் சில்வாவின் மனுவை நிராகரிக்குமாறு கோரி சட்டத்தரணி ஒருவரே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

பாதுக்கை வீதி, ஹந்தபாங்கொட முகவரியைச் சேர்ந்த சட்டத்தரணி அருண லக்சிறி என்பவரே மனுவைத் தாக்கல் செய்துள்ளார். (வ-5,31)

## அரசியல்...

சியல் கைதிகளில் இருவர் அங்கிருந்து வெளியேறி, நேற்றைய தினம் உணவு ஒறுப்புப் போராட்டத்தை தொடர்ந்தனர்.

மூன்று தமிழ் அரசியல் கைதிகளினது வழக்கு வவுனியா மேல் நீதிமன்றில் 4 ஆண்டுகளாக நடைபெற்று வந்தது. அந்த வழக்கை சட்டமா அதிபர் திணைக்களம் அநுராதபுரம் மேல் நீதிமன்றுக்கு இடமாற்றியுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ் அரசியல் கைதிகள் மூவரும் கடந்த திங்கட் கிழமையிலிருந்து தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். அவர்களின் இருவரின் உடல்நிலை மோசமடைந்ததைத் தொடர்ந்து சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

மதியரசன் சுலக்சன், திருவருள் இருவரும் சிறைச்சாலை மருத்துவமனையிலிருந்து நேற்று வெளியேறி ஏனைய அரசியல் கைதிகளுடன் இணைந்து உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். ரி.தர்சன் தொடர்ந்தும் சிறைச்சாலை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதேவேளை, இவர்கள் மூவரும் வழக்குக்காக அநுராதபுரம் மேல் நீதிமன்றுக்கு நேற்றுச் செல்ல வேண்டியிருந்தபோதும், சிறைச்சாலை மருத்துவர் அவர்களது உடல் நிலை மோசமாக உள்ளது என்ற சான்றிதழைக் கொடுத்தமையால் நீதிமன்றுக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்படவில்லை. (வ-5)

## பெற்றோரை...

வேண்டும். தற்போதைய காலத்தில் எத்தனை பேர் அவ்வாறு காணப்படுகின்றனர் என்பது முக்கியமான கேள்வி. பெற்றோருக்கு கீழ்படியாத பிள்ளைகள் எதிர்காலத்தில் சிறைத் தண்டனை அனுபவிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகலாம்.

எமது நாட்டில் முதியோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன் அவர்களில் பெருவாரியானோர் முதியோர் இல்லங்களில் வசித்து வருகின்றனர். முதியோரின் நலன்கருதி சகல வசதிகளும் உள்ளடக்கியவிதமாக முதியோர் இல்லங்கள் மூன்றை அமைப்பதற்கு ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றேன். தமது பிள்ளைகளால் பராமரிக்கப்படாத பெற்றோரின் வேண்டுகோளுக்கமைவாகவே புதிய முதியோர் இல்லங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன - என்றார். (வ-5,31)

## தமிழரசு...

திப்பு பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

விரைவில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஆசனப் பங்கீடு தொடர்பாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உயர் பீடத்துடன் பேச்சு நடத்த ரெலோ தீர்மானித்திருந்தது. இன்றைய தினம் பேச்சு நடத்துவதற்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி இணங்கியிருந்தது.

இந்த நிலையில் திடீரென பேச்சுப் பிற்போடப்பட்டுள்ளது. இரு தரப்பும் இணங்கியே பேச்சுக்கான திகதி பிற்போடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-5,31)

## 36 குடும்பத்...

ருந்த 47 பேரும் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் சார்பில் முற்பட்ட சட்டத்தரணிகள் பிணை விண்ணப்பம் கோரினர். அதனைப் பரிசீலித்த நீதிவான் 36 பேருக்குப் பிணை வழங்கினார்.

அவர்கள் அனைவரும் குடும்பத் தலைவர்கள். அவர்களது குடும்ப நிலையைக் கவனத்தில் கொண்டு ஒவ்வொருவரும் தலா 2 லட்சம் ரூபா பெறுமதியான 3 ஆள் பிணைகளில் விடுவிக்கப்படுகின்றனர் என்று மன்று கட்டளையிட்டது. மிகுதி 11 பேரின் கட்டுக்காவல் எதிர்வரும் 16 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கில் சட்டவிரோதமாக மணல் கடத்தலைத் தடுக்கும் நடவடிக்கையில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் துன்னாலையைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் உயிரிழந்தார். பொலிஸார் மீது கொலைக் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டதோடு சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 2 பொலிஸ் உத்தியோகத்தர்கள் விளக்கமறியலில் இருந்து வருகின்றனர்.

இளைஞன் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து துன்னாலையில் அசாதாரண நிலை ஏற்பட்டது. சாலையில் ரயர் போட்டுத் தீ வைக்கப்பட்டன. போக்குவரத்துத் தடைப்பட்டதோடு அரச வாகனங்களுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டது. பொலிஸ் காவலரண் நொறுக்கப்பட்டது. பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டில் சேதம் விளைவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பொலிஸார் கைது வேட்டையை ஆரம்பித்தனர். பலர் இன்னும் தலைமறைவாகியுள்ளனர் என்று பொலிஸார் கூறுகின்றனர். (வ-4,26)

## அலோசியஸ்...

முறி மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பேப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் பணிப்பாளர்கள் நால்வரும் நாட்டைவிட்டு தப்பிச் செல்ல வாய்ப்புள்ளதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவு கோட்டை நீதிவான் மன்றுக்கு அறிவித்தது. அதனை ஆராய்ந்த நீதிவான் லங்கா ஜயரத்ன, பணிப்பாளர்கள் நால்வரும் வெளிநாடு செல்ல தடை விதித்தார்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் மகேந்திரனின் காலப்பகுதியில் இடம்பெற்ற அனைத்துப் பிணை முறி விநியோக நடவடிக்கைகள் தொடர்பிலும் குற்றப் புல னாய்வுப் பிரிவு குற்றவியல் விசாரணையை ஆரம்பித்துள்ளதாக மூத்த மேலதிக மன்றாடியார் அதிபதி தப்புல டி லிவேரா பிணை முறி மோசடி தொடர்பில் விசாரணை செய்யும் அரச தலைவர் ஆணைக் குழுவுக்கு அறிவித்திருந்தார்.

பேப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் தலைவர் அர்ஜுன் அலோசியஸ், அந்த நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன, தலைமைக் கணக்காளர் நுவன் சல்தாது மற்றும் தலைமை தொழில்நுட்ப நிறைவேற்று அதிகாரி சசின் தேவதந்ரி ஆகியோருக்கே தடை உத்தரவு கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்னவால் பிறப்பிக்கப்பட்டது. (வ-5,31)

## மருத்துவ...

டைந்ததைத் தொடர்ந்து ஏற்பட்டிருந்த வெற்றிடத்துக்கே சுகாதார அமைச்சால் பேராசிரியர் கொல்வின் குணரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

காலோ பொன்சேகாவின் பதவிக் காலத்தை மீளவும் நீடிக்க கோரிக்கைகள் பல முன்வைக்கப்பட்டிருந்தன. அவை தொடர்பில் கடும் வாதப் பிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்த நிலையிலேயே பேராசிரியர் கொல்வின் குணரத்ன மருத்துவ சபையின் தலைமை பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (வ-5,31)

## ஒழுங்கமைத்தபடி...

லைச் சமூகத்தினர், நலன்விரும்பிகள், ஊரவர்கள், பழைய மாணவர்கள் என்று சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்டோரின் பங்கேற்புடன் நிகழ்வு சிறப்புற நடைபெற்றது.

கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தின் வைரவிழாவை ஒத்திவைக்குமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சர் விடுத்த பணிப்புக்கு அமைவாக, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலரால் பாடசாலைச் சமூகத்துக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

பாடசாலை சமூகத்தினர் வடக்கு மாகாண கல்வி அமைச்சரைச் சந்தித்துப் பேசியபோதும் அவர் தனது முடிவை மாற்றவில்லை.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனையோ, கல்வி அமைச்சரையோ நிகழ்வுக்கு அழைக்காமல், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனை

அழைத்தமையே ஒத்திப்போடுவதற்கு பணித்தமைக்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தக் குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ளும் விதத்தில் வடக்கு மாகாண கல்வி அமைச்சரின் ஊடக அறிக்கையும் அமைந்திருந்தது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சர் எத்தகைய உத்தரவைப் பிறப்பித்தாலும் நிகழ்வை நடத்துவது என்றும், தலைமை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனை அழைத்தே நடத்துவது என்றும் பாடசாலைச் சமூகத்தினர் உறுதியான முடிவை எடுத்தனர். இதற்கு அமைவாக நேற்றைய தினம் நிகழ்வு நடைபெற்றது. பெருமளவிலானோர் பங்கேற்றனர். (வ-5,101)

## மானிப்பாயில்...

யத்துக்கு கிடைத்த இரகசியத் தகவலின் படி பொலிஸார் தேடுதலை முன்னெடுத்தனர். இதன் போதே வீடு ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் குடு மீட்கப்பட்டது. அது 9 கிராம் எடைகொண்டது. அதனை வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அவர்கள் மல்லாகம் நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படுவர்" என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-21,8,101)

## பாடசாலைகளின் தேசியமட்ட கால்பந்தாட்டம் இன்று ஆரம்பம்

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடர் கொழும்பில் இன்று ஆரம்பமாகிறது. இன்று இடம்பெறவுள்ள 20 வயதுப்பிரிவினருக்கான ஆட்டங்களில் குறிஞ்சாக்கேணி அரபா வித்தியாலய அணியை எதிர்த்து முருங்கன் மகா வித்தியாலய அணி மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் ஆட்டத்தில் கடையமோட்டை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து மன்னார் சென். சேவியர் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)



## இன்றைய மோதல்கள்

**வவு. மாவட்ட கால்பந்தாட்டம்**

வவுனியா மாவட்ட கால்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஏபிசி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கோல்ட் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**திருக்குமரன் வி.க. கால்பந்துத் தொடர்**

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஒலிம்பிக் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரணவாய் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வரணி யுத் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ம-23)

# இஸ்கோ அதிரடி வென்றது மட்ரிட்

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி அபார வெற்றிபெற்றது. நட்சத்திர வீரரான இஸ்கோ துடிப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ரியல் மட்ரிட்டை எதிர்த்து எஸ்பன்ஜோல் இந்த ஆட்டத்தில் மோதியது. ஆட்டத்தின் 30ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட்டின் முதல் கோலைப் பதிவுசெய்தார் இஸ்கோ. 1:0 என்று மட்ரிட்டின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியின் 71ஆவது நிமிடத்தில் இஸ்கோ, மட்ரிட்டினதும் தனதும் இரண்டாவது கோலைப் பதிவு செய்தார். முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட் அணி. (ம)



# யாழ். பல்கலை மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஒக். 3

இலங்கை கிரிக்கெட் சபை நடத்திய மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரொன்றில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் கிண்ணம் வென்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக துவாரகசீலன் 21 ஓட்டங்களையும், ருக்ஸ்மன் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜெரிக் 4 இலக்குகளையும், மயூரன், கிருபா, அலன்ராஜ் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 40.4 பந்துப் பரிமாற்றங்களில் 131 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 38 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் துவாரகசீலன் 4 இலக்குகளையும், லோகாதீஸ்வர் 3 இலக்குகளையும, சங்கா 2 இலக்குகளையும், நிதர்சன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். (ம-422)

## யங்ஹென்றிஸை வீழ்த்தியது பள்ளிமுனை சென். லூட்சியா

யாழ்ப்பாணம், ஒக். 3

பிரான்ஸ் தமிழர் கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில், மன்னார் பள்ளிமுனை சென். லூட்சியா விளையாட்டுக் கழக அணி மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மன்னார் பள்ளிமுனை சென். லூட்சியா விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் சென். லூட்சியா அணி வெற்றிபெற்றது. (ம-23)



### தேசியமட்ட எறிபந்தாட்டத்தில் நடுவராகத் தமிழர்

யாழ்ப்பாணம், ஒக். 3

இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான எறிபந்தாட்டத்தில் முதன் முறையாக தமிழர் ஒருவர் நடுவராகக் கடமையாற்றவுள்ளார். அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் க.கனகராஜாவே அவ்வாறு நடுவர் கடமையில் ஈடுபடுகிறார். இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களிற்கான எறிபந்தாட்டம் இன்று முதல் தொடர்ந்து நான்கு நாள்கள் மொரட்டுவ வேல்ஸ் குமார வித்தியாலய மைதானத்தில் நடைபெறுகின்றது. பாடசாலைகளுக்கு இடையிலான எறிபந்தாட்டத்தில் தேசியமட்டத்தில் இதுவரை காலமும் வடக்கு மாகாணத்தில் இருந்து எவரும் நடுவராகக் கடமையாற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-422)

# நீக்கிலஸ் அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஒக். 3

பிரான்ஸ் தமிழர் கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில், நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணி சம்பியனானது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதியது.

ஆட்டத்தின் 7ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணியின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் பகிசன். 17ஆவது நிமிடத்தில் நீக்கிலஸின் கோலைப் பதிவுசெய்து பதிலடிகொடுத்தார் சுரேஸ். அவர் 20ஆவது நிமிடத்திலும் ஒரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:1 என்று ஆதிக்கம் செலுத்தியது நீக்கிலஸ் அணி. இரண்டாவது பாதியின் 7 ஆவது நிமிடத்தில் ரதீஸ், 24ஆவது நிமிடத்தில் அமிலன் கோல்களைப் பதிவு செய்ய முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் கிண்ணம் வென்றது நீக்கிலஸ். (ம-23)



அணியில் உள்ள அனைத்து வீரர்களும் எப்போதுமே நல்ல நிலையில் உள்ளனர். இதனால் 11 பேரைத் தெரிவு செய்வதில் தலைவர் என்ற முறையில் எனக்கு எப்போதுமே தலைவலியாக இருக்கும். இது சுகமான தலைவலி

## பாண்டியா இந்தியாவின் சொத்து

### என்கிறார் கோக்லி

"சகலதுறை வீரரான பாண்டியா, இந்திய அணியின் சொத்து" என்று புகழாரம் சூட்டியுள்ளார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.

ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்து ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. 4:1 என்ற அடிப்படையில் இந்திய அணி இந்தத் தொடரைக் கைப்பற்றியது. இந்தத் தொடரில் பாண்டியா சகல துறைகளிலும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார். தொடராட்ட நாயகனாகவும் அவரே தெரிவானார். இதனை அடுத்து ஐந்தாவது ஆட்டம் முடிவடைந்த பின்னர் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திபிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

"இந்தத் தொடரில் இந்திய வீரர்களின் ஒட்டுமொத்தச் செயல்பாடு திருப்தி அளிக்கிறது. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரை வென்றது உண்மையிலேயே மிகவும் சிறப்பானதாகக் கருதுகிறேன். அனைத்துத் துறைகளிலும் நன்றாக செயல்பட்டோம். புவனேஷ்வர்குமார், பும்ராவின் பந்துவீச்சு இந்த தொடரில் மிகவும் அபாரமாக இருந்தது. முகமது சமியும், உமேஷ் யாதவும் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்பைச் சரியாக பயன்படுத்திக் கொண்டனர். இந்தத் தொடரில் இந்திய அணியின் மிகப்பெரிய சொத்தாக பாண்டியா திகழ்ந்தார்.

அணியில் உள்ள அனைத்து வீரர்களும் எப்போதுமே நல்ல நிலையில் உள்ளனர். இதனால் 11 பேரைத் தெரிவு செய்வதில் தலைவர் என்ற முறையில் எனக்கு எப்போதுமே தலைவலியாக இருக்கும். இது சுகமான தலைவலி" என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)





# இலங்கை அணி திரிலான வெற்றி

பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி திரில் வெற்றிபெற்றது. கேரத்தின் கட்டுக்கோப்பான பந்துவீச்சு இலங்கையின் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

அபுதாபியில் கடந்த 28ஆம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பமாகியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 419 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக சந்திமல் 155 ஓட்டங்களையும், கருணாரத்ன 93 ஓட்டங்களையும், டிக்வெல்ல 83 ஓட்டங்களையும் சேர்த்தனர். பந்துவீச்சில் அப்பாஸ், யாசிர் ஷா இருவரும் தலா 3 இலக்குகளையும், ஹசன் அலி 2 இலக்குகளையும், சொகைல் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 422 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக அசார் அலி 85 ஓட்டங்களையும், சொகைல் 76 ஓட்டங்களையும், மசூட் 59 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கேரத் 5 இலக்குகளையும், லக்மல், பெர்னான்டோ இருவரும் தலா 2 இலக்குகளையும், பெரேரா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி நேற்றுமுன்தின நான்காம் நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அந்த அணி நேற்றுத் தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடி 138 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. டிக்வெல்ல ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்களைப் பெற்றார். சில்வா 25 ஓட்டங்களையும், குசல் மெண்டிஸ் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் யாசிர் 5 இலக்குகளையும், அப்பாஸ் 2 இலக்குகளையும், ஹசன் அலி, சபிக், ஹரிஸ் சொகைல் மூவரும் தலா ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.



முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றமை கைகொடுக்க பாகிஸ்தான் அணிக்கு 136 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. ஆரம்பம் முதல் இலங்கை அணி சிறந்த பந்துவீச்சை வெளிப்படுத்தியது. முன்வரிசை வீரர்களான மசூட் 7 ஓட்டங்களுடனும், அஸ்லாம் 2 ஓட்டங்களுடனும், அசார் அலி ஓட்டமெதனையும் பெறாமலும் ஆட்டமிழந்து ஏமாற்றினர். கேரத்தின் சுழலில் பாகிஸ்தான் தொடர்ந்து பின்னடைவைச் சந்தித்தது. சொகைல் பெற்ற 34 ஓட்டங்களே அதிகபட்சம். ஹசன் அலி, ஆமிர், அப்பாஸ் என்று பின்வரிசையையும் தகர்த்தார் கேரத். 114 ஓட்டங்களுடன் பாகிஸ்தானின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. 21 ஓட்டங்களால் வெற்றி பெற்றது இலங்கை அணி. (ம)

## ரங்கன கேரத் 400

பன்னாட்டு டெஸ்ட் அரங்கில் 400 இலக்குகள் என்ற அடைவை நிலைநாட்டினார் இலங்கை அணியின் சுழல்பந்து வீச்சாளர் கேரத்.

பாகிஸ்தான் அணிக்கு எதிராக நேற்று முடிவுக்கு வந்த ஆட்டத்தில் கேரத் மிகச் சிறந்த பந்துவீச்சுப் பெறுதியை வெளிப்படுத்தினார். முதல் இன்னிங்ஸில் 5 இலக்குகளைக் கைப்பற்றிய கேரத், இரண்டாவது இன்னிங்ஸில் 6 இலக்குகளைக் கைப்பற்றி இலங்கையின் வெற்றிக்கு காத்திரமான பங்களிப்பை வழங்கினார். இரண்டாவது இன்னிங்ஸில் பாகிஸ்தானின் கடைசி இலக்காக அப்பாஸை வீழ்த்தியதன் மூலம் தனது 400ஆவது டெஸ்ட் இலக்கை கேரத் எட்டினார். (ம)



## லொஸ் பல்மாஸை தோற்கடித்துள்ளது பார்சிலோனா அணி

லா லிகா தொடரில், நேற்று அதிகாலை 3 மணியளவில் (இலங்கை நேரப்படி) நடைபெற்ற ஆட்டத்தில் பார்சிலோனா அணி வெற்றிபெற்றது.

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில், நேற்று அதிகாலை இடம்பெற்ற ஆட்டமொன்றில் ரியல் மட்ரிட் அணியை எதிர்த்து லொஸ் பல்மாஸ் அணி மோதியது. இரண்டு அணிகளும் மிகச் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. 49ஆவது நிமிடத்தில் சேர்ஜியோ பார்சிலோனாவின் முதல் கோலைப் பதிவுசெய்தார். 70ஆவது மற்றும் 77ஆவது நிமிடங்களில் மெஸ்ஸி அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது. (ம)



## ரி-20 தொடருக்கான இந்திய அணி அறிவிப்பு

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ரி-20 தொடருக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. நெக்ரா, டினேஸ் கார்திக் ஆகியோருக்கு அணியில் மீண்டும் இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடரை 4:1 என்ற அடிப்படையில் இந்திய அணி கைப்பற்றியது. இந்த நிலையில் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகிறது. இந்தத் தொடருக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. வேகப்பந்து வீச்சாளர் நெக்ரா, துடுப்பாட்ட வீரரும் இலக்குக் காப்பாளருமான டினேஸ் கார்திக் இருவரும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

*இந்திய அணி விவரம்*

விராட் கோக்லி (தலைவர்), ரோகித் சர்மா, தவான், கே.எல்.ராகுல், மணிஷ் பாண்டே, கேதர் ஜாதவ், டினேஸ் கார்த்திக், டோனி, பாண்டியா, குல்தீப் யாதவ், சாகல், பும்ரா, புவனேஷ்வர் குமார், நெக்ரா, அக்சர் பட்டேல்.

*ஆஸ்திரேலிய அணி*

சிமித் (தலைவர்), வோர்ணர், ஜேசன், கிறிஸ்ரியன், கட்டர் நைல், கம்மின்ஸ், பின்ஞ், ஹெட், ஹென்றிக்ஸ், மக்ஸ்வெல், வெயின், ரிச்சட்டசன், சாம்பா. (ம)



# தென்னாபிரிக்க அணி மிகச்சிறப்பான வெற்றி

பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் 333 ஓட்டங்களால் இமாலய வெற்றிபெற்றது தென்னாபிரிக்க அணி.

பங்களாதேஷ் அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் கடந்த 28ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 3 இலக்குகளை இழந்து 496 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்துவதென அறிவித்தது. அதிகபட்சமாக எல்கர் 199 ஓட்டங்களையும், அம்லா 137 ஓட்டங்களையும், மார்க்ரம் 97 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 320 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ஹக்கியூ 77 ஓட்டங்களையும், மகமதுல்லா 66 ஓட்டங்களையும், ரகிம் 44 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மகாராஜ் 3 இலக்குகளையும், மோர்கல், ரபாடா இருவரும் தலா 2 இலக்குகளையும், ஒலிவர், பிளுக்வையோ இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்கா 6 இலக்குகளை இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. அதிகபட்சமாக பிளாசிஸ் 81 ஓட்டங்களையும், பவுமா 71 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஹக்கியூ 3 இலக்குகளையும், ரகுமான் 2 இலக்குகளையும், இஸ்லாம் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

424 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி நேற்று முன்தின நான்காம் நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ரகிம் 16 ஓட்டங்களுடனும், மகமதுல்லா ஓட்டமெதனையும் பெறாத நிலையிலும் இறுதி நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 9 ஓட்டங்களுடன் மகமதுல்லாவை வீழ்த்தினார் ரபாடா. டாஸ், நான்கு ஓட்டங்களுடனும் பவிலியனுக்குத் திரும்பினார். இலக்குச் சரிவு தொடர 90 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 333 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது பங்களாதேஷ்.

பந்துவீச்சில் மகாராஜ் 4 இலக்குகளையும், ரபாடா 3 இலக்குகளையும், மோர்கல் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக எல்கர் தெரிவானார்.

(ம)



தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர்; "இந்தத் தொடரில் தென்னாபிரிக்க அணிக்கு நாம் கடும் சவாலை வழங்குவோம். ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, இலங்கை ஆகியவற்றின் வரிசையில் தென்னாபிரிக்க அணியையும் வீழ்த்துவதற்கு விரும்புகிறோம்'' என்று பங்களாதேஷ் அணியின் தலைவர் ரகிம் தெரிவித்திருந்தார்.

# தேசிய கபடித் தொடர் இன்று

பாடசாலை களுக்கு இடையிலான தேசியமட்ட கபடித் தொடர் இன்று ஆரம்ப மாகிறது. 17 வயது. மொறட்டுவ மகா வித்தியாலயத்தில் இந்த ஆட்டங்கள் அனைத்தும் நடைபெறவுள்ளன.

வடக்கு மாகாணத்திலிருந்து 17 வயதுப்பிரிவு ஆண்கள் பிரிவில் கற்கோவளம் றோமன் கத்தோலிக்க மகா வித்தியலாயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி கனகாம்பிகை மகா வித்தியால யம் ஆகியனவும், 17 வய துப்பிரிவு பெண்கள் பிரி வில்பண்டத்தரிப்புஜசிந்தா, நெல்லியடி மத்திய கல்லூரி, கிளிநொச்சி சிவநகர் அ.த.க. பாட சாலை ஆகியனவும் 20 வயதுப் பிரிவு ஆண்கள் பிரிவில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி, கிளிநொச்சி இந்துக் கல் லூரி, பருத் தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆகியனவும் 20 வயதுப் பிரிவு பெண்கள் பரிவில் நெல்லியடி மத்திய கல்லூரி, குருநகர் சென். ஜேம்ஸ் மகளிர் வித்தி யாலயம் ஆகிய அணிகளும் பங்குபற்றுகின்றன.

(ம-23)

**வேலைவாய்ப்பு**

நாடளாவிய ரீதியில் பிரபலமடைந்து வரும் எமது Teleseen நிறுவனமானது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிய கிளைகளை ஆரம்பிக்கவுள்ளதால் கீழ்காணும் பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

**10, O/L விற்பனை பிரதிநிதி, மேற்பார்வையாளர்**
**A/L மற்றும் மேற்தகைமையுள்ளோர்**
**உதவியாளர், முகாமையாளர், அலுவலக உத்தியோகஸ்தர்**

**முன்னனுபவம் அற்றோருக்கு பயிற்சியின் மூலம் வேலை வாய்ப்பு வழங்கப்படும்.**

தொடர்பு - 077 062 1631, 077 2986 763, 077 499 3943

**ஓர் அரிய வாய்ப்பு**

முந்தும் 20 நபர்களிற்கான வேலைவாய்ப்பு .DYNAMIC HOLDNGS நிறுவனத்திற்கு கிளிநொச்சி .முல்லைதீவு.வவுனியா .யாழ்ப்பாணம்.மன்னார், ஆகிய பகுதிகளில் இருந்து .O\L .A\L படித்த இளைஞர் யுவதிகளிற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

*6 மாதகால பயிற்சி வழங்கப்படும்.(அவர்களின் திறமைக்கு ஏற்ப வருமானம் வழங்கப்படும்.)

*பயிற்சியின் போது 15000 - 20,000

பயிற்சியின் பின் 45 000 - 60,000 *நிரந்தர வேலைவாய்ப்பு

**குறிப்பு : வயதெல்லை 18 - 30, தங்குமிட வசதி உண்டு**

**021 222 5029, 077 157 1699**

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை A/L எழுதியோர், இளைஞர் யுவதிகள், வீட்டுப்பெண்கள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!

3 மாத சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 07.10.2017

1. காலை 08.00-10.00 3. பி.ப 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00

வாரநாள் வகுப்புகள் (திங்கள், புதன்) 04.10.2017
1.காலை 08-10 2.காலை 10-12

ஒவ்வொரு பிரிவிலும் 20 பேர் மட்டுமே

SAAMSON
Experts in English Training
403, வெலிங்டன் சந்தி யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

## மரண அறிவித்தல்

தோற்றம்
1946 . 06 . 27



மறைவு
2017 . 10 . 02

### திருமதி நாகேஸ்வரி நடராசா (பத்தர்)

சாவகச்சேரி சங்கத்தானையை பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடியை வசிப்பிடமாகவும் தற்போது வவுனியா தோணிக்கல் மேட்டுத்தெரு வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி நடராசா (02.10.2017) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் நடராசா வின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான இரத்தினம் சரஸ்வதி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் கருணானந்தராசா (பத்தர் வவுனியா), கிருபாகரன் (நியூசிலாந்து) ,பிரபாகரன் (ஆஸ்திரேலியா), ராதிகா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயும் அனித்தா, ராஜினி, சர்மிளா ,ஜீவராஜன் ஆகியோரின் மாமியும் பிரியதர்ஷா, தஜனிகா, விஷாங்கி, கனுஸ்காந், ரேணுகாந், ஜெனிற்றா, டானியல், டேவிட் ,சுபதருண், ஜெயவருண், ஹசோனா, லக்சிகா, கர்ணிகா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், அன்னலட்சுமி, முத்துக்குமார் மற்றும் தவமணி, இந்திராணி, யோகராணி ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (04.10.2017) புதன் கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுபூதவுடல்தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.71, லக் ஷபனா வீதி,**
**மேட்டுத்தெரு தேணிக்கல், வவுனியா.**
**077 6056 572, 024 2050612**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**சமையல் ஆள்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள Hotel ஒன்றுக்கு Hotel சமையல் முன் அனுபவம் உள்ள (Cook) சமையல் ஆள் தேவை. (தங்குமிட வசதியும் உணவும் உண்டு)

**தொடர்புகளிற்கு 076 9819241**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.